# தமிழரசு

1.10.1981 50 காசு



திருவள்ளுவர் ஆண்டு 2012
துன்மதி - புரட்டாசி 15






# தமிழ்ப் பல்கலைக் கழக தொடக்க விழா

தஞ்சாவூர்




15-9-1981—17-9-1981





# அண்ணலின் மொழிகள்!

தீண்டத் தகாதவர்களென ஒரு வகுப்பைத் தனியாகப் பிரித்து வைத்திருக்கிறோம். அது இந்து மதத்திற்கே ஒரு தனிப் பெரும் அவமானச் சின்னமாய் இருந்து வருகிறது!

* * *

தீண்டாமை என்பது ஒரு கொடும் பாவமாகும். கொடூரமான ஒரு குற்றமாகும். தீண்டாமை என்கிற இந்தப் பாம்பை உரிய காலத்தில் கொல்லாவிட்டால் அது இந்து மதத்தையே தின்று விழுங்கிவிடும்.

* * *

தீண்டாமை இன்னும் உயிர் வாழ்ந்தால் இந்து மதம் இறந்து போகும்.

* * *

தீண்டாமை என்பது இந்து மதத்தின் ஓர் அம்சமாக இருந்தால் என்னை இந்துவெனச் சொல்லிக் கொள்ள மறுத்திருப்பேன்.

* * *

தீண்டாமை என்கிற அதி கோரமான கொள்கையை நிலை நிறுத்துவதற்காகச் செத்துப்போன புராதன சாஸ்திரங்களையும், பழக்க வழக்கங்களையும் புதை குழியிலிருந்து இழுத்து வந்து காட்டுகிறார்கள்.

* * *

சாஸ்திரிகள் அனைவருமே திரண்டு என்னை எதிர்த்தாலும், தீண்டாமை, இந்து மத அனுஷ்டானத்தில் சேர்ந்தது என்ற அவர்கள் சொல்வது முற்றிலும் தவறு எனக் கோபுர உச்சியின் மீது ஏறி நின்று பகிரங்கமாகப் பறை சாற்றவும் தயங்கமாட்டேன்.

* * *

வேதங்கள், உபநிஷத்துகள், பகவத்கீதை, ஸ்மிருதி போன்ற சாஸ்திரங்கள் முதலானவையெல்லாம் தீண்டாமையை ஆதரித்து அதற்குத் தெய்வீக ஆதாரத்தைக் காட்டித் தெளிவாகவற்புறுத்துவோமேயானால் என்னை இந்து மதத்தில் பிடித்து வைத்துக் கொள்ள இந்தப் புவியில் எந்தச் சக்தியாலும் முடியாது. அழகிய ஆப்பிள் பழத்தை எப்படித் தூரத் தூக்கியெறிந்து விடுவானோ அதுபோல நான் இந்து என்பதையும் தூரத் தூக்கி எறிந்து விடுவேன்.

தீண்டாமை என்பது இந்து மதத்தின் ஓர் அம்சமல்ல; அது இந்து மதத்தின் ஒரு களங்கம் ஆகும்!

* * *

தீண்டத் தகாதவர்களையும், அரைக்காட்டு மிராண்டிகளெனச் சொல்லப்படுகிறவர்களையும் பார்த்து வருந்தி, அவர்களுக்குக் காலங் கடந்தேனும் நியாயம் வழங்கி நாம் பிராயச்சித்தம் தேடாவிட்டால், நாம் இழைக்கும் கேடுகளையெல்லாம் அவர்கள் எதிர்க்கத் தொடங்கி விடுவார்கள்.



தீண்டாமை என்னும் பாவத்திலிருந்து இந்து மதத்தைப் புனிதப்படுத்த வேண்டும். இனம் கண்டுகொள்ள முடியாத வண்ணம் இந்து மதத்தை உருக்குலைத்து விகாரப் படுத்தியிருக்கும் இந்தத் தீண்டாமை என்னும் பேயை விரட்ட வேண்டும்.

* * *

உயர்ஜாதி இந்துக்களே அரிஜனங்களுக்கு வெகுகாலமாகக் கடன் பட்டிருக்கிறார்கள். அவர்களே இப்போது அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

* * *

எங்கும் நிறைந்தவரான இறைவனின் திருக்கோயிலிலே எவருக்கும் இடமுண்டு. அசுத்தமானவர்கள் கூட இறைவன் சந்நிதியில் தூய்மை அடைய முடியும் என்றால் அரிஜனங்கள் நுழைவதால் மட்டும் எப்படி அசுத்தம் ஏற்பட முடியும்?


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2012

துன்மதி — புரட்டாசி 15

மலர் 12 இதழ் 7

1—10—1981



ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் முதல் வாரத்தை, வனவிலங்கு வாரமாக நாம் கொண்டாடி வருகிறோம். வனவிலங்குகளையும், பறவையினங்களையும், கடல்வாழ் இனங்களையும் அதனதன் இயற்கைச் சூழ்நிலையில் பேணிக்காப்பாற்ற வேண்டும் என்றஉணர்வை, பொதுமக்களிடம் ஏற்படுத்துவது இதன் முக்கிய நோக்கம்.

நமது தேசிய விலங்காகப் புலியையும், தேசியப் பறவையாக மயிலையும் தேர்ந்தெடுத்து, விலங்குகள் பராமரிப்பில் நமக்குள்ள அன்பையும், ஆர்வத்தையும் உலகுக்குக் காட்டியுள்ளோம். நமது நாட்டைப் பொறுத்தவரை வனவிலங்குகள் அனைத்தும் தேசியச் சொத்தாகும்.

வன விலங்குகள் இயற்கையான சூழ்நிலையில் வாழவும், பொது மக்கள் கண்டு களிக்கவும் தமிழக அரசு வன விலங்கு சரணாலயங்களை அமைத்துப் பாதுகாத்து வருகிறது. பறவையினம், விலங்குகள் போன்றவற்றைப் பாதுகாப்பதோடு வெளிநாட்டுச்





# வன விலங்குகளைக் காப்போம்

– மாண்புமிகு முதல்வர்

சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதும், அதன் மூலம் அன்னியச் செலாவணியைப் பெறுவதும் நமது நோக்கங்களில் ஒன்றாகும்.

வனவிலங்கு வார விழா கொண்டாடப் படும் இந்த நேரத்தில் வனவிலங்குகளுக்கு எவ்விதத் தீங்கும் நேராவண்ணம் பார்த்துக் கொள்ள நாம் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். இயற்கையான சூழ்நிலையில் தன்னிச்சையாகத் திரியும் வனவிலங்குகள், மனிதனின் கண்களுக்கு விருந்தாக அமைய வேண்டும். விலங்குகளை வேட்டையாடும் ஒரு சில தீயவர்களால் ஒரு சில அபூர்வ விலங்குகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டது.

மக்கள் தொகைப் பெருக்கம், அதன் விளைவால் மனிதனால் ஆட்கொள்ளப்படும் நிலங்கள், அழிவுக்குப் பயன்படுத்தும் நவீன ஆயுதங்கள், மற்றும் இதுபோன்ற காரணங் களால், வனவிலங்குகளின் இயல்பான வாழ்க்கை மிகவும் பாதித்துள்ளது. மனிதன் ஒரு சமூக விலங்கே என்று சொல்லப்பட்டா லும், மற்ற உயிரினங்களின் தன்மையை நாம் பெரும்பாலும் உணராமல்தான் இருக்கிறோம். மனித வர்க்கம் வரம்பில்லாது பெருகி வனப் பகுதியைப் படிப்படியாக ஆக்கிரமிப்பதால் வனவிலங்குகளை அரும் பொருட்காட்சி சாலையில் மட்டும் பார்க்க வேண்டிய நிலை



வந்துவிடக்கூடும். ஆதலால் பறவைகளை யும், விலங்குகளையும் காப்பதன் மூலம் நாம் வருங்காலச் சந்ததியினருக்கு மகத்தான தொண்டு புரிந்தவர்கள் ஆகிறோம்.

பறவையினம் மற்றும் விலங்கினத்தின் இன்றியமையாமையை உணர்ந்துள்ள நாம் ஒவ்வொருவரும் இவைகளைப் பாதுகாக்க இந்நாளில் உறுதிமொழி எடுத்துக் கொண்டு அதன்படி செயலாற்றுவது நம்முடைய கடமையாகும்.






# தமிழகத்தில் வறட்சி நிவாரணப் பணிகள்

## மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம்

இயற்கையின் கொடுமையால் மனித சமுதாயத்திற்கு விளைகின்ற இடர்ப்பாடுகள் ஏராளம். புயல், வெள்ளம், வறட்சி, நில நடுக்கம், கடல் கொந்தளிப்பு இப்படி எத்தனையோ நிகழ்கின்றன, இயற்கையின் சீற்றத்தால். கடந்த ஆண்டு வழக்கமாகப் பெய்யும் அளவுக்கு பருவ மழை பெய்யவில்லை. இதனால் தமிழ் நாடு வறட்சிக்கு பலியானது. பல மாவட்டங்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டன. சில மாவட்டங்களில் சில பகுதிகளில் வறட்சி நிலவியது. சென்னை, கோவை, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மற்ற 13 மாவட்டங்களிலும் சுமாராக 9 ஆயிரம் கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் துயரத்தைத் துடைப்பதற்கு தமிழ்நாடு அரசு போர்க் கால அடிப்படையில் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு

நிலவரி;
உள்ளூர் வரி;
தண்ணீர்த் தீர்வை;
தனித் தண்ணீர்த் தீர்வை;
பணப்பயிர்த் தீர்வை

தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால் அரசுக்கு ரூபாய் 8 கோடி இழப்பு ஏற்படும். கிராமங்களிலும், நகராட்சிகளிலும் குடி தண்ணீர்த் தட்டுப்பாடு ஒரு பெரும்பிரச்சினையாக எழுந்தது. இச்சமயத்தில் எனக்கு நினைவுக்கு வருவது, ''குடிதண்ணீருக்காக மக்கள் கண்ணீர் வடிக்கும் நிலையைக் களைவதே எனது அரசின் முதல் பணி'' என்று நமது முதல்வர் அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். அதற்கிணங்க தமிழ்நாடு அரசு குடி நீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு முனைப்புடன் திட்டங்களைத்தயாரித்துச் செயல்படுத்தியது.

புதிதாக சுமார் ஏழாயிரம் குழாய்க் கிணறுகள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஏற்கனவே உள்ள கிணறுகளை ஆழப்படுத்தும் பணிமேற்கொள்ளப்பட்டது.

ஏரிகளின் உட்பகுதியில் கிணறுகள் அமைத்து அதன் மூலம் அருகாமையிலுள்ள கிராமங்களுக்கு தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. கால் நடைகளுக்காக ஏரிகளிலும், குளங்களிலும் திறந்த கிணறுகளை வெட்டும் பணி நடந்து கொண்டு வருகிறது.

தண்ணீர் கிடைக்காத பகுதிகளுக்கு லாரிகளில், வண்டிகளில் டிராக்டர்களில், ஆட்கள் மூலமாகக் கொண்டு செல்ல அரசு உத்தரவு பிறப்பித்தது. குடிநீர்ப் பணிக்காக அரசு ரூபாய் 18 கோடியே எழுபத்திரண்டு இலட்

சம் ஒதுக்கீடு செய்தது.

விவசாயத்தையே நம்பி வாழும் மக்கள் வறட்சியின் கொடுமையால் வேலை இழந்து, தாங்க முடியாத கொடுமைக்கு ஆளானார்கள். அவர்களைக்காப்பாற்ற அரசு வேலை வாய்ப்பு நிவாரணப் பணியைத் தொடங்கிற்று. நீர்ப்பாசன ஏரிகளையும், குளங்களையும், குட்டைகளையும் ஆழப்படுத்தவும், கரைகள் அமைக்கவும், மதகுகள் கட்டவும், அரசு ரூபாய் 18 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது.

ஏற்கனவே உள்ள சாலைகளை பழுது பார்க்கவும் புதிய சாலைகள் அமைக்கவும் ரூபாய் 6½ கோடி நிதி ஒதுக்கீடு செய்தது.

ஊருணிகள், குட்டைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து மூன்று இலட்சம் செலவு செய்ய அனுமதிக்கப்பட்டது.

மண் பாதுகாப்புக்கும், காடுகள் அபிவிருத்திக்கும் ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

மொத்தமாக வேலை வாய்ப்புப் பணிகளுக்காக ரூபாய் இருபத்தேழு கோடியே நான்கு இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

இதனால் பெரிய ஏரிகளும், சிறிய ஏரிகளும் மொத்தமாக சுமார் பதினாயிரம் ஏரிகள் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

புதிய சாலைகள் அமைக்கவும், சாலைகளைப் பழுது பார்க்கும் பணிகளை மேற்கொண்டதன் மூலமாக சுமார் 6 ஆயிரம் சாலைகள் அமைக்கவும் வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

4500 ஊருணிகளை ஆழப்படுத்த, பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

வறட்சிக் கொடுமைகளைச் சமாளிக்கத் தேவைப்படும் நிதி மாநில அரசின் நிதிநிலைமைச் சக்திக்கு அப்பாற்பட்டது.

ஆகையால், ரூபாய் 160 கோடி அளவில் விரிவான திட்டத்தைத் தயாரித்து நிதி உதவி கோரி மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மத்திய அரசு உடனடியாக ஓர் ஆய்வுக் குழுவை அனுப்பிற்று.

அந்த ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் ரூபாய் 48 கோடியே 90 இலட்சம், வறட்சி நிவாரணப் பணிக்கு நிதியாக ஒதுக்கலாம் என மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.

வறட்சி நிவாரணப் பணிகளை நிறைவேற்றுவதில் சிறு தவறு கூட நிகழக் கூடாது; நன்மைகள் அனைத்தும் மக்களுக்கே போய்ச் சேர வேண்டும் என்பது தமிழக அரசின் இலட்சியமாகும். மாண்புமிகு முதல்வர் இதை வற்புறுத்தி வந்துள்ளார்கள். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவும், பொது மக்களின் ஒத்துழைப்பை நிவாரணத் திட்டங்களுக்கு பயன்படுத்தவும், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள்கொண்ட மாவட்டக் குழுக்களும், வட்டக் குழுக்களும் அமைக்கப்பட்டன. குழு உறுப்பினரால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு, உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக எங்கேயாவது குறைபாடுகள் தெரிவிக்கப்படுமாயின் அதனை அவசர அடிப்படையில் விசாரித்து, நடவடிக்கை எடுப்பதற்கு அரசு உன்னிப்புடன் கவனம் செலுத்தி வருகிறது.

குழுக்களை அமைத்து, அதன் கருத்துக்களைக் கேட்டு, உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து வருவது, தமிழக அரசின் வரலாற்றிலேயே இது தான் முதல் தடவை.

கால்நடைகள் தீவனம் இல்லாது இறந்தன. அதைக் காப்பாற்ற, வைக்கோல் வாங்கி, வாங்கிய வைக்கோலை விற்பதில் ஏற்படும் நஷ்டத்தை அரசு ஏற்றுக் கொள்வதற்காக ரூ. 50 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

கால்நடைகளுக்கு நோய் பரவாமல் தடுப்பதற்கு, தடுப்பு ஊசிகள் போடப்பட்டு வருகின்றன. வியாதியால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு கால்நடை மருத்துவ மனை மூலமாக சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதற்காக அரசு ரூ. 65 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

ஏழை விவசாயிகளுக்கு பூச்சி மருந்தும் உரமும் சலுகை விலையில் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அது போலவே வேர்க்கடலை, நெல், எண்ணெய் வித்துக்கள் போன்ற விதைகள் சலுகை விலையில் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

வறண்டு போன பாசனக் கிணறுகளை ஆழப்படுத்த, கிணறு ஒன்றுக்கு ரூபாய் 2500- வீதம் கொடுக்க அரசு நடவடிக்கை



எடுக்கப்பட்டது. இத் திட்டத்திற்காக அரசு ரூபாய் 5 கோடி ஒதுக்கியுள்ளது.

வறட்சி நிவாரணப் பணிகள் சிறப்பாகவும், விரைவாகவும் நடைபெற வேண்டும் என்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னையிலும் மதுரையிலும் கூட்டினார்கள்.

முதல்வர் அவர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பல மாவட்டங்களுக்கு நேரிடையாக சுற்றுப் பயணம் செய்தார்கள் .மக்களை நேரில் சந்தித்தார்கள்.

நிவாரணப் பணிகளை நேரில் பார்த்தார்கள். நிருவாக இயந்திரம் துரிதமாகவும், செம்மையாகவும், செயல்பட, தேவையான அறிவுரைகள் வழங்கினார்கள்.

மத்திய அரசு ஒப்புதல் அளித்த ரூபாய் 48 கோடியே 90 இலட்சம். மாநில அரசு தக்காவிக் கடனையும் சேர்த்து அனுமதி அளித்தது ரூபாய் 75 கோடியே 2 இலட்சம் ஆகும்.

1974-75ல் வறட்சி ஏற்பட்ட போது 11 மாதங்களில் செலவு செய்த மொத்தத் தொகை ரூபாய் சுமார் 24 கோடியாகும்.

தற்போது 12.9.'81 வரையில் செலவான தொகை சுமாராக ரூபாய் 45 கோடி ஆகும்.

வறட்சிப் பணிகள் தீவிரமாகவும், விரைவாகவும் நடைபெறுவதற்காகவும் சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்குக் கூடுதலான அலுவலர்களை அரசு நியமித்தது; அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டன.

மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

வறட்சி நிவாரணப்பணியில் ஈடுபட்டு இருக்கிற அலுவலர்கள் இது சம்பந்தமாக அவசர நடவடிக்கை எடுப்பதற்கு காவல் துறை தொலை பேசியையும், ஒயர்லசையும் பயன்படுத்த அரசு உத்தரவு பிறப்பித்தது.

வறட்சி நிவாரணப் பணி திறமையாக, முறையாக நடைபெற்று வருவதைப் பற்றி மத்திய அமைச்சர் மாண்புமிகு ஆர்.வி. சுவாமிநாதன் அவர்களும், மத்திய அரசால் அனுப்பப்பட்ட குழுவும் பாராட்டியுள்ளார்கள்.

வறட்சி நிவாரணப் பணி மிகத் திறமையாக, உரிய முறைப்படி, நேர்மையாக, ஒழுங்காக நடைபெற்று வருகிறது என்று எல்லாத் தரப்பு மக்களும் தெரிவிப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள குழுக்களின் உறுப்பினர்களாகப் பங்கேற்று தங்கள் அறிவுரைகளையும், ஒத்துழைப்பையும் இந்த அரசுக்கு நல்கிய அனைவருக்கும் நான் நன்றி தெரிவிப்பதோடு, இப்பணிகளுக்கு ஒத்துழைப்புக் கொடுத்த அனைத்து மக்களுக்கும் நிதி உதவி அளிக்க முன் வந்துள்ள மத்திய அரசுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

[வறட்சி நிவாரணப்பணிகள் எனும் தலைப்பில் 20.9.81 அன்று வானொலியில் ஆற்றிய உரை.]



# தமிழக பள்ளிக் கல்வித்துறையின் சாதனைகள்

| | | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவ மாணவியர் (இலட்சத்தில்) | ஆசிரியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | தொடக்க மற்றும் உயர்தொடக்கப் பள்ளிகள் | 33,384 | 69.12 | 1,82,304 |
| 2. | உயர்நிலைப் பள்ளிகள் | 2,069 | 7.59 | 32,427 |
| 3. | மேல்நிலைப் பள்ளிகள் | 1,300 | 14.57 | 53,843 |
| | மேல்நிலைக் கல்வி (+2) பயிலும் மாணவ மாணவியர் : | | 2.58 | |

அதில் தொழிலோடு கூடிய கல்வி பயில்பவர்கள் : 57,093 (மாணவியர்: 17,607)

கல்விக்கான அரசின் நிதி ஒதுக்கீடு (1981-82) ரூ. 249 கோடி

அதில் பள்ளிக் கல்விக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 204.79 கோடி

மதிய உணவுத் திட்டத்தால் பயனடையும் மாணவ மாணவியர் (நாள் ஒன்றுக்கு) ரூ. 20.25 இலட்சம்.

# பகுத்தறிவுத் தந்தை

# பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூண்




பின்பக்க அட்டை செய்தி

பெரியார் நூற்றாண்டு விழா வினையொட்டி, தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட பெரியார் நூற்றாண்டு விழாக்குழுவின் பரிந்துரைகளில் முக்கியமான நான்கு பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

பெரியார் அவர்களின் முழு வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றினைத் தயாரித்து வெளியிடுவது,

பெரியார் பொன்மொழிகளைத் தொகுத்து நூலாக வெளியிடுவது,

சிறுவர்களுக்காக, பெரியார் வரலாற்று வரைபட நூல் ஒன்றினை வெளியிடுவது,

பெரியார் பொன்மொழிகளைக் கொண்ட நினைவுத் தூண்களை மாவட்டத் தலைநகர் தோறும் நிறுவுதல்.

ஆகிய நான்கு பரிந்துரைகளில் பெரியார் பொன்மொழிகளைக் கொண்ட 'பெரியார் புரட்சி மொழிகள்' என்னும் நூல், சென்னையில் பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவில் 20.9.1979-ல் தமிழ்நாட்டு அரசால் வெளியிடப்பட்டது. நடுநிலையோடு இந்நூல் தொகுக்கப் பெற்று, நல்லமுறையில் வெளியிடப்பட்டுள்ளதாக அனைவரும பாராட்டியுள்ளனர்.

அடுத்து, மாவட்டத் தலைநகர்களில் பெரியாரின் பொன்மொழிகளைக் கொண்ட, நூற்றாண்டு நினைவுத் தூண்கள் நிறுவும் பணி தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நினைவுத் தூண்கள், மாமல்லபுரம் சிற்பக் கலைக் கல்லூரியின் முதல்வர் சிற்பக் கலை வல்லுநர் திரு. கணபதி ஸ்தபதி அவர்களால் தயாரிக்கப்படுகின்றன. முதல் நினைவுத்தூண், பெரியார் அவர்களின் சீர்திருத்தப் பணிகளுக்கெல்லாம் பாசறையாகத் திகழ்ந்த திருச்சிராப்பள்ளியில் நிறுவப்படுகிறது. 2.10.1981-ல் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் இதனைத் திறந்து வைக்கிறார். மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமை வகிக்கிறார்.

பதின்மூன்றரை அடி உயரத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த நினைவுத் தூண், சிறநத சிற்ப வேலைப்பாடுகளுடன் பெரியார் அவர்களின் பகுத்தறிவு ஒளிச் சுடரைத் தாங்கி நிற்கிறது. தூணின் நாற்புறங்களிலும், பெரியாரின் பொன்மொழிகள்பொறிக்கப்பட்டுள்ளன.

திருச்சிராப்பள்ளியில் நினைவுத் தூண் நிறுவுவதைத் தொடர்ந்து எல்லா மாவட்டத் தலைநகர்களிலும் நினைவுத் தூண்கள் நிறுவப்படும்.

பெரியார் அவர்களின் முழு வாழ்க்கை வரலாற்று நூல், சிறுவர்கள் படித்துப் பயன்பெறத் தக்க வகையில் 'வண்ணப்படங்களில் பெரியார்' என்னும் தலைப்பில் பெரியாரின் வரலாற்று வரைபட நூல் ஆகியன தயாரிக்கப்படுகின்றன. இவை விரைவில் வெளியிடப்பெறும்.

பெரியார் ஒலி-ஒளிக் காட்சி மக்களின் ஒருமுகமான பாராட்டைப் பெற்றுள்ளது.

பெரியார் மாநாட்டு அரங்கம் ஒன்று, ஒரு கோடியே அறுபது இலட்ச ரூபாய் செலவில் சென்னையில் அமைக்கப்பட 'இருக்கிறது.

பெரியார் வாழ்ந்த 95 ஆண்டுகளை நினைவுபடுத்தும் வகையில் 95 அடி உயரத்தில் பெரியார் நினைவுக் கோபுரம் ஒன்றைச் சென்னையில் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

தந்தை பெரியார் அவர்களின் தலைசிறந்த சமுதாய சீர்திருத்தப் போர்க்களமான வைக்கத்தில் பெரியார் சிலை நிறுவும் பணியும் கேரள அரசின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.





# நினைவுத் தூண் நினைவூட்டும் பொன்மொழிகள்

தமிழ்நாடு அரசு

பகுத்தறிவுத் தந்தை

பெரியார் ஈ. வெ. இராமசாமி

தோற்றம்: 17.9.1879 மறைவு: 24.12.1973

நூற்றாண்டு நிறைவு விழா
17.9.1979

பொன்மொழிக் கல்வெட்டு

"ஈ. வெ. ராமசாமி என்கின்ற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி, உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல் மானமும், அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை, மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன்".

ஈ. வெ. இராமசாமி
(கையொப்பம்)

(கல்லின் வலது புறம்)

* பகுத்தறிவு நெறியே பண்பட்ட நெறி.
* விதியை நம்பி மதியை இழக்காதே.
* பக்தி இல்லாவிட்டால் இழப்பில்லை; ஒழுக்கம் இல்லாவிட்டால் எல்லாமே பாழ்.
* பல பகுத்தறிவு மணிகளால் ஆன அறிவுக் களஞ்சியம் திருக்குறள்.
* ஒழுக்கக் குறைவுக்கும் மூட நம்பிக்கைக்கும் எப்படிப்பட்ட கலையும் பயன்பட்டு விடக் கூடாது.
* எண்ணங்களை வெளியிட எவருக்கும் உரிமையுண்டு, அதனைத் தடுக்க எவருக்கும் உரிமையில்லை.

(இடது புறம்)

* மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு.
* மக்களின் ஒழுக்கத்தையும் மதியையும் கெடுப்பது மது.
* சிந்திக்கும் தன்மையின் கூர்மையே பகுத்தறிவு.
* கல்வியும் அறிவும் பெறுவது மனிதன் மற்றவர்களுக்குத் தொல்லை கொடுக்காமல் மனிதத் தன்மையோடு வாழவே.
* மாணவர்களை ஆசிரியர்கள் மதவாதிகளாக ஆக்கக் கூடாது; அறிவாளிகளாக ஆக்க வேண்டும்.
* பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு அளவுக்கு மீறிய நாணயமும் கட்டுப்பாடும் உறுதியும் தியாக உணர்வும் வேண்டும்.

(பின்புறம்)

* பகுத்தறிவின் எல்லை பொதுவுடமை ஆகும்.
* பிறருக்குத் தொல்லை தராத வாழ்வே ஒழுக்க வாழ்வு.
* பிறக்கும்போது மனிதன் சாதி அடையாளத்தோடு பிறப்பதில்லை,
* தீண்டாமை ஒழிய வேண்டுமானால் சாதி ஒழிய வேண்டும்.
* பெண்கள் மனிதனுக்குரிய சொத்தல்ல; அவனைப் போன்ற உணர்ச்சியுள்ள உயிர்களே.
* சமூக நீதி பெற சமுதாயப் புரட்சி தேவை.
* மனிதப் பண்பை வளர்ப்பதே என் வாழ்நாள் பணி.
* மூட நம்பிக்கையும், குருட்டுப் பழக்க வழக்கமும் சமூகத்தின் முதல் பகைகள்.

# தஞ்சைத் தரணியில் தமிழ்ப் பல்கலைக்கழகம்





**செ**ப்டம்பர் திங்கள் 15ஆம் நாள்!

எழில் கொஞ்சும் தஞ்சை மாநகருக்குள் நுழைகிறோம். திரும்பும் திசையெல்லாம் திரு விழாக்கோலம்!

வண்ண விளக்குகளால் அமைந்த வரவேற்பு வளைவு களில்தான் எத்தனை வகை! தெருவெல்லாம் வாழைமரங்கள்-தோரணங்கள் - பல வண்ணக் கொடிகள். திருச்சி தஞ்சை வழி யில், தஞ்சை மாவட்ட எல்லை யான புதுக்குடியிலிருந்து வழி நெடுகக் காணப்பட்ட அழகிய அலங்கார வளைவுகள், வருக வருகவென வரவேற்றன. தஞ்சை பெரிய கோயில் கோபுரம் ரூ.40 ஆயிரம் செலவில் மின் விளக்கு களால் அலங்கரிக்கப்பட்ட காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தன.

இரவில் தஞ்சையைப் பார்க்கக் கொடுத்து வைத்திருக்க வேண் டும். விண்ணிலிருந்து வீழும் வண்ண மலர்ப்பூக்களோ என எண்ணுகின்ற வகையிலே வான வேடிக்கைகள்! தஞ்சையிலே தமிழ் விழா நடக்கின்றது என நெஞ்சே அதிரும் வண்ணம் பல்ற சாற்றும் அதிர் வேட்டுகள்!

**வெள்ளம்போல் தமிழர் கூட்டம்!**

தெருவெல்லாம் ஆடவர், பெண்டிர், குழந்தைகள் இப்படி

**—பி. வி. கிரி.**

சாரி சாரியாகச் சென்ற காட்சி—ஒவ்வொருவரும் தத்தம் வீட்டு விழாவாக எண்ணித்தானோ என நினைக்கத் தோன்றியது.

'தேமதுரத் தமிழோசை உலக மெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்ற பாரதியின் கன வினை மெய்ப்பிக்கின்ற வகை யிலே 'வெள்ளம்போல் தமிழர் கூட்டம்' வீதிகளையெல்லாம் நிறைத்துக் கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் மகிழ்ச்சி வெள்ளம், மாத்தமிழுக்கு ஈடில்லை என வீர முழக்கம்.

அன்று மாலை விளையாட்ட ரங்கத்தில் விழா தொடங்கியது.





நீண்ட, பரந்த, அழகிய பந்தல் மலர்களால் - வண்ண மின்விளக்குளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இலட்சோப லட்ச மக்கள் பந்தலில் நிரம்பி வழிந்து கொண்டிருந்தார்கள். பேரறிஞர் அண்ணா பிறந்த நன்னாளில் நடக்கின்ற தமிழ்ப் பல்கலைக் கழகத் தொடக்க விழாவைக் காணத் துடித்துக் கொண்டிருந்தார்கள். மங்கள இசையுடன், தமிழ்த்தாய் வாழ்த்து மலர விழா தொடங்கியது.

### நீண்ட நாள் ஆசை

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள்



மாண்புமிகு
செ. அரங்கநாயகம்

அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், ''மொழி தொடர்பாக, கலாச்சாரம் தொடர்பாக தஞ்சையில் இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தொடங்கப்பெற்றிருக்கிறது. தமிழ் மக்களின் நீண்ட நாளைய ஆசையை நிறைவேற்றுகின்ற வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பல்கலைக் கழகத்தைத் தொடங்குகிறார்கள். அவருக்குத் தமிழகத்து மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

### உலகம் உணர்ந்திட..

திருவள்ளுவர் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, துவக்கப்பேருரையாற்றிய மேதகு ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''இந்த நன்னாளில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தொடங்குவது தமிழ் மொழிக்குப் பல துறைகளிலும் அருந்தொண்டாற்றிய அண்ணாவுக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடனாக அமைகிறது.

''தமிழ் மொழி தொடர்பான பல கூறுகளில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள அயல்நாடுகளிலிருந்து வரும் அறிஞர் பெருமக்களுக்கும், மாணவர்களுக்கும் இப்பல்கலைக் கழகம் ஆன்ற துணை புரியும். பல்வேறு துறைகளுக்கும் தமிழ் மொழி ஓர் அறிவுக் கருவூலமாக மிளிர்கிறது. அரிய கருத்துக்கள் பல தமிழ் மொழியில் மண்டிக்கிடக்கின்றன என்று நான் அறிகிறேன். அவற்றையுலகுக்கு எடுத்துரைக்க இப் பல்கலைக் கழகம் அரும்பணியாற்றும்.



''தமிழ் மொழிக்கும், தமிழருக்கும் பண்டைய மறை நூலாக மிளிர்கிறது திருக்குறள். தமிழ் மொழியின் எழிலையும், தமிழ்ப் பண்பாட்டின் ஏற்றத்தையும் வனப்புற எடுத்தியம்பி, சுருங்கக் கூறி விளங்க வைக்கும் சுடரொளியாகத் திருக்குறள் திகழ்கின்றது.''

### சிறந்த எடுத்துக்காட்டு

மாண்புமிகு இந்திய அரசு வேளாண்மைத் துறை இணை அமைச்சர் திரு ஆர்.வி. சுவாமிநாதன் அவர்கள், பல்கலைக்கழக நூலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகம், உலகத்திலே சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழப்போகிறது. அமெரிக்காவில் வாஷிங்டனில் உள்ள நூலகமே உலகத்தில் மிகப் பெரியது. தஞ்சையில் உள்ள சரஸ்வதி மகால் நூலகம் மிகப் பழமையானது. பழஞ்சுவடிகளைத்தன்னகத்தே கொண்டது. அதோடு இணைத்து இந்த நூலகமும் மிகப் பெரிய அளவில் விளங்கிடவேண்டும்.''

### முதல் மகள்:

'சங்க இலக்கியம்' என்னும் தலைப்பில் மதுரை காமராசர்



டாக்டர் வ. சுப. மாணிக்கம்

பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் பேசுகையில், ''தமிழன்னையின் முதல் மகளாகத் தமிழ்ப் பல்கலைக் கழகம் பிறக்கிறது'' என்று குறிப்பிட்ட அவர்,

''எல்லா மொழிக்கும் பல்கலைக் கழகம் அமைத்துவிட முடியாது. சில மொழிக்குத் தான் பல்கலைக் கழகம் அமைக்கலாம். அதில் முதன்மையானது தமிழ். என்றார்

அடுத்துப் பேசிய மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்கள் 'சமய இலக்கியம்' என்னும் தலைப்பில் பேசும்போது, ''மதுரை 'உலகத் தமிழ்மாநாடு பெற்றெடுத்த குழந்தை இந்தப் பல்கலைக் கழகம்' என்று குறிப்



டாக்டர் ம. பொ. சிவஞானம்

பிட்ட அவர், தஞ்சை பெரிய கோயிலில் ஓவியக் கலையைப் பார்க்கிறோம்; சிற்பக்கலையைப் பார்க்கிறோம். அதெல்லாம் சோழ மன்னனோடு நின்றுவிட்டது. பிறகு அவை வளரவில்லை. மேலே மேலே பார்க்கிறோம். கட்டடக் கலையையும் அவன் வளர்த்திருக்கிறான். இந்தக் கலைகளையெல்லாம் சொல்லித் தரஇந்தப் பல்க்லைக் கழகம் பாடுபடும். தமிழால் முடியாதது இல்லை என்ற நம்பிக்கையோடு இந்தப் பல்கலைக் கழகம் துவங்குகிறது; தமிழில் முடிந்தாக வேண்டும் என்ற நம்பிக்கையோடு இந்தப்பல்கலைக்கழகம் தோன்றுகிறது'' என்றார்

## இலக்கணம் என்றால் என்ன!

முத்தமிழ்க் காவலர் டாக்டர் திரு கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள், 'காப்பிய இலக்கியம்' என்னும் தலைப்பில் பேசுகையில், ''இலக்கணம் என்றால் விளக்கெண்ணெய் என்பார்கள். இலக்கணம் என்பது என்ன? சட்டம், விதி, அமைப்பு, அழகு, எல்லை என்பதே. இதை வடமொழியில் லட்சணம் என்பார்கள். பண்டை தமிழ் மக்கள் செய்த இலக்கியங்கள் குறிக்கோள்கள் உடையவை; ஒழுக்கமுடையவை'' என்றார்.

## பெருமை! பெருமை!

பேரறிஞர் அண்ணா அவர்களின் படத்தைத் திறந்துவைத்து வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்:

''செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் என்பதனால் பெருமை பெறுகிறது; அக்டோபர் 2 காந்தியடிகள் பிறந்த நாளால் பெருமை பெறுகிறது. செப்டம்பர் 17 தந்தை பெரியார் பிறந்த நாளால் பெருமை பெறுகிறது. அதைப் போல, இந்த செப்டம்பர் 15 தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் பெருமை பெறுகிறது.

''தமிழின் அருமை பெருமைகளை ஆராய்ந்து சொல்வதற்கு உலகத்தின் பல்வேறு அறிவுத்திறனை வெல்கின்ற அளவுக்கு இந்தப் பல்கலைக் கழகம் பயன்படும்''.

## முதல்வர் முழக்கம்

தமிழ்ப் பல்கலைக் கழகக் கட்டட அடிக்கல் நாட்டி வைத்து, மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி.ஆர். அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

''தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் தோன்ற நான் பெரும் முயற்சி செய்தேன் என்று இங்கு பேசியவர்கள் கூறினார்கள். என்னைப் பாராட்டினார்கள்.

''முத்தமிழ்க் காவலர் சொன்னதுபோல, 63 ஆண்டுகளுக்குமுன் கோரிக்கையாகத் தோன்றிய இந்த உரிமைப் பிரச்சினை-தமிழர் பிரச்சினை இன்று தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகமாக நிறைவேறி இருப்பதை நினைக்கும்போது நமக்குப் பெரு மகிழ்ச்சியும் பூரிப்பும் ஏற்படுகிறது.

## மறக்காது! மறக்காது!

''தமிழ்ப் பல்கலைக் கழகம் தோன்ற நான் முயன்றபோது சில எண்ணங்களை - யோசனைகளை முத்தமிழ்க் காவலரிடம் கேட்டேன். அவர் அதைப்பற்றி இங்குக் குறிப்பிடுவார் என்று எதிர்பார்த்தேன். பெருந்தன்மையோடு அவர் குறிப்பிடாவிட்டாலும், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த விழாவில் தமிழாய்ந்த பெரியவர்கள் கூறிய அரிய ஆலோசனைகளை நான் இங்கு எடுத்துக் கூறாவிட்டால், கடமையிலிருந்து தவறியவன் ஆவேன்.



முத்தமிழ்க் காவலர்
கி. ஆ. பெ. விசுவநாதம்

''தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்காகத் தமிழ் வல்லுநர் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று பெரியவர்களை நான் கேட்டபோது, அவர்கள் மன முவந்து ஏற்றுக் கொண்டதை இப்போது நினைத்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறேன்.

''அந்தக் குழுவின் தலைவராக டாக்டர் வ.சுப. மாணிக்கம்அவர்களும், முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம், சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ.சிவஞானம் போன்ற நல்லறிஞர்கள் இடம் பெற்றார்கள், அந்தக் குழுதான் தமிழ்ப் பல்கலைக் கழகம் எப்படி அமைய வேண்டும் என்ற யோசனையை எங்களுக்கு எடுத்துக் கூறியது. அதற்காக அவர்களுக்குத் தமிழக அரசு சார்பில், தமிழக மக்கள் சார்பில் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களைத் தமிழகம் என்றென்றும் மறக்காது, மறக்காது! என்று கூற விரும்புகிறேன்.

## என் ஆசை!

''கட்டடம் கட்டும் முன்திட்டமிட்டுக் கட்ட வேண்டும். அது



மாண்புமிகு
இரா. நெடுஞ்செழியன்

போல, சிந்தனை உணர்வோடு மிகவும் ஆர்வத்துடன் சிந்தித்து எடுக்கப்பட்டமுடிவுதான் இந்தத் தமிழ்ப் பல்கலைக்கழகம். எதையும் கட்டி முடிக்கப்பட்ட பின்பு சிந்தித்தால் அதில் பல குறைகளைக் காண முடியுமே தவிர நிறைவினைக் காண முடியாது. ஆனால், இந்தத் தமிழ்ப் பல்கலைக்கழகம் முழு நிறைவுடன் திகழ்கிறது.

''அறிவியல், பொருளாதாரம், மருத்துவம் போன்ற பல துறைகள் இந்தப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி கற்கப் பயன்பட வேண்டும் என்ற என் ஆசை இன்று நிறைவேறுகிறது. எல்லா நிலைகளிலும் தமிழால்தான் எதையும் செய்ய முடியும் என்பதை எடுத்துக் காட்ட இந்தத்

தமிழ்ப் பல்கலைக் கழகம் பயன் படவேண்டும்.

''இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திலும், மதுரையில் அமையவிருக்கும் உலகத் தமிழ்ச் சங்கத்திலும் தமிழைப் பற்றி விரிவாக ஆராய இருக்கிறோம். இங்குச் சொல்லிக் கொடுப்பதை அங்குச் செயல்படுத்த வேண்டும். ஒன்றுக்கொன்று பாலமாக அமைய வேண்டும். நிச்சயமாக இந்தப்பெருமை அனைத்தும் பேரறிஞர் அண்ணாவுக்குத் தான்.

''எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் அரசியல்-சாதி-மதம் நுழைய விட மாட்டோம். அவைகளை ஒதுக்கி வைப்போம்.

''தமிழாய்ந்த தமிழ்ப் பெரியவர்கள் மட்டும்தான், தமிழைக் காப்பவர்கள் மட்டும்தான், தமிழை வளர்ப்பவர்கள் மட்டும்தான் பங்குபெறும் வகையில் இந்த அமைப்பு இருக்கும். அதனை அண்ணா அவர்கள் பிறந்த இந்த நாளில் அண்ணாவின் மீது சபதமிட்டு-ஏன் சத்தியம் ஏற்றுச் செயல்படுவோம்.''

கல்வித்துறை சார்பில் நடந்த கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும், உடல் ஊனமுற்றோர்க்கான சிறப்புப் பரிசுக் குலுக்கலில் பரிசு பெற்றவர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

இறுதியில், தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு வி.ஐ. சுப்பிரமணியம் அவர்கள் நன்றி கூறிப்பேசுகையில், ''தமிழர்க்கு வரவேற்பும், தமிழ்க் கலாசாரத்துக்குப் பெருமையும் தேடித் தரும்-இந்தப் பல்கலைக் கழகம்'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் முன்னிலையில், திருவையாறு அரசு இசைக் கல்லூரி மாணவர்களின் நாயன இசை நிகழ்ச்சி நடந்தது. 'திருமலைக் குறவஞ்சி' என்னும் நாட்டிய நாடகமும் அன்று இரவு நடந்தது.



# தஞ்சையில் சோழர் காலக்கட்டடம்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையானது தஞ்சாவூரில் சோழர் காலக் கட்டடப் பகுதியைக் கண்டுபிடித்துள்ளது. தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயிலுக்கு வட மேற்கே 1½ கிலோ மீட்டர் தொலைவில் குறும்பன் மேடு என்று ஒரு மேடு உள்ளது. அம்மேட்டின் ஒரு பகுதியில் ஆறு அடிக்குக் கீழ் செங்கல்லால் ஆன கட்டடப் பகுதி வெளிக் கொணரப் பட்டுள்ளது.

இக்கட்டடப் பகுதி 15 அடி நீளமும் 1½ அடி அகலமும் உடையது. இக் கட்டடப் பகுதியோடு சோழர் காலத்தைச் சார்ந்த பானை ஓடுகளும், கூரைகளில் பரப்பும் தட்டோடுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவ்வோடுகள் கங்கைகொண்ட சோழபுரத்தில் அகழ்ந்து வெளிக் கொணரப்பட்டுள்ள சோழர்களின் மாளிகைப்பகுதிகளில் கிடைத்துள்ள ஓடுகளைப் போன்றேக் காணப்படுகின்றன.

சோழப் பெருமன்னன் விஜயபாலன் தஞ்சையை முதன்முதலில் முத்தரையர் மன்னர்களிடமிருந்து கி.பி. 850-ல் கைப்பற்றி சோழப் பேரரசின் தலைநகரமாக ஆக்கினான். கி.பி. 1020 வரை அது சோழ மன்னர்களின் தலைநகரமாக விளங்கியது. அதற்குப் பிறகு முதலாம் இராஜேந்திரன் தாம் கங்கை வரை படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றதன் நினைவாக கங்கைகொண்ட சோழபுரத்தை தலைநகரமாக நிறுவினான். அங்கு பெரும் கோயிலையும் எடுப்பித்தான். சோழ கங்கை என்ற ஏரியையும் வெட்டுவித்தான். பெரும் மாளிகை, கோட்டை கொத்தளங்கள் ஆகியவற்றை அங்கு அமைத்து வாழ்ந்து வந்தான். அம்மாளிகைப் பகுதிகளை அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டுபிடித்துள்ளது.

தஞ்சையிலும் புறநகர், அகநகர் ஆகிய பகுதிகளும், மன்னனது மாளிகை மற்றும் அமைச்சர், பிரதானிகள், வணிகர், நாட்டிய மகளிர் ஆகியோர் வாழ்ந்து வந்த பகுதிகளும் இருந்தன என்பது தஞ்சைப் பெரிய கோயிலில் காணப்பெறும் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது. அப்பகுதிகளை இதுவரை நாம் கண்டு பிடிக்க இயலவில்லை.

கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டில் நாயக்க மன்னர்கள் தஞ்சையில் அரண்மனையை எழுப்பியிருக்கின்றனர். அப்பகுதிகளை, அவர்களை அடுத்து ஆட்சி செய்த மராட்டிய மன்னர்கள் விரிவுபடுத்தி சிறப்பான அரண்மனை அமைத்திருக்கிறார்கள். அப்பகுதிகள் இன்னும் அழியாது உள்ளன. கி. பி. 1675-77ல் மராட்டிய மன்னன் சிவாஜி மாறு வேடத்தில் தஞ்சைக்கு வந்ததாக வரலாறு உண்டு.

இவ்வளவு புகழ் வாய்ந்த தஞ்சையில், பெரும் புகழோடு ஆட்சி நடத்தி வந்த சோழர்களின் மாளிகையை இதுவரை யாவரும் கண்டு பிடிக்கவில்லை. தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் தொடங்கப் பெறும் இந்தச் சமயத்தில் சோழர் காலக் கட்டடப் பகுதிகள் தஞ்சையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்ற இந்தச் செய்தி சோழ மண்டலத்து மக்களுக்குப் பெரும் மகிழ்வூட்டும் என்பதில் ஐயமில்லை. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை தமது ஆய்வுப் பணியைத் தஞ்சையில் தொடர்ந்து செய்து வருகிறது என்று, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் தெரிவித்தார்.

# மண்ணும் பொன்னாகும்

– ஆனந்தன்

**கா**தி-கிராமோத்யோக் பவனுக்கு இது வெள்ளி விழா ஆண்டு!

1957ஆம் ஆண்டு திரு. காமராஜர் அவர்களால் துவக்கப்பட்ட இந்த நிறுவனம் சென்னை அண்ணாசாலை அண்ணாசிலை அருகில் இருக்கிறது. இந்தப் பவனில் கடந்த 11 ஆண்டுக் காலமாக நவராத்திரி பொம்மைக் கொலு கண்காட்சி நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டும் பொம்மைக் கண்காட்சி நடத்தப்பட்டது. சென்னையில் செப்டம்பர் 4-ஆம் தேதி "பொம்மைக் கண்காட்சியை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் துணைவியார் திருமதி புனிதவதி கிருஷ்ணசாமி அவர்கள் துவக்கி வைத்தார். விழாவுக்குத் திருமதி





சௌந்தரா கைலாசம் அவர்கள் தலைமை வகித்தார்.

இந்த நிறுவனம் வேலூர், கடலூர், பண்ருட்டி, பாண்டிச்சேரி, சென்னை குயப்பேட்டை, காஞ்சிபுரம் போன்ற பகுதிகளில் கொலுப் பொம்மைகளை தயார் செய்யும் கலைஞர்களிடம் சென்று அவர்களிடம் பணம் கொடுத்து பொம்மைகளை நேரிடையாக வாங்கி நியாயமான விலைகளுக்கு விற்று வருகிறது.

இத்தொழிலை நம்பி வாழும் குடும்பங்களின் விளக்கை ஏற்றி அவர்களுக்கு வாழ்வு அளித்து வருகிறது. இந்தக் கலைத் தொழில் நசுங்கி விடாமலும் அழிந்து விடாமலும் இருக்க இந்த நிறுவனம் அவ்வப்போது மண் பொம்மைகளை வாங்குவதன் மூலம் பாதுகாப்பு நடவடிக்கைகளை உரிய நேரத்தில் எடுத்து வருகிறது.

தமிழக அரசின் காதி-கிராப்டும் சர்வோதய நிறுவனம் போன்ற அமைப்பும் இத்தொழிலுக்கு உயிரூட்டி வருகின்றன. மண்பொம்மை மட்டுமின்றி 'பேப்பர் மெஸ்' 'பிளாஸ்டர் ஆப் பேரிஸ்' மரத்தூளினால் செய்யப்பட்ட பொம்மைகளையும் துணியால் செய்யப்பட்ட பொம்மைகளையும் தயார் செய்து விற்பனை செய்து வருகிறது.

சில பொம்மை வகைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறார்கள். தமிழ் நாட்டில் தயாரிக்கப்பட்ட இந்த பொம்மைகளுக்கு வெளிநாட்டில் அதிக வரவேற்பு இருக்கிறது.

பொம்மைகள் நவராத்திரி, விநாயகர் சதுர்த்தி போன்ற காலங்களில் மட்டுமே விற்பனையாகி வருகிறது. மற்ற நேரங்களிலும் இக்கலையை நம்பி வாழும் தொழிலாளர்களுக்கு நிரந்தரமாகப் பொருளாதார வசதி செய்து கொடுக்க வேண்டிய மனிதாபிமான உணர்வுடன் இந்நிறுவனம் புதிய திட்டங்களைத் தயார் செய்து வருகிறது.

காந்திஜி, திருவள்ளுவர் போன்றவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் பொம்மைகளைத் தயாரித்து தமிழ் நாட்டிலுள்ள அனைத்துக் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் நிரந்தரக் கண்காட்சியாக வைக்க ஏற்பாடு செய்துள்ளது.

மண் பொம்மையாக இருந்தாலும் அந்த மண்ணுங்கூட பொன்னாகும் என்று சொல்லும் அளவுக்கு கடந்த ஆண்டு மட்டும் ரூ. 2.5 கோடி விற்பனைத் தொகையை எட்டியுள்ளது.




# பொலிவு தரும் புலங்கள் திறப்பு விழா

செப்டம்பர் திங்கள் 16 ஆம் நாள்! நெஞ்சை அள்ளும் தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகப் புலங்கள் திறப்பு விழா மிகச் சிறப்பாக நடந்தது.

விழா தொடங்குவதற்கு முன்பாகவே மக்கள் வெள்ளம் காவிரி எனக் கரைபுரளத் தொடங்கியது.

தமிழறிஞர்கள், சான்றோர்கள், புலவர்கள் எல்லாம் விழா மண்டபத்தை அலங்கரித்தார்கள்.

அன்னைத் தமிழுக்கு அணியாரம் சூட்டுகின்ற வகையிலே, புலங்கள் திறப்பு விழா, நம்மையெல்லாம் பூரிக்க வைத்தது. தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்கின்ற காட்சி கண்டு நம் நெஞ்சம் நிமிர்ந்தது. நினைவெல்லாம் தித்தித்தது. இன்பத் தமிழுக்கு ஈடில்லை என இறுமாந்திருந்தது தமிழர் கூட்டம்.

அன்று காலை மங்கள இசையுடன் துவக்கப்பட்ட இந்தக் கோலாகல நிகழ்ச்சிக்கு, மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமை வகித்தார். அவர் பேசுகையில், ''மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் உலகத்திலுள்ள அனைத்து தமிழ் மக்களையும் ஒன்று கூடச் செய்து, வரலாற்றில் புதிய சரித்திரத்தைப் படைத்தவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள்'' என்று குறிப்பிட்ட அவர், 'தமிழ்ப் பல்கலைக் கழகக் கட்டட வேலைகள் விரைவில் தொடங்கும்' என்றார்.

**கலைப்புலம்**

'கலைப் புலத்திற்கான அடிக்கல் நாட்டி, தொடக்கவுரை நிகழ்த்திய மாண்புமிகு நீர்ப்பாசன அமைச்சர் திரு கே. இராசாமுகமது அவர்கள் பேசுகையில், ''இங்கு அறிவுக்கு இடம் உண்டே தவிர, அரசியலுக்கு எள்ளளவும் இடம் கிடையாது'' என்று குறிப்பிட்டார்.

மாநிலத் திட்டக்குழு துணைத் தலைவர் திரு. டி. கே. சீனிவாசன் அவர்கள் தமிழின் சிறப்பினை எடுத்துக் கூறினார்.

**தஞ்சைத் தரணியில் தமிழ்ப் பல்கலைக் கழகம்**

**சுவடிப்புலம்**

சுவடிப் புலத்திற்கு அடிக்கல் நாட்டி மாண்புமிகு கர்நாடக மாநிலக் கல்வியமைச்சர் திரு ஜி. பி. சங்கர் ராவ் அவர்கள் பேசுகையில், திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற அரிய நூல்கள் தமிழில்தான் காண முடிகிறது. ஆகவே, நான் தமிழ் மொழியை மிகவும் விரும்புகிறேன், நேசிக்கிறேன்'' என்றார்.

நிகழ்ச்சித் தொகுப்பு பி. வி. ஜி

வல்லுநர் குழு உறுப்பினர் டாக்டர் சா. வே. சுப்பிரமணியன் அவர்கள் பேசுகையில், சுவடிப் புலத்தை மூன்று வகையாகப் பிரிக்கலாம் என்றும், அவை 1. சுவடிகள் பற்றியவை, 2. பழங்கால நூல்களைப் பற்றியவை 3. கல்வெட்டுக்களைப் பற்றியவை என்றும் குறிப்பிட்டு 1880-ஆம் ஆண்டுதான் முதன் முதலில் சிலப்பதிகாரம் அச்சுவாகனம் ஏறியது என்ற தகவலையும் வெளியிட்டார்.

**வளர் தமிழ்ப் புலம்**

வளர் தமிழ்ப் புலத்திற்கான



மாண்புமிகு கே. இராசாமுகமது
திரு டி. கே. சீனிவாசன்
மாண்புமிகு ஜி. பி. சங்கர்ராவ்
டாக்டர் கா. வே. சுப்பிரமணியன்
மாண்புமிகு பி. வெங்கட்ராம் ரெட்டி



மாண்புமிகு கா. காளிமுத்து
மாண்புமிகு ப. குழந்தைவேலு
டாக்டர் மா. நன்னன்
மாண்புமிகு ரேணுகா அப்பாதுரை
திரு வ. செ. குழந்தைசாமி

அடிக்கல் நாட்டி மாண்புமிகு ஆந்திர மாநிலக் கல்வியமைச்சர் திரு. பி. வெங்கட்ராம் ரெட்டி அவர்கள் பேசுகையில், ''தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடங்குவதன் மூலம், பிற மாநிலங்களும் தத்தம் தாய்மொழியில் பல்கலைக் கழகங்களைத் தோற்றுவிக்க வழி காட்டியாக இருக்கும்'' என்றார்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

''உலக நாடுகளுக்குத் தமிழை எடுத்துக் காட்ட இன்று தமிழ்ப் பல்கலைக் கழகத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார். ஆகவே, இதன் மூலம் தமிழ் வாழும். தமிழ்மொழி காக்காப்படும் என்ற நம்பிக்கை தமிழ் மக்கள் அனைவருக்கும் இருக்கின்றது. உலகத்திலுள்ள தமிழ் மக்கள் அனைவருக்கும் வழி காட்டும் கலங்கரை விளக்கமாக இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகம் விளங்கும்''

## மொழிப் புலம்

மொழிப் புலத்திற்கான அடிக்கல் நாட்டி மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் பேசுகையில் ''இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தால், தமிழன் தலை நிமிர்ந்து நிற்கிறான். தமிழுக்கு நிகர் தமிழ்தான் என்பதை இந்தப் பல்கலைக் கழகத்தின் மூலம் நிருபித்துக் காட்ட வேண்டும்'' என்றார்.

வல்லுநர் குழு உறுப்பினர் டாக்டர் மா. நன்னன் அவர்கள் பேசுகையில், ''வரலாற்றில் நூற்றாண்டுக் காலமாக எண்ணப்பட்டு வந்த ஒரு செயல், இன்று ஈடேறுகிறது'' என்றார்.

## அறிவியல் புலம்:

அறிவியல் புலத்திற்கான அடிக்கல்லை நாட்டி மாண்புமிகு பாண்டிச்சேரி கல்வி அமைச்சர் திருமதி ரேணுகா அப்பாதுரை அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''எதிர் வரும் நாள்களில், இப்பல்கலைக் கழக அறிவியல் துறை தன்னைத் தகுந்த முறையில் தகுதிப் படுத்திக் கொள்வதுடன், பன்னாட்டு அறிவியல் மன்றங்களில் புகழ்ச் சிறப்புக்களையும் பெறும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்''

வல்லுநர் குழு உறுப்பினர் திரு. வ. செ. குழந்தைசாமி அவர்கள் தமிழின் பெருமையையும், தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சிறப்பையும் விளக்கிப் பேசினார்.

அன்று பிற்பகல், அரசு இசைக் கல்லூரி மாணவர்களின் பல்சுவை நிகழ்ச்சியும், மாலை சூலமங்கலம் சகோதரிகளின் இன்னிசைக் கச்சேரியும், இரவு 'வள்ளித் திருமணம்' என்னும் நாட்டிய நாடகமும் நடந்தது.

அன்று மாலை அருள் தியேட்டரில், ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு வண்ணப்படமும், குமரிக் கண்டம். வண்ணப்படமும் மக்களைக் களி வெள்ளத்தில் ஆழ்த்தின.

# மதுரை மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1981-82ஆம் ஆண்டில் ரூ. 550 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 4310 வேலைகள் எடுத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ் வேலைகளை எடுத்துச் செய்வதற்கு தற்போது அரசு ரூ.158.40 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. ஒதுக்கப்பட்ட தொகையில் ரூ. 55.80 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு எடுத்துக் கொள்ளத் திட்டமிட்ட 3410 வேலைகளில் 620 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. இதன் பயனால் 60,150 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் தனியாக 204 பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக தேவையான தளவாட சாமான்கள் மற்றும் செலவினத்திற்காக ரூ. 85.68 இலட்சம் அரசுமானியமாக 1981-82ம் ஆண்டில் அளித்தது. 204 பள்ளிக் கட்டிடவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ் வேலைகள் அனைத்தும் 31.3.82க்குள் முடிக்கப்பட்டு விடும்.

### தன்னிறைவுத் திட்டத்தில் மதுரை மாவட்டம்.

1981-82ம் ஆண்டில் இரண்டாம் கட்டமாக 18 ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டத்திற்காக ரூ. 505.55 இலட்சம் மதிப்பீடு செய்து 2587 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. 490 வேலைகள் ரூ. 126.39 இலட்சம் செலவில் இதுவரை செய்து முடிக்கப்பட்டுள்ளன. தன்னிறைவுத் திட்ட வட்டாரங்களில் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் 529 வேலைகள் ரூ. 442.65 இலட்சம் மதிப்பீட்டிலும், ஊரக சாலைத்திட்டத்தின் கீழ் 23 வேலைகள் ரூ. 146.30 இலட்சம் மதிப்பீட்டிலும், ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 1800 வீடுகள் ரூ. 54 இலட்சம் மதிப்பீட்டிலும், மின் வாரியத்தால் குடிசைகளுக்கு மின்சாரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 8945 குடிசைகளுக்கு ரூ. 12.79 இலட்சம் மதிப்பீட்டிலும், 33 மகப்பேறு நிலையக் கட்டிடங்கள் ரூ. 17.05 இலட்சம் மதிப்பீட்டிலும் உருவாக்க வேலைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

மதுரை மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்ட வேலைகள் ரூ. 1,198 இலட்சம் மதிப்பீட்டில் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன.

சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் ஜூலை 81ல் நிகர சிறுசேமிப்பு வசூல் ரூ. 28.12 இலட்சம். 1.4.81 முதல் 31.7.81 வரை சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 100.47 இலட்சம் நிகர வசூல் ஆகியுள்ளது.

கால்நடைத் தீவனத்திற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியின் சாலை ஓரங்களில் 5000 சூபாபுல் கன்றுகள் வளர்க்கவும் விவசாயிகளுக்கு 35,000 கன்றுகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மாவட்ட ஊரக மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து வனத்துறையினரால் சூபாபுல் கன்றுகள் தயாரிக்கப்படுகின்றன. விவசாயிகளுக்கு கன்றுகள் ஒவ்வொன்றும் 10 பைசாவீதம் விநியோகிக்கப்படுகிறது. விவசாயிகள் சூபாபுல் கன்றுகளைப் பெற்றுப் பெருமளவில் நடவு செய்து வருகின்றனர்.

முருங்கை மற்றும் பப்பாளிக் கன்றுகள் நடுவதற்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 10 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய நாற்றங்காலில் வேளாண்மை அலுவலர்களால் 4 இலட்சம் கன்றுகள் தயாரிக்கப்படுகின்றன.

வரப்பு ஓரங்களில் மரம் நடும் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு மதுரை கிழக்கு, உத்தமபாளையம், பெரியகுளம், போடி, வத்தலக்குண்டு, டி.கல்லுப்பட்டி, ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. விவசாய நிலங்களின் வரப்புகளில் யூகலிப்டஸ், இலவம்பஞ்சு, சூபாபுல் கன்றுகள் பயிரிட்டு விவசாயிகள் வருமானத்தை அதிகரிக்கலாம். மதுரை மாவட்டத்திலுள்ள உதவி வேளாண்மை இயக்குநரிடம் தேவையான கன்றுகளை விவசாயிகள் பெற்றுக் கொள்ளலாம்.

தொகுப்பு : எம். அண்ணாமலை, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) மதுரை.





# பார்போற்றப் பணிபுரியும் பஞ்சாப் சங்கம்

தமிழ்ப்பித்தன்

"பஞ்சாப் சங்கத்தின் பல்வேறு நடவடிக்கைகளை நான் பல ஆண்டுகளாகக் கவனித்து வருகிறேன். இச்சங்கம் தனது நிகரற்ற பணியினால் தலைசிறந்து விளங்குகிறது. சமுதாயத்தின் நலனுக்காக, குறிப்பாக ஏழை மக்களின் நலனுக்காகவும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உழன்று கொண்டிருக்கும் மக்களின் நன்மைக்காகவும் தொண்டாற்றுவதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு செய்துவரும் பணியைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

''பல்வேறு மாநில மக்கள், பல்வேறு மொழிபேசும் மக்கள் தமிழகத்தில் குடியமர்ந்து தமிழகத்தைத் தாயகமாகக் கொண்டுள்ளனர். நட்புக்கும் தோழமைக்கும் பெயர் பெற்ற தமிழக மக்களாகிய நாம் நேசக் கரம் நீட்டி அவர்களை எப்போதும் வரவேற்றுள்ளோம். சாதி, மொழி, இன வேறுபாடின்றி நாம் அனைவரும் தமிழகத்தில் ஒன்றாக வாழ்ந்து நமது சுகதுக்கங்களைச் சமமாகப் பகிர்ந்து கொள்கிறோம். எனவே ஏனைய மாநிலங்களிலிருந்து வரும் நமது உடன் பிறப்புக்கள் தங்கள் மாநிலத்திற்குத் திரும்பிச் செல்லும் எண்ணமின்றி மகிழ்ச்சியுடன் இங்கேயே நிலையாகத் தங்கிவிடுவதில் வியப்பொன்றுமில்லை. இம் மாநிலத்தில் அயலார் என்ற உணர்வின்றி அவர்கள் ஒன்றி விடுகின்றனர்.

''இவ்வாறு இம் மாநிலத்திற்கு வந்து இதையே தாயகமாக ஏற்றுத் தங்கி விட்டவர்களில் நமது பஞ்சாப் சகோதரர்கள் முன்னணியில் நிற்கின்றனர்.''

—மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் 9-8-81 அன்று நடைபெற்ற பஞ்சாப் சங்க விழாவில் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டு விடுதலைப் போராட்டத்தில் அஞ்சாமல் ஈடுபட்ட பஞ்சாப் மாநில மக்கள் அறியாமைக்கு விடுதலை நல்கும் போராட்டத்திலும், சமூகத்தில் ஊனமுற்ற பெண்டிரின் அவதிக்கு விடுதலை அளிக்கும் போராட்டத்திலும் அயராது ஈடுபட்டு வருகின்றனர் என்பதை, சென்னை இராயப்பேட்டை பீட்டர்சு சாலையில் உள்ள பஞ்சாப் சங்கம் ஆற்றி வரும் பல்வேறு பயன்மிகு பணிகள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

கல்விப் பணிபுரிவதற்கும் சமூக நலப் பணி யாற்றுவதற்குமென ஏறக்குறைய 50 நிலையங்களை உருவாக்கி நிருவகித்து வருகிறது- ஒரு பல்கலைக் கழகம் போலத் திகழ்கிறது பஞ்சாப் சங்கம் என்பதை அறியும்போது வியப்பு மேலிடுகிறது.

1937ல் சென்னை இராயப்பேட்டையில் பஞ்சாப் மக்கள் ஒரு சிலரால் துவக்கப்பட்ட இந்தச் சங்கம், முதன் முதலில் பொழுதுபோக்குச் சங்கமாகத் தான் விளங்கியது. ஒருவர்க்கொருவர் கலந்துரையாடுவதையும்-தேசிய விழாக்களையும் திருநாட்கள் ஆகியவற்றைக் கொண்டாடுவதையும் தனது குறிக்கோள்களாகக் கொண்டிருந்தது.

நாளடைவில் சமூக சேவையில் அதன் நாட்டம் சென்றது. சமுதாயத்துக்கு உதவுவதில் முனைப்பினை மேற்கொண்டது. வாழ்விழந்தவர் -கணவரால் கைவிடப்பட்டவர் - ஆதரவற்றவர் போன்ற சமூக ஊனம் உற்ற பெண்டிருக்கு உதவும் வகையில் தொழில் பயிற்சிப் பள்ளி ஒன்றினைத் துவக்க முனைந்தது. நாடு விடுதலை பெற்ற 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாளில் மகாராணி வித்யாவதி தேவி தொழிற்பயிற்சிப் பள்ளியைத் துவக்கியது. துணிவெட்டுதல், தைத்தல் ஆகியவை கற்றுத்தரப்பட்டன. 36 மாணவியரைக் கொண்டு அந்த வகுப்பு துவக்கப்பட்டது.

சென்னையில் வசித்துவரும் வெளிமாநிலத்தவரின் குழந்தைகள் பள்ளியில் பயிலும்போது அவர்களுக்குப் பயிற்சிமொழி ஒரு சிக்கலாக அமைந்துவிடுகிறது. வட்டார மொழியில் பாடங்கள் பயிற்றுவிக்கப்படும் போது அவர்கள் மிகவும் சிரமம் அடைகின்றனர். அதனால் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்ட பள்ளி தேவைப்படு

கிறது என்பதை பஞ்சாப் சங்கம் உணர்ந்தது. எனவே ஆங்கில மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்ட பள்ளியை நடத்துவதற்கு அரசினிடம் அனுமதி நாடியது பஞ்சாப் சங்கம். அனுமதி கிடைத்தது. எனவே நாட்டு விடுதலைக்குப் பின்னர், ஆங்கில மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்ட முதல் கிண்டர் கார்டன் பள்ளியை 1954ல் ஆதர்ஷ வித்யாலயம் என்னும் பெயரில் 36 மாணவியருடன் துவக்கியது பஞ்சாப் சங்கம். நாளடைவில் உயர்நிலை பள்ளி அளவிலும் ஆங்கிலம் பயிற்று மொழியாக்கப்பட்டது- பஞ்சாப் சங்கப் பள்ளிகளில்.

பஞ்சாப் சங்கம் என்றவுடன் பஞ்சாப் மாநிலத்து மக்கள்தான் இதில் அங்கம் பெற்றிருப்பார்கள் என்று எவரும் எளிதில் எண்ணக் கூடும்உண்மைஅதுவல்ல;பஞ்சாப் மாநிலத்தவர் மட்டுமின்றி, அதாவது பஞ்சாபியர் மட்டுமின்றி தமிழ்நாட்டவர்களும், அதாவது தமிழர்களும் இந்தச் சங்கத்தில் இடம்பெற்றிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சங்கம் சமூகப் பணிக்காகத் தன்னை அர்ப்பணித்து வருவது மட்டுமல்ல-சாதி, மத, நிற வேற்றுமையின்றி அனைவருக்கும் நேசக்கரம் நீட்டி உதவுகிறது. வாழ்வில் முன்னேற்றம் ஏற்படுத்துகிறது. நலிந்தவர்களுக்கு நல் வாழ்வு அளித்து வருகிறது.

ஆதர்ஷ வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, குருநானக் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, லஜ பத்ராய் நினைவு மகளிர் வணிக

பஞ்சாப் சங்கத்தின் தலைவர்
ஓய்வு பெற்ற லெப்டினன்ட்
கர்னல் திரு ஜி. எஸ். கில்.



இயல் பல்தொழில்பள்ளி, மகாராணி வித்யாவதி தேவி தொழிற் பயிற்சிப்பள்ளி, லஜபத்ராய் மகளிர் புகைப்படக் கல்வி நிறுவனம், வேலைவாய்ப்புத் தரும் மகளிர் ஆடை தயாரிப்பு நிறுவனம், பல்தேவ்ஜி அறக்கட்டளை அச்சகக் கல்விநிறுவனம், மகளிர் வர்த்தக.மேலாளர் பட்ட மேற்படிப்பு நிறுவனம், குரு நானக் கல்லூரி,சிறுவர் மருத்துவ மனை, ஆதர்ஷ பணிபுரியும் மகளிர் இல்லம்,முதியோர் கல்வி மையம், குடும்ப நல மையம். ஆகியவை இச்சங்கத்தின் பல் வேறு நிலையங்களில் குறிப்பிடத் தக்கவை.

புகைப்படக் கல்வி நிறுவனம் கடந்த 5 ஆண்டுகளாகப் பணியாற்றிவருகிறது. இந்தியாவிலேயே இங்குதான் புகைப்படக் கல்வி குறித்துக் கற்றுத் தரப்படுகிறது. அதுவும், மகளிர்க்குக் கற்றுத்தரப்படுவது சிறப்புக்குரியது. இங்கு பயிற்சிபெற்ற மகளிர், மைய அரசு, மாநில அரசு ஆகியவற்றில் பணியாற்றும் வாய்ப்புப் பெற்று வருகிறார்கள்.

பல்தேவ்ஜி அறக்கட்டளை அச்சகக் கல்வி நிறுவனம், மைய அரசின் சமூக நல வாரியத்தின் உதவியுடன், ஆதரவற்ற-கைவிடபட்ட மகளிர்க்கு 'அச்சுக் கோத்தல்-அச்சுப்படி சரிபார்த்தல்' பயிற்சி வகுப்பை நடத்துகிறது. ஆண்டுதோறும் 20 பெண்டிர் இங்கு பயிற்சி பெறுகின்றனர். பயிற்சி பெற்றுத் தேரும் மகளிர் தனியார் பத்திரிகைகளிலும் அரசு அச்சகங்களிலும் பணியாற்றும் வாய்ப்புப் பெறுகின்றனர்.

இங்கு சிறிய அளவில் ஓர் அச்சகமும் இயங்கி வருகிறது. மைய அரசின் சில துறைகளுக்குரிய அச்சுப்பணிகள் இங்கு அவ்வப்போது நடைபெறுகின்றன.

ஏழை எளிய பட்டதாரிப் பெண்டிருக்கு உதவும் வகையில் வர்த்தக மேலாண்மைப் படிப்பை இச்சங்கம் நடத்தி வருகிறது. ஆண்டு தோறும் 25 பெண்டிர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

இச்சங்கத்தினால் நடத்தப்படும் ஆதர்ஷ வித்யாலயத்தின் மாணவியரும் ஊழியர்களும் மக்கள் நல்வாழ்வில் மிகுந்த அக்கறை கொண்டு, இரண்டு குடிசைப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அங்கு வாழும் மக்களுக்கு நல் வாழ்வுக் கல்வியைக் கற்பிக்கின்றனர். இதற்காகும் செலவு முழுவதும் ஆதர்ஷ பள்ளிகளால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமத்துடன் இணைந்து, வியாசர்பாடியைச் சேர்ந்த குடிசைப்பகுதியில் தொழிற்பயிற்சி பெற்ற ஏழை எளிய மகளிர்க்குப் பயன்படும் வகையில் இரு திட்டங்களைச் செயலாற்றி வருகிறது இச்சங்கம். தையல் தொழிலும் அச்சகத் தொழிலும் 30லிருந்து 35 மகளிர்க்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆறு மாத காலப் பயிற்சியில் சம்பந்தப்பட்ட தொழிலில் அவர்கள் தக்க தேர்ச்சி பெறுவதற்கு வழிவகை செய்யப்படுகிறது. இந்தத் தேர்ச்சி அவர்களுக்கு வெகுவிரைவில் வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது.

இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழகக் கிளையும், தமிழக அரசும் இணைந்து கேளம்பாக்கம், சாளுவங்குப்பம், நெமிலி ஆகிய இடங்களில் உருவாக்கியுள்ள புயற்பாதுகாப்பு இல்லங்களை இச்சங்கம் எடுத்துக் கொண்டு, கடற்கரை ஓரத்து கிராம மக்களுக்கு மருத்துவ வசதிகளைச் செய்வதுடன், தையற்கலைப் பயிற்சி, புத்தக பைண்டிங் செய்தல் ஆகியவற்றைக் கற்றுத் தருகிறது. சிறார் பள்ளி, முதியோர் பள்ளி, இளைஞர் மன்றம் ஆகியவற்றை அமைத்து அவர்களுக்கு உதவி செய்கிறது.

சென்னையிலிருந்து 32 கி.மீட்டர் தொலைவில் மாமல்லபுரம் செல்லும் சாலையில் வாணியஞ்சாவடி என்னும் கிராமத்தில், துயருறும் மகளிர்க்கு மறுவாழ்வு பயிற்சி நிலையம் ஒன்றினை இச்

பொதுச் செயலாளர்
திரு பி. என். தாவன்



சங்கம் ஏற்படுத்தியுள்ளது. ஆதரவற்ற விதவைகள், - மண முறிவு பெற்ற மங்கையர் ஆகியோர் பயன்பெறத்தக்க விதத்தில் தையல் தொழில், அச்சுக்கலை, புத்தக பைண்டிங் ஆகிய தொழில்களை உருவாக்கி 6மாத காலப் பயிற்சியளித்து -அந்தந்த தொழிலில் அவர்கள் திறமை எய்துவதற்கும் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கும் வழிவகை செய்கிறது இச்சங்கம்.

ஆடை தயாரிப்புப் பிரிவு ஒன்று இச்சங்கத்தினால் உருவாக்கப்பட்டு நடத்தப்பட்டுவருகிறது.



லஜ்பத்ராய் மகளிர் புகைப்படக் கல்வி நிறுவனத்தில்...

சமூகத்தில் ஆதரவற்ற பெண்களுக்கு உதவும் வகையில், அவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் விதத்தில் இந்தப் பிரிவு பயன்பட்டு வருகிறது. இதன் உதவியினால் அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கேற்ற பணத்தைத் தாங்களாகவே தேடிக் கொள்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொருவரும் , மாதம் ஒன்றிற்கு குறைந்தது 300 ரூபாய் சம்பாதிக்கிறார்கள். தனியார் ஆயத்த கடைகள், பள்ளிகளின் சீருடைகள் ஆகியவை இங்கு அதிக அளவில் தயாரிக்கப்படுகின்றன.

முதிர்ந்த - ஆதரவற்ற - மணமுறிவு பெற்ற - துன்பமுற்ற- விதவைநிலை பெற்ற மகளிர்க்கு உதவும் வகையில் அலுவலகப் பயிற்சி வகுப்பு நடத்தப்பெறுகிறது. இவர்கள் தங்களின் சொந்தக் கால்களில் நிற்கவேண்டும் என்ற நோக்கத்துடன் இவர்களுக்குத் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்கியல் ஆகியவை கற்றுத்தரப்படுகின்றன. வயது வந்த பெண்கள் 25 பேர் இவ் வகுப்பில் இடம் பெறுகின்றனர்.

சங்கத்தின் ராயப்பேட்டை அலுவலகக் கட்டிடத்தில் தின்கிரா தலிப் அறக்கட்டளையின் கீழ் மருத்துவமனை ஒன்றுசெயல்பட்டு வருகிறது. 5 டாக்டர்கள் இங்கு பணிபுரிகின்றனர். நாளொன்றிற்கு 300க்கு மேற்பட்ட நோயாளிகள் இங்குவந்து இலவசமாகச் சிகிச்சை பெறுகின்றனர். மாத்திரை, மருந்து ஊசி மருந்து ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. பொதுவான உடல் மருத்துவப் பிரிவுடன், கண் சிகிச்சைப்பிரிவு, பல் மருத்துவப் பிரிவு ஆகியவையும் இங்கு உள்ளன. மொத்தத்தில் ஆண்டொன்றிற்கு ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் இம் மருத்துவப் பிரிவினால் பயன் பெறுகின்றனர்.

சிறுவர்களுக்காக ஒரு மருத்துவ மனையை செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சோளிங்க நல்லூரில் நடத்தி வருகிறது இச் சங்கம். சிறுவர் மருத்துவ மனை என்றால் உண்மையிலேயே இது தான் சிறுவர் மருத்துவ மனை. ஆமாம், சிறுவர்களாலேயே இது நடத்தப்பட்டு வருகிறது. எப்படித் தெரியுமா? பஞ்சாப் சங்கத்தின் சார்பில் நடத்தப்பெறும் பள்ளிகளில் பயிலும் அத்தனை மாணவர்களும் ஆளுக்கு ஒரு ரூபாய் அன்பளிப்புத் தந்து, அதன் மூலம் நடத்தப்படுகிறதுஇம்மருத்துவமனை. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் காணாத புதுமை இது!

ஆதர்ஷ் மெட்ரிக் பள்ளியில் உள்ள வேதியியல், இயல்பியல் உயிரியல் ஆய்வுக்கூடங்கள், தக்க வசதிகளுடன் திகழ்கின்றன. கல்லூரிகளில் உள்ள ஆய்வுக் கூடங்களுக்கு நிகராக இவை விளங்குகின்றன.

ஆதர்ஷ் மேனிலைப் பள்ளி மாணவியர் அரசுத் தேர்வில் சிறப்பிடம் வகிக்கிறார்கள். 1981 மார்ச்சில் தேர்வு எழுதிய 223பேரில் 219 பேர் வெற்றி பெற்றுள்ளனர்; அவர்களில் 212 பேர் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர். பத்தாம் வகுப்பு மெட்ரிக் தேர்வு எழுதிய 93 பேரில் 89 பேர் வெற்றி பெற்றுள்ளனர்.

''மாநிலத்திலேயே முதலிடம் பெற்று வெற்றி பெற்ற மாணவியும் ஐந்தாம் இடம் பெற்றுத் தேர்ச்சியுற்ற மாணவியும் எங்கள் பள்ளியைச் சேர்ந்தவர்கள் '' என்று இதன் முதல்வர் திருமதி ராதா அவர்கள் பெருமையுடன் குறிப்பிடுகிறார்.

இந்தப் பள்ளிகளில் பிரெஞ்சு, இந்தி, சமஸ்கிருதம் ஆகியவை இரண்டாம் மொழியாகப் பயிற்றுவிக்கப்படுகின்றன. நான்காம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை இந்திமொழி கற்றுத்தரப்படுகிறது. மும்மொழித்திட்டம் இங்கு செயல்படுத்தப்படுகிறது. தமிழ் மாணவியர் இந்தியைக் கற்கின்றனர். இந்தி மாணவியர் தமிழ் கற்கின்றனர்.



எம்பிராய்டரி வகுப்பும், தையற்கலை வகுப்பும்.

பொது மக்களுக்கும் மாணவியர்களுக்கும் பயன் கிடைக்கும் வகையில் இங்கு ஒரு நூலகம் உள்ளது. மகாராணி வித்யாவதி தேவி நூலகம் மற்றும் படிப்பகம் என வழங்கப்பெறும் இந்நிலையத்தில், காலையும் மாலையும் பொதுமக்கள் வந்து படிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாள்தோறும் 400க்கு மேற்பட்டவர்கள் இப்படிப்பகத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

நூலகத்தில் பல்வேறு வகையைச் சார்ந்த நூல்கள் ஆயிரக் கணக்கில் இடம் பெற்றுள்ளன. பயன்படுத்தும் மாணவர்களின் சுவைக்கேற்ற விதத்தில் பல்வேறு வகையான நூல்கள் இங்கே உள்ளன. இச் சங்கத்தின் பல்வேறு பள்ளிகள்-கல்லூரி ஆகியவற்றைச் சார்ந்த மொத்த மாணவ மாணவியரான 25 ஆயிரம் பேர்களுக்கு இந் நூலகம் பயன்படுவதுடன் நூற்றுக் கணக்கான ஆசிரியர்களுக்கும் ஊழியர்களுக்கும் இது மிகவும் உதவுகிறது.

விஜய நகரத்தைச் சார்ந்த மகாராணி வித்யாவதி தேவி அவர்களுக்குக் கல்வியில் இருந்த பேரார்வத்தின் நினைவாக அவரது பெயரில் புத்தக வங்கி ஒன்று அமைக்கப் பட்டிருக்கிறது. சென்னை நகரில் வசிக்கும் ஏழை எளியவர்களின் குழந்தைகளுக்கு உயர்நிலைப்பள்ளி அளவில் இலவசமாகப் பாடப் புத்தகங்களை வழங்குகிறது இந்த வங்கி. வழங்கப்பட்ட புத்தகங்களைத் திரும்பப் பெற்று, வேறு மாணவர்களுக்கு வழங்கும் முறையை இந்த வங்கி கடைப்பிடிக்கவில்லை என்பது பாராட்டுக்குரியது. இவ்வகையில் சென்னை நகரைச் சேர்ந்த 30 பள்ளிகளில் ஏறக்குறைய 300 மாணவர்கள் இந்த உதவியைப் பெறுகின்றனர்.

இங்கு சிற்றுண்டிச் சாலை (Canteen) ஒன்று உள்ளது. இது தூய்மையுடன் திகழ்வது மட்டுமின்றி - தரமான சிற்றுண்டிகளைத் தயாரிப்பது மட்டுமின்றி - மிகச் குறைந்த விலையில் அவற்றை, மாணவியர்க்கு வழங்குகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

பத்திரிகைத் துறையையும் விட்டு வைக்கவில்லை இந்தச் சங்கம். 'ஆதர்ஷ பத்திரிகா' என்னும் ஆங்கில வார இதழினை வெளியிட்டு வருகிறது. இச்சங்கத்தின் பணிகளையும் இதனைச் சார்ந்த பள்ளிகளின் சாதனைகளையும் எடுத்துச் சொல்லுவதுடன் பல்வேறு சுவையான செய்திகளையும் அறிவியல், பொது அறிவு ஆகியவை குறித்த தகவல்களையும் இந்த ஏடு எடுத்துச் சொல்கிறது.

பஞ்சாப் ,சண்டிகார் ஆகியவற்றில் உள்ள பல்கலைக் கழகங்களில் அஞ்சல் வழிக்கல்வி பயின்று வரும் சென்னை நகர மாணவருக்கு உதவும் வகையில் தொடர்பு நிலையம் ஒன்று இந்த சங்கத்தின் ராயப்பேட்டை அலுவலகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக சென்னையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர் பயன்பெறுகின்றனர்.

இவ்வாறு பல்வேறு கல்விப் பணிகளையும் சமூக நலப்பணிகளையும் மன நிறைவுடன், மனப்பூர்வமான அன்புடன் செய்துவரும் பஞ்சாப் சங்கம் ஓய்வுபெற்ற லெப்டினன்ட் கர்னல் திரு ஜி.எஸ்.கில் (G.S. Gill) அவர்களின் சீரிய தலைமையில் இயங்கி வருகிறது.

பஞ்சாப் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு பி.என். தாவன் அவர்கள் இச் சங்கத்தின் நோக்கம், தொண்டுகள் ஆகியவைக் குறித்துக் கூறும்போது, குறிப்பிட்டார்:

''இந்திய நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்ட காலத்தில் வட இந்தியாவில் பலர் அகதிகளாக்கப்பட்டனர். அகதிகளின் எண்ணிக்கை கோடிக் கணக்கில் பெருகியது. அன்றைய இந்திய அரசு ஒவ்வொரு மாநிலத்திற்கும் இத்தனை அகதிகள் எனத் திட்டமிட்டு, எல்லா மாநிலத்திற்கும் அனுப்பி வைத்தது. தமிழகத்திற்கு 25 ஆயிரம் அகதிகள் வந்தனர். அவர்களில் ஏறத்தாழ 1500 பேர் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர் ஆவர். தமிழக அரசு அவர்களைத் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் தங்கவைத்து நிதியுதவி அளித்து - அவர்களது வாழ்க்கைக்குரிய வசதிகளைச் செய்து - அவர்களை வாழவைத்தது. தொழில் செய்வதற்கு ஒத்தாசை புரிந்து அவர்களில் பலர் இன்று பெரும் தொழிலதிபர்களாகவும் செல்வந்தர்களாகவும் விளங்குகின்றனர்.

''தங்களின் உயர்வுக்கும்வாழ்வின் வெற்றிக்கும் தமிழகமும் தமிழக மக்களும் தந்த ஆதரவு தான் காரணம்என்பதைஅவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்; நன்றி உணர்வு கொண்டிருக்கிறார்கள். அடைக்கலம் தந்த தமிழகத்துக்கு அந்த நன்றியை எவ்வாறு தெரிவிப்பது? நன்றிக் கடனை எவ்வாறு செலுத்துவது? தமிழக மக்களுக்குக் கல்வியும் ஆதரவற்ற -அனாதைகளான - ஏழை எளிய மகளிரின் வாழ்வு சீர்பெறும் வகையில் தொழிற் கல்வியும் அளித்து உதவுவது தான் நன்றி தெரிவிப்பது-நன்றிக் கடன் செலுத்துவது என்பதை நாங்கள் உணர்ந்து அந்தப் பணியில் இறங்கியுள்ளோம்.

''எங்களது கல்விப் பணி தொடர்வதற்கும், அந்தப் பணியில் நாங்கள் நற்பெயர் பெறுவதற்கும் அன்றும் இன்றும் என்றும் தமிழக அரசு எங்களுக்கு



● உரிமைகளைமட்டும் எண்ணிய எந்தச் சமுதாயமும் மேன்மை அடைந்ததில்லை. கடமைகளைக் கருதியவர்களே மேன்மை அடைந்திருக்கிறார்கள். கடமையைச் செய்தால் உரிமைகள் தாமாகவே வந்து அடையும்!

● பிறருடைய துன்பத்தைத் தன்னுடையதாக ஏற்றுக் கொள்வதில் எவன் இன்பமடைகிறானோ அவனே உண்மையான தொண்டன்.

● ஒழுக்கம் என்பது நமது இதயங்களின் தூய்மையில்தான் வேரூன்றியுள்ளது.

● அன்பு என்பதற்கு மதம்-சாதி-இனம் என்கிற வேறுபாடுகள் எதுவும் கிடையாது.

உதவி புரிந்து வருகிறது. நிதி வசதி அளிப்பதிலும், பல்வேறு வகைகளிலும் உதவி செய்து வருகிறது. நாங்கள் செலுத்தவேண்டிய நன்றி நாள்தோறும் தொடர்கிறது''

திரு தாவன் அவர்கள் குறிப்பிட்டவாசகங்கள் ஒருமைப்பாட்டின் அடிப்படையில் உதித்தவை-உள்ளன்பில் எழுந்தவை என்பது தெளிவாகிறது.

திரு தாவன் அவர்களின் நெஞ்சத்தில் ஊடாடி நிற்கும் இந்த உணர்வை, சில நாட்களுக்கு முன்னர் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பஞ்சாப் சங்க விழாவில் கலந்து கொண்டபோது எடுத்துக்காட்டியுள்ளார் என்பது இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதே விழாவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ள ஏனைய தகவல்களை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாகும். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''ராஜ்பவனத்தில் குருநானக் கல்லூரி தொடங்க 10 ஏக்கர் நிலத்தை பஞ்சாபியர் சங்கத்திடம் நம் அரசு அளித்திருக்கிறது. ராணி வித்யாவதிதேவி பொது நூலகத்திற்கு மத்திய அரசிடமிருந்து நிதி உதவி வழங்க நாம் பரிந்துரைத்தோம். மாநில அரசும் இந்த நூலகத்திற்கு மானியங்கள் வழங்கி வந்துள்ளது. குருநானக் கல்லூரிக்குக் கட்டிடங்கள் கட்ட அரசு ரூ. 50 ஆயிரம் வழங்கியுள்ளது. குருநானக் பவன் அமைக்க நாம் 3 இலட்ச ரூபாய் மானியமாகக் கொடுத்துள்ளோம். குருநானக் கல்லூரி ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க மாநில அரசு அக்கல்லூரிக்கு மானியம் வழங்கி வருகிறது. தவிர பஞ்சாபிலுள்ள சங்கம் பல சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் மாநில அரசு உதவிபுரிந்து வருகிறது.



வேதியல் ஆய்வுக் கூடம்.



ஆதர்ஷ வித்யாலயாவின் முதல்வர் திருமதி ராதா.

''ஆகவே நீங்கள்மேற்கொண்டுள்ள பல்வேறு பணிகளில் உங்களுக்கு உதவி புரிய நம் மாநில அரசு எப்போதும் தயங்கியதில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். இனிமேலும் நீங்கள் மேற்கொள்ளும் எல்லாப் பணிகளிலும் நாங்கள் ஆதரவு தருவோம் என்பதை உங்களிடத்தில் உறுதியாகத் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

''தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக பஞ்சாபியர் சங்கம் ஆற்றிவரும் பெரும் பணிக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பாகவும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் தலைமையிலான மாநில அரசின் சார்பாகவும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்!

''உங்கள் சங்கம் ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி மற்றவர்களும் உங்களைப்பின் பற்றுவதற்குக் குன்றின்மேலிட்ட விளக்காய்ப் பொலிவுற என் வாழ்த்துக்கள்''

இவ்வாறு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்களால் பாராட்டப் பெற்ற பஞ்சாப் சங்கம் பார்போற்றும் வண்ணம் பலப்பல பயனுள்ள பணிகளை ஆற்றி, தமிழகத்து மக்களின் நெஞ்சங்களில் தங்கிக் கொலுவோச்சிக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிடுவது மெத்தவும் பொருத்தமாகும்.

# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
# தொழில் வளர்ச்சிக்குத் தேவை
# டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

## டான்சி
**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR



# தீப்புண்ணுக்குத் தீவிர சிகிச்சை!



> தீவிபத்துக்கள் எதிர்பாராமல் ஏற்படுவது மட்டுமல்ல; எதிர்பார்த்தே ஏற்படுத்தப்படுவதும் ஆகும்! எதுவானாலும் சரி; பாதிக்கப்பட்டோருக்குப் போதிய சிகிச்சை அளித்து உயிர் காப்பது எங்கள் கடமை என்கிறார்கள், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே!

'தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்ட வடு'-குறள் நமக்குத் தெரியும். இதன்படி தீயினாற் சுட்ட புண் எல்லாமே உள்ளாறும் தன்மை உடையதா என்றால்... அதுதான் இல்லை!

உயிருக்கே ஆபத்தை உண்டாக்கும் எத்தனைத் தீப்புண்களை நாம் பார்த்திருக்கிறோம்!

பெரு நெருப்புக்கு ஈரமில்லை' என்று கிராமப்புறங்களில் சொல்வார்களே? அதேபோல் பெரு நெருப்புப் புண்களுக்கு மருந்தில்லை என்றே சொல்லலாம். ஆம், சாவே அவ்வாறான புண்களின் அருமருந்தாகிவிடுகிறது !

ஆனால் எல்லாத் தீப்புண்களுமே, அதற்கு ஆட்படுவோரை சாவூருக்கு அழைத்துப்போய் விடுமோ எனில் -''கால் முதல் தலைவரையிலான உடலில், ஐம்பது சதவீதம் பகுதி எப்படிப்பட்ட தீப்புண்ணுக்கு இலக்காகியிருந்தாலும் அரும்பாடுபட்டு ஒருவரைக் காப்பாற்றிவிடலாம். அதற்கு மேலென்றால் அவரை வாழ்வூருக்குத் திரும்பக் கொண்டு வருவது என்பது அவ்வளவு எளிதில்லை'' என்றார் டாக்டர் திருமதி மாதங்கி இராமகிருஷ்ணன்.

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிமருத்துவமனையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு, எச்.வி.ஹண்டே அவர்களால் அண்மையில் துவக்கி வைக்கப்பட்ட 'தீப்புண் அவசர சிகிச்சைப் பிரிவின் தலைமை மருத்துவர் தான் டாக்டர் மாதங்கி இராமகிருஷ்ணன்.

**இதற்குள் நானூறா?**

''இங்கே இப்படியொரு தனிப்பிரிவு அவசியம் தானா?'' என்று கேட்டோம்.



டாக்டர் மாதங்கி இராமகிருஷ்ணன்

''நல்லா கேட்டீங்களே! இங்கேதான் அவசியம். ஏன்னா, இங்கேதான் குடிசைப் பகுதிங்க -சுற்றிலும் அதிகமா இருக்கு. விறகு அடுப்பு, கரி அடுப்பு இதுங்களை அலட்சியமா எரிய விட்டுடுறது; சிம்னி விளக்கைத் தரையிலயோ கீத்துங்களுக்கு அருகேயோ வெச்சிட்டுப் போறது... இதனாலேயெல்லாம் அடிக்கடி இந்தப் பக்கம்தான் தீவிபத்தால குடிசை வாசிங்க பாதிக்கப்படுவாங்க. அதை உத்தேசிச்சே இங்கே இப்படியொரு தனிப்பிரிவு தொடங்கிருக்கோம். போன ஜனவரியிலேருந்து இதுவரைக்கும் அந்த மாதிரி கேஸ்மட்டும் எங்ககிட்டே நானூறுக்கு மேலே வந்திருக்குன்னா பார்த்துக்குங்களேன்!'' என்று நீண்டதோர் பதிலை நமக்களித்தார் அவர்.

''தீவிபத்தால் அதிகம் பாதிக்கப்படுவது ஆண்களா, பெண்களா?''

''சந்தேகமில்லாம பெண்கள் தான் அதிகமாகப் பாதிக்கப்படுறாங்க. ஏன்னா..அடுப்பு வேலைகளை அவங்கதானே சார் கவனிக்கிறாங்க! இதோ, இப்பகூட இந்தப் பிரிவு அட்மிஷனைப் பாருங்களேன், ஐந்து பெண்களும் மூணே ஆண்களும்தானே படுக்கையில இருக்காங்க!''

''வருகிற தீப்புண் விபத்தெல்லாமே எதிர்பாராவிதமாக ஏற்படுவதுதானா?''

**நடத்தையில் சந்தேகமாம்!**

நம்முடைய இந்தக் கேள்விக்கு அளவோடு சிரித்துவிட்டு, டாக்டர் திருமதி மாதங்கி இராமகிருஷ்ணன் இப்படிப் பதில் சொன்னார்: ''தன்னால் ஏற்படறதுதான் எல்லாத் தீவிபத்தும்கிறது இல்லே சார். தனக்கா ஏற்படுத்திக்கிற

**பி.எஸ்.ராஜேந்திரன்**



தீப்புண்ணுக்கு ஆளான பெண்கள் பகுதி

தும் உண்டு. இங்கே வர்ற கேசுங்கள்ல, முப்பத்து மூணு சதவீதம் அப்படி தற்கொலை முயற்சிக்கு ஆளானவங்களாதான் இருக்கு..'' என்று கூறிச் சற்று நிறுத்தி, ஒரு பெருமூச்சோடு படுக்கையொன்றைக் காட்டுகிறார் டாக்டர்-''அதோ பார்த்தீங்களா, அந்தப் பெண்ணோட நடத்தையில புருஷனுக்குச் சந்தேகமாம். அதனால, ஆஸிட்டை வாங்கியாந்து தலையிலேருந்து கால் வரைக்கும் ஊத்திருக்கான் புத்தி சாலி...''

நாம் அனுதாபத்தோடு அந்த பெண்ணைப் பார்க்கிறோம். தலைமுடியிலிருந்து புருவ ரோமம் வரை கருகிப்போய். உடலெல்லாம் ரணகளமாகி மூச்சுவிடவே தடுமாறிக் கொண்டிருக்கிறார் அப்பெண். பார்க்கவே பரிதாபமாக இருக்கிறது.

''எல்லா கேசுமே இப்படின்னு சொல்ல முடியாது. எதிர்பாராம ஏற்படுறதும் நிறைய உண்டு. பம்ப் பண்ற அடுப்பு, கேஸ் சிலிண்டர் இதுங்களைக் கையாளத் தெரியாமே... பலபேர் தீவிபத்துக்கு ஆளாகிறது உண்டு. அந்த மாதிரி அடுப்புங்கள்ல நுணுக்கமா நாம கவனிக்கவேண்டிய சில விஷயங்கள் உண்டு. சமையல்ல கவனமா இருக்கிற நேரத்துல.. அதைக் கவனிக்கத் தவறிட்டா அடுப்பே வெடிச்சிடறது உண்டு. பெண்கள் மட்டும்னு இல்லே — அதோ அந்தப் பெரியவர் கூட அப்படி அடுப்பைப் பம்ப் பண்ற போது விபத்துக்கு ஆளானவர் தான்!''

டாக்டர் காட்டிய திரு. இராமமூர்த்தி என்கிற அந்தப் பெரியவரைப் பார்க்கிறோம். விசாரிக்கிறோம். அடுப்பு வெடித்துநேர்ந்த விபத்தை விவரிக்கிறார். அவர் உடம்பில் பாதிக்கப்பட்ட பகுதிகள், தீவிர சிகிச்சை காரணமாக குணம் பெற்று வருவது தெரிகிறது.

தீப்புண் தீவிர சிகிச்சைப் பிரிவு 24 மணிநேரமும் இயங்கி வருகிறது. முக்கிய டாக்டர்களே பாதிக்கப்பட்டோரை அடிக்கடி கவனிக்கிறார்கள்.

பெண்களுக்காக 7 படுக்கைகளும், ஆண்களுக்காக 5 படுக்கைகளும் கொண்ட இந்தத் தனி வார்டுக்கான வசதிகளுக்காகவும், உரிய உபகரணங்களை வாங்குவதற்காகவும் தமிழக அரசு 2.5 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.

மாம்பழ வியாபாரி மணி



தாஸ், நாகராஜன், கமலா ஜார்ஜ் போன்ற எம்.எஸ். படித்த திறமைமிக்க டாக்டர்களின் நேரடி கவனிப்பிலிருக்கும் இப்பிரிவில், பார்வையாளர் அனுமதி கட்டாயமாக மறுக்கப்படுகிறது.

**தனிக்கட்டடம் தேவை!**

இரவு பகல் எந்நேரமும் டாக்டர்கள் இருக்க வேண்டியிருப்பதால், எல்லோரும் ஷிப்ஃடு முறையில் பணியாற்றுவதாக நமக்குத் தெரிவிக்கிறார் தலைமை மருத்துவர் டாக்டர் திருமதி மாதங்கி இராம கிருஷ்ணன். ''தீப்புண் குணப்படுத்தப்பட்ட பிறகு, பாதிக்கப்பட்ட உடலுறுப்புகளைச் செம்மைப்படுத்த பிளாஸ்டிக் சர்ஜரி செய்ய வேண்டியிருக்கிறது. இதற்காக இவர்களை இந்தக் கட்டிடத்திலிருந்து அடுத்த கட்டிடத்திற்கு அடிக்கடி கொண்டுபோக வேண்டியிருக்கும். அப்படிக் கொண்டு போவது, தீயினால் பாதிக்கப்பட்ட பின் என்னதான் உடம்பு தேறியிருந்தாலும் அவர்களுக்குச் சிரமமாக இருக்கும். ஆகையால், இரண்டு பிரிவும் ஒரே இடத்தில் இருக்கவோ, தனிக் கட்டடம் அமைத்துத் தரவோ வேண்டுமென்று அரசுக்கு எழுதியிருக்கிறோம். மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் சீக்கிரமே அதற்கு உதவுவார் என்கிற நம்பிக்கையும் எங்களுக்கு உண்டு!''

பெரும்பாலும் தலைமை மருத்துவரே இரவும் பகலும் இருக்கவேண்டியிருப்பதால், இன்னும் டாக்டர்களும், செவிலியர்களும் ஒதுக்கவேண்டுமென மேலிடத்திற்கு எழுதிக் கேட்டிருப்பதாகவும் நமக்குத் தெரிவித்தார்கள்.

முதல் படுக்கையில் - உடம்பெல்லாம் ரணமாகி, முகம்மட்டும் புண்ணாகாமல் கிடந்த பெண்மணியொருவரை நெருங்கி விசாரிக்கிறோம் -''ஏம்மா, உன்னாலே பேச முடியுமா?''

''முடியும்க!'' குரல் தெளிவாக ஒலிக்கிறது.

''ஒம் பேரு என்னம்மா?''

''அமுதா..''

''நீ.. படிச்சிகிட்டிருக்கியா?''

அவர் புன்னகை பூக்கிறார். ''எனக்குக் கல்யாணமாகி... ஒரு குழந்தையும் இருக்குங்க!''



அடுப்பு வெடித்து அல்லல்படும் இராமமூர்த்தி

''ஓகோ!... இது...எப்படிம்மா நடந்தது?''

''சமையல்கட்டல.. வேலைசெய்யிறப்ப.... சேலையில தீ பிடிச்சிடுச்சிங்க...! எனக்கு இப்படி ஆகி பத்துநாளாவுது... இன்னும் ஒரு வாரத்துல சாரியாயிரும்!''

அவர் குரல் நம்பிக்கையோடு ஒலிக்கிறது.

''ஒங்க வீடு எங்கேம்மா?

''நாங்கள்லாம் திருச்செங்கோடு. இங்கே அயனாவரத்துல இருக்கோம். என் வீட்டுக்காரர் எஞ்சினீர். அது சரி..நீங்க என்ன பத்திரிகை நிருபரா?''

### வெந்நீரில் வெந்தவர்

''ஆம்'' என்கிற பாணியில் தலை அசைத்துவிட்டு, தீக்காயம் பட்ட ஆண்கள் உள்ள பகுதிக்கு வருகிறோம். அங்கே— அடித்தொடை வரை வெந்து தோலுரிந்து கிடந்த ஒருவரைப் பெருந்துன்பத்தோடு கட்டிலில் இருந்து இறங்கச் செய்து.. வேதனையால் அவர் முனக, நடை பழக்கிக் கொண்டிருக்கிறார் ஒரு டாக்டர்.

''வேண்டாம், வீணா அவரைக் கஷ்டப்படுத்தாதீங்க, இப்படியே ஒரு படம் எடுத்துக்கிறோம்'' என்கிறோம் நாம்.

''நீங்க படம் எடுக்கிறதுக்காக இவரை இப்படி நடக்க வைக்கலே சார். பொதுவாகவே இப்படித் தீப்புண் பட்டவங்களை அடிக்கடி இது மாதிரி 'மூவ்' பண்ண வைக்கலேன்னா தசை இறுகிப்போயிடும், நரம்புகள் ஸ்டிஃப் ஆகி உயிருக்கே ஆபத்தாயிடும். அதனாலே இப்படி அடிக்கடி நாங்க பாதிக்கப்பட்டவங்களை அங்கு மிங்கும் நடக்க வெச்சோ, மூவ் பண்ணவெச்சோ



எஞ்சினீயர் மனைவி அமுதா

ஆகணும், படுக்கையிலேயே வைக்கிறதுதான் தப்பு!'' என்கிறார் டாக்டர்.

அவர் சொல்லுவது நமக்குச் சரி என்றே படுகிறது.

புண்பட்ட அந்த மனிதருக்கு அது எப்படி நேர்ந்தது? அவரிடமே கேட்கிறோம்.

அவர் பெயர் மணி. தன்இளம் மனைவியோடு தள்ளுவண்டியில் மா, கொய்யா போன்ற கனிகளை வைத்து வியாபாரம் செய்வது தொழில். பெரியபாளையத்தம்மன் கோயில் திருவிழாவன்று மும்முரமான வியாபாரம். 'முதலில் நீ வீட்டுக்குப் போய் வெந்நீர்வை. வந்ததும் குளிக்க வேண்டும் என்று மனைவியை அனுப்பியிருக்கிறார். இரவு 9 மணிக்கு மேல் வீடு திரும்பிய அவர், அசதியோடு தரையில் சிறிது படுத்திருக்கிறார். கொஞ்சம் தள்ளி சுவரோரமாக இருந்த அடுப்பில் கொதித்துப் போயிருந்த வெந்நீர்ப்பானை மேல், கூரையிலிருந்து பூனையோ என்னவோ குதித்து, பானை உருண்டு, கீழே படுத்திருந்த மணியின் இடுப்பு வரை வெந்நீர் பரவி....

''இப்படி ஆயிட்டதுங்க ஐயா'' என்று வேதனையோடு சொல்கிறார் அவர்.

நாம் டாக்டரைக் கேட்கிறோம். ''வெந்நீருக்கே இப்படி ஒடம்பு வெந்து போகுமா?''

''ஆமாம், ஆமாம். பெற்றோர் அலட்சியத்தால், கொதிச்சுப் போன குழம்போ ரசமோ ஊத்தி நிறையக் குழந்தைகளே இப்படிக் கொடூரமான பாதிப்புக்கு ஆளாகிறது உண்டே!'' என்கிறார் டாக்டர்.

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், டாக்டர் திருமதி மாதங்கி இராமகிருஷ்ணன் அவர்கள் தலைமையின் கீழ் உள்ள மருத்துவக் குழுவினர், தீப்புண் அவசர சிகிச்சைப் பிரிவில் மேற்கொள்ளும் அரிய பணிகள் அனைத்திலும் வெற்றி பெற வாழ்த்திவிட்டு விடை பெறுகிறோம் நாம்.



தலைமை மருத்துவருடன் மருத்துவக்குழுவினர்




வாழ வழிகாட்டும் வங்கி :

# பவள விழாக் காணும் இந்தியன் வங்கி

செங்கல்பட்டு மாவட்டம், திருநின்றவூர் கடைத் தெருவில் போய்க் கொண்டிருக்கிறோம்.

ஒரு பெட்டிக் கடையில், வியாபாரம் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருக்கிறது. பொருள்களை உடனுக்குடன் கொடுத்து, காசைப் பெட்டிக்குள் போட்டுக் கொண்டிருக்கிறார் ஒரு இளைஞர்.

மூன்று சக்கர வண்டியில் உட்கார்ந்துகொண்டு வியாபாரத்தை மும்முரமாகக் கவனிக்கும் அந்த இளைஞரின் பெயர் திரு கே.பி கஜேந்திரன்; ஊனமுற்றவர் ஆண்டில் அவருக்கு ஒரு உதவி கிடைத்தது. இரண்டு கால்களும் ஊனமுற்ற அவருக்கு ஊன்று கோலாய் வந்தது ஒரு வங்கி. அதுதான் தேசிய உடைமையாக்கப்பட்ட இந்தியன் வங்கி.

இந்த வங்கியின் மூலம் ரூ1000 கடன் உதவி பெற்றுள்ளார் இவர், கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பெட்டிக்கடை வைத்திருக்கும் இவர், ஒரு கட்டடத் தொழிலாளியின் மகன். ஒரு நாளைக்குச் செலவு போக ரூ.5 வருமானம் கிடைக்கிறதாம். இதற்கு முன் வேலை எதுவும் இன்றி, திசை தெரியாமல் தவித்த அவருக்கு, வாழ வழிகாட்டியது இந்த வங்கி.

பவள விழா ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இந்த வங்கியின் கதை சுவையானது.

இப்பொழுது தேசிய உடைமையாக்கப்பட்டிருக்கும் இந்திய வங்கிக்கு ( Indian Bank ) முன்னோடியாக இந்திய வங்கி நிறுவனம் (ஒரு கம்பெனியாக) 1906 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. அச்சமயத்தில் 'அர்பத்நாட் அண்டு கம்பெனி' என்ற பெயருடனிருந்த வங்கி முறிந்த தன் விளைவாக, அதில் பணம் போட்டிருந்தவர்கள் பேரிழப்புக்குள்ளானார்கள்; இதனையடுத்து இந்தியர்களாலேயே நிர்வகிக்கப்பட்டு, அவர்களுக்குச் சொந்தமான ஒரு வங்கியை ஆரம்பிப்பதன் அவசியம் ஏற்பட்டது. அந்நிய வங்கித் தொழில் பிடியிலிருந்து சுதந்திரம் பெற சென்னை வழிகாட்டியது. காலம் சென்ற திரு.வி.க. கிருஷ்ணசாமி அய்யர் இக்கருத்தைச் செயல்படுத்த சென்னையில் ஒரு வங்கியைத் தொடங்கி வைத்தார். இந்தியன் வங்கி லிமிடெட் 1907 ஆம் ஆண்டில் மார்ச் 5-ந் தேதி பதிவு செய்யப்பட்டது. அப்பொழுது அதன் மூலதனம் ரூ. 20 இலட்சம் தான். 1907 ஆகஸ்டு 15ல் அலுவல் தொடங்கப்பட்டது.

**பி.வி.கிரி**

அப்பொழுது பாரி கம்பெனிக் கட்டடத்தில் இதன் அலுவலகம் இருந்து வந்தது. முதன் முதலாக இதன் கிளையொன்று மதுரையில் திறக்கப்பட்டது. பின்னர் சென்னையிலேயே திருவல்லிக்கேணி; எஸ்பிளனேட் (1916), மயிலாப்பூரில் (1919) கிளைகள் திறக்கப்பட்டன.

1909-ல் வடக்கு கடற்கரைச் சாலையில் பெண்டிங்க் கட்டடத்தை இந்த வங்கி வாங்கியது. இங்கு தலைமைச் செயலகம் அமைக்கப்பட்டது. ஆரம்பக் காலங்களில் வைப்பீட்டுத் தொகைகளை (டிபாசிட்) நல்ல உத்தரவாதத்தின் பேரில் கடன் கொடுத்து வந்தது. தொடக்க காலங்களில் தோன்றிய இடையூறுகளைக் கடந்து இந்த வங்கி படிப்படியாக முன்னேறி வந்தது.

1931ஆம் ஆண்டில் பொருளாதார மந்தம் உண்டானபோது இந்த வங்கி பெரிதும் பதட்ட நிலைக்கு உள்ளானது. உலக வர்த்தகம் பாதிக்கப்பட்டு தங்கத்தின் விலை சரிந்தது. பங்கு மார்க்கெட் ஒரு நிலையில் சீராக இல்லை. இந்தியன் வங்கி இந்த இடர்ப்பாடுகளையெல்லாம் தாக்குப்பிடித்தது. பங்குதாரர்கள் மற்றும் வைப்பீடு செய்தவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கியது.

1932ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இந்த வங்கியின் வெள்ளிவிழா நடைபெற்றது. சர். பி.எஸ். சிவசாமி ஐயர் விழாவிற்குத் தலைமை வகித்தார். அப்போது அதன் செலுத்தப்பட்ட மூலதனம் 12,79,280- வைப்பீட்டுத் தொகை (டிபாசிட் தொகை) 2,01,10,000 வழங்கிய கடன் தொகை 71,45,000. 17 கிளைகள் இருந்தன.

1957ல் வங்கியின் பொன் விழாக் கொண்டாடப்பெற்றது. செலுத்தப்பட்ட மூலதனம் 66,50,445, வைப்பீட்டுத் தொகை 35,21,01,965. 125 கிளைகள்.

1969 ஜூலை 19-ந்தேதி இந்த வங்கி தேசியஉடைமை யாக்கப்பட்டது. செலுத்தப்

பட்ட மூலதனம் 88,66,60,000 வைப்பீட்டுத் தொகை 89,65,93,996. கிளைகள் 219.

இந்த வங்கி தேசிய மயமாக்கப்பட்டபின் வைப்பீட்டுத்தொகை 12 மடங்கு அதிகரித்துள்ளது. 1980ஆம் ஆண்டின் முடிவில் டிபாசிட் தொகை ரூ. 1164 கோடி. இதன் கடன் வசதி மற்ற எல்லா வங்கிகளுடன் ஒப்பிடும் போது 10 மடங்கு அதிகரித்துள்ளது.



திரு எஸ். எம். சுப்பிரமணியம்

நிகரக் கடன் தொகையில் விவசாயத்திற்கு மட்டும் 11.4 சதவீதம் கடன் உதவி அளிக்கப்பட்டிருக்கிறது (1980 கடைசி வெள்ளிக்கிழமை நிலவரப்படி) 2இலட்சத்திற்கு மேற்பட்ட விவசாயிகள், மொத்த விவசாயக் கடன் உதவித்தொகையில் 93.5 சதவீதம் பெற்றிருக்கிறார்கள்.



திரு கே. பி. கஜேந்திரன்



காய்கறிக் கடைக்காரா

திரு கே. செந்தூர்ப்பாண்டி

இன்று 3 விவசாய வளர்ச்சிக் கிளைகள் உள்ளன. சித்தூரில் வட்டார கிராம வங்கி தொடங்கப்பட்டுள்ளது. இது 9 மாவட்டங்களையும், 866 கிளைகளையும் கொண்டது.



திரு டி. பி. எஸ். ராஜா

அயல் நாடுகளில் சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளில் இந்த வங்கியின் கிளைகள் உள்ளன. அந்நியச் செலாவணி வசதியுள்ளது. ஹாங்காங்கில் வைப்பீட்டுத் தொகை வாங்கும் கம்பெனியை இந்தியன் வங்கி நிறுவியுள்ளது. இதில் இந்தியன் வங்கியுடன், பாங்க் ஆப் பரோடாவுக்கும், யூனியன் பாங்க் ஆப் இந்தியாவுக்கும் சம கூட்டாண்மை உண்டு. இந்தோனேசியாவில் ஜாகர்த்தாவின் பிடிராமா வங்கிக்கு இந்தியன் வங்கி மேலாண்மை மற்றும் தொழில் நுட்ப ஆலோசனை வழங்குகிறது.

பொதுவாக, சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்களைத் கைதூக்கி, அவர்கள் நல்வாழ்வில் பங்கு கொள்கின்றன தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கிகள். அந்த வகையில், இந்தியன் வங்கியும் தன் பங்கைச் செவ்வனே ஆற்றி வருகின்றது.

சென்னை லாடிஸ் பிரிட்ஜ் பகுதியில் முறுக்கு வியாபாரம் செய்பவர் திரு எஸ்.எம். சுப்பிரமணியம் (59), இவர் 30 ஆண்டுகளாக இத்தொழிலில் ஈடுபட்டுள்ளாராம். சேலத்திலிருந்து சென்னை வந்தபோது -அப்போது அவர் சிறுவனாக இருந்த போது, கடற்கரையில் முறுக்கு விற்றாராம். பிறகு சொந்தமாக தொழில் தொடங்கினால் என்ன என்று எண்ணினார். ஆனால், அதற்குப் பணத்துக்கு எங்கே போவது? வெளியில் கடன் வாங்கலாம் என்றாலோ அதிக வட்டி இருக்கும். அந்தச் சமயத்தில் தான், இவருக்குக் கை கொடுத்து உதவியது இந்த வங்கி.

''இந்த வங்கி எனக்கு ஆயிரம் ரூபாய் கடன் தந்தது. அதை வைத்து தொழிலை வளர்த்துக் கொண்டேன். என் மனைவி



திரு வி. ஆதிகேசவன்

எனக்கு உதவியாக இருக்கிறாள். நாங்கள் தயாரிக்கும் முறுக்குகளை சென்னை குறளகத்திலுள்ள கேண்டீனுக்குச் சப்ளை செய்கிறோம். இப்போது மாதம் எனக்குச் சுமார் ரூ. 500 வருமானம் கிடைக்கிறது. எனக்கு நான்கு மகன்கள். ஒரு மகள். இந்த வருமானத்தில் பிள்ளைகளைப் படிக்க வைத்தேன். இருவருக்குத் திருமணம் கூட செய்திருக்கிறேன். எல்லாவற்றுக்கும் அடிப்படை இந்த வங்கி தான்..''

சென்னை நீலங்கரையைச் சேர்ந்த ஊதுவத்தி தயாரிக்கும்



தையற்கடைக்காரர் திரு எம். வேணு

திரு டி.பி.எஸ். ராஜா என்ன சொல்கிறார்.?

''முப்பது வருஷமா இந்தத் தொழிலைச் செய்து வர்றேன். அதற்கு முந்தி நான் பாய்ஸ் கம்பெனியிலே நடிகனா இருந்தேன். இப்பவும் பகுதிநேர நடிகனா இருக்கேன். இருந்தாலும் எனக்கு நிரந்தர வருவாய் இதன் மூலக் கிடைக்கவில்லை. அதனால் இந்தத் தொழிலில் ஈடுபட்டேன். எங்கள் குடும்பத்தில் எல்லாரும் இந்தத் தொழில்லே ஈடுபட்டிருக்கோம். 20 ரகத்தில் ஊதுவத்தி தயார் செய்கிறோம். வெளியூர்களுக்கு நிறைய சப்ளை செய்கிறோம். இதன் மூலம் மாதம் எனக்கு சுமார் 600ரூபாய் வருமானம் கிடைக்கிறது. இந்த வங்கி எனக்கு ரூ. 2,000 கடன் தந்து உதவியது.''

திருவான்மியூரைச் சேர்ந்தவர் திரு. பி. ஆதிகேசவன் (29) கடந்த எட்டு ஆண்டுகளாகப் பால் வியாபாரம் செய்யும் இவருக்கு இந்த வங்கி ரூ.2000கடன் தந்து உதவியிருக்கிறது. இத்தொழிலில் இவருக்கு இவர் மனைவியும் உதவியாக இருக்கிறார். இப்போது முதலில் இவர் ரூ. 100 சம்பளத்தில் கூலி வேலை செய்தார். இப்போது மாதம் ரூ. 400 வருமானம் கிடைக்கிறது. ''பாங்க் உதவலேன்னா என்னாலே முன்னுக்கு வந்திருக்க முடியாது'' என்கிறார் தற்போது எட்டு கறவை மாடுகளை வைத்திருக்கும் இவர்.

மாதம் ரூ. 75 சம்பளத்தில்





சிற்பி வி. காளாஸ்திரி

ஒரு மளிகைக் கடையில் வேலை பார்த்த திரு கே. செந்தூர் பாண்டிக்கு இப்போது மாதம் ரூ 400 வருமானம் கிடைக்கிறது. சொந்தத்தில் காய்கறிக் கடை வைத்திருக்கும் இவருக்கு வங்கி ரூ. 850 கடன் தந்திருக்கிறது.

இதை வைத்துக் கொண்டு கடையைக் கொஞ்சம் வளர்த்துக் கொண்டுள்ளார்.

இதே போல இந்த வங்கியின் மூலம் ரூ. 1400 கடன் பெற்றவர் தமயோகம் என்னும் இளைஞர் மூன்று சக்கரச் சைக்கிளில் தெரு தெருவாகச் சென்று காய்கறி விற்கிறார் இவர். முன்பு ரூ. 150 சம்பளத்தில் வேலை செய்து கொண்டிருந்த இவருக்கு, இப்போது ரூ. 500 வருமானம் கிடைக்கிறதாம்.

இந்திரா நகரில் தையற் கடை வைத்திருப்பவர் திரு எம்.வேணு என்ற இளைஞர். கடந்த 8 ஆண்டுகளாக இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் இவருக்கு இந்த வங்கி ரூ. 500 கடன் தந்திருக்கிறது. முதலில் கூலி வேலை செய்தவர். இன்று சொந்தத்தில் கடை வைத்திருக்கிறார் என்றால், அதற்கு வங்கி செய்த உதவிதான் காரணம் என்கிறார் இவர்.

செங்கல்பட்டு மாவட்டம், திருமழிசையில் உள்ள ராஜா கோழிப் பண்ணைக்குள் நுழைகிறோம்.

இந்தப் பண்ணை இந்த வங்கியின் உதவியால் நன்கு வளர்ந்து வருகிறது. இரண்டு கூடங்களில் சுமார் 3,500 கோழிகள் உள்ளன. இந்தப் பண்ணைக்காக இந்தியன் வங்கி ரூ. 15,000 கடன் தந்து உதவியிருக்கிறது.

இப்பண்ணையின் உரிமையாளர் இளைஞர் திரு ஆர்.சிவமணி கூறுகிறார்:

''ஒரு நாளைக்கு 1200 முட்டைகள் கிடைக்கின்றன. கோழித் தீவனம் எல்லாம் நாங்களே தயார் செய்கிறோம். நாலு




திரு ஆர். சிவமணி



திருமதி ராஜாபாய்

பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுத்திருக்கிறோம். நாங்கள் நான்கு சகோதரர்கள். முதலில் ஓரிடத்தில் வேலை செய்து வந்தோம். சொந்தமாகத் தொழில் செய்ய முன் வந்தோம். வங்கி உதவியது. வாழ்க்கை நன்றாக நடக்கிறது...''

அதோ! அங்கே ஓடு வேய்ந்த சிறு கடையில், மிக நுண்ணிய வேலைப் பாடமைந்த சிற்பங்கள் தயாராகின்றன! அருகே சென்று பார்க்கிறோம். திரு.வி. காளாஸ்திரி (52) சந்தனமரத்தாலான கடவுள் உருவச் சிலைகளை மிகமிகச் சிறிய அளவில் உருவாக்கிக் கொண்டிருக்கிறார். இவ இவருடைய மகன் திரு டி.கே. மூர்த்தியும் இங்கே வேலை செய்கிறார். அரிசியில் உருவம் அமைத்ததற்காக தந்தை, குடியரசுத் தலைவரிடம் (1970) பரிசு பெற்றிருக்கிறார். சந்தனமர நுண்ணிய வேலைப்பாட்டிற்காக மகனும் குடியரசுத் தலைவரிடம் (1973) பரிசு பெற்றிருக்கிறார். இவர்கள் தயாரிக்கின்ற கலைப் பொருட்கள், விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிடியூட்டுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. இவர்களுக்கு இந்த வங்கி ரூ2000 கடன் தந்து உதவியதன் மூலம் கலையை வளர்க்கின்றது எனலாம்.

செங்கல்பட்டு மாவட்டம், திருநின்றவூர் இந்தியன் வங்கிக்கிளை அலுவலகத்துக்குள் நுழைகிறோம். எங்களுடன் வந்த வங்கியின் உதவி மண்டல அலுவலர் திரு எச். தாயுமானவன் அவர்கள், கிளை மேலாளர் அவர்களை அறிமுகப்படுத்துகிறார்.

திருமதி கிளாடிஸ் வில்லியம்



பிறகு எங்கள் பயணம் மேலும் தொடர்கிறது.

இந்தப் பகுதியில் பால் வியாபாரம் செய்யும் திருமதி ராஜாபாய் அவர்களைச் சந்திக்கிறோம். அவர் கூறுகிறார்.

''முதல்லே நாங்க விவசாயம் செய்திக்கிட்டிருந்தோம். அதிலே நஷ்டம் ஏற்பட்டதாலே, பால் வியாபாரம் செய்ய ஆரம்பித்தோம். முதல்லே ரெண்டு மாடு மட்டுமே இருந்தது. மேற்கொண்டு மாடு வாங்கப் பணம் இல்லே. பாங்க் மூலமா ரூ. 3,000 கடன் வாங்கினோம். இப்ப எங்களிடம் மொத்தம் ஏழு எருமைகள், 4 பசுக்கள் உள்ளன. சிக்கனமா செலவழிச்சி ஒரு 'பிளாட்' கூட வாங்கியிருக்கோம். இப்ப கஷ்டம் இல்லாம குடும்பம் நடக்குது...''

வீட்டிலிருந்து கொண்டே, ஒரு பகுதியில் சிற்றுண்டி விடுதி நடத்தும் திருமதி கோமதியம்மாள், இந்த வங்கியின் மூலம் ரூ. 400 கடன் பெற்றிருக்கிறார். ஓலைக் கூரை வேய்ந்த அந்த இடத்தை மேலும் விரிவுபடுத்தவும் திட்டமிட்டிருக்கிறார்.

'கமகம' வென பிஸ்கட் மணம் மூக்கைத் துளைக்கிறது 'மோப்பம்' பிடித்துக் கொண்டு போகிறோம். திருமதி குளோரி ஜான்சன் நடத்தும் பிஸ்கட் பாக்டரி அது என்று அறிகிறோம்.

''முதலில் இந்தச் சிறிய பாக்டரியை ஆரம்பிச்சோம் பிறகு நடத்த முடியாம நிறுத்திட்டோம். அப்பத்தான் இந்தப் பாங்கு எங்களுக்கு ரூ. 6000 கடன் தந்து உதவியது. இப்பத் தொடர்ந்து நடத்தறோம். 15 பேருக்கு வேலை வாய்ப்பும் கொடுத்திருக்கிறோம். எங்களுக்கு நல்ல வருமானமும் கிடைக்கிறது. நல்ல சமயத்திலே உதவி செய்த இந்தப் பேங்கை நாங்க மறக்கமாட்டோம்'' என்கிறார் தன் கணவருடன் இந்த அம்மையார்.

திருமதி கிளாடிஸ் வில்லியம் என்பவர், வீட்டு வேலைகளோடு பாய் முடையும் வேலையையும் செய்து கொண்டு குடும்பத்தில் துண்டுவிழும் பட்ஜெட்டைச் சரி செய்து, கொள்கிறார். ரூ. 1000 கடன் பெற்ற இவர், ஒரு நாளைக்கு 2 பாய்களைத் தயாரிக்கிறார். ''மாதம் ரூ. 300 வருமானம் கிடைக்கிறது. குடும்பம் கஷ்டம் இல்லாமல் நடக்கிறது'' என்கிறார் இவர்.

கடைத்தெருவில் திரு என். விஸ்வநாதன் என்னும் ஊன



திருமதி குளோரி ஜான்சன்

முற்ற இளைஞர் பெட்டிக்கடை வைத்திருக்கிறார். இந்தக்கடை வைக்க வங்கி ரூ. 400 கடன் தந்து, அவர் வாழ வழி காட்டியிருக்கிறது இவ்வங்கி.



திரு கே. எஸ். ஷெட்டி

இதே போல திரு ஆர். டில்லி என்ற ஊனமுற்றவருக்கும் இந்த வங்கி ரூ. 1000 கடன் தந்து உதவியிருக்கிறது.

சென்னை அம்பத்தூர் தொழிற்பேட்டையில் Grinding Gauges என்னும் சாதனங்களைத் தயாரிக்கும் திரு கே. எஸ். ஷெட்டி அவர்களுக்கு இந்த வங்கி ரூ. 5.6 இலட்சம் கடன் தந்து உதவியுள்ளது. 35 பேருக்கு வேலை வாய்ப்பு தந்துள்ள இவர், இத்தொழில் சம்பந்தமாகச் சான்றிதழ்கள், பரிசுகள் பெற்றுள்ளார்.

இவ்வாறு, ஏற்றத் தாழ்வற்ற சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கிட அரசோடு, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும் ஒத்துழைப்பு தந்து வருகின்றன. அந்த வகையில் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டு மகிழ்கின்றது இந்தியன் வங்கி என்றால் அது மிகையல்ல!

# புதிய நந்தன்

## புதுமைப்பித்தன்

நந்தா சாம்பானை நந்த நாயனாராக்க, சிதம்பரத்தில் அக்கினிப்புடம் போட்ட பின்னர் வெகுகாலம் சென்றது.

அந்தப் பெருமையிலேயே ஆதனூர் சந்தோஷ-அல்லது துக்க-சாகரத்தில் மூழ்கி அப்படியே மெய் மறந்தது.

இங்கிலீஷ் சாம்ராஜ்யம் வந்த சங்கதிகூடத் தெரியாது. அப்படி பட்ட நெடுந் தூக்கம்.

இப்பொழுது, ஆதனூரிலே ரயில்வே ஸ்டேஷன், வெற்றிலைப் பாக்குக் கடை என்ற ஷாப்பு, காப்பி ஓட்டல் என்ற இத்யாதி சின்னங்கள் வந்து விட்டன. எப்படி வந்தன என்ற சமாச்சாரம் யாருக்கும் தெரியாது.

ஆனால், நந்தன் பறைச்சேரியில் விடை பெற்றுக் கொண்ட பிறகு, பறைச்சேரிக்கு என்னமோ கதி மோட்சம் கிடையாது. பழைய பறைச்சேரிதான். பழைய கள்ளுக்கடைதான். ஆனால் இப்பொழுது பழைய வேதியரின் வழி வழி வந்த புதிய வேதியரின் ஆள் மூலம் குத்தகை, சேரிக்குப் புறம்பாக அல்லது தீண்டக்கூடாது என்ற கருத்துடனோ, மரியாதையான தூரத்திலே, ஒரு முனிசிபல் விளக்கு. அதை ஏற்றுவதைப் பற்றி ஒருவருக்கும் தெரியாது. சேரிப் பறையர்கள் ஆண்டையின் அடிமைகள். அத்துடன் அவர்களுக்குத் தெரியாத வெள்ளைத் துரைகளின் அடிமைகள்.

அந்தப் பழைய வேதியரின் வாழையடி வாழையாக வந்த (அவர்கள் குல முறை கிளத்துப் படலம் எந்தப் புராணத்திலும் இல்லை) வேதியர் அக்கிரகாரத்தில் பெரிய பண்ணை. 1,000 வேலி நிலம் இத்யாதி வகையறா. இது மட்டுமல்ல,. ஒரு பென்ஷன் பெற்ற சப்-ரிஜிஸ்திரார் விஸ்வநாத சிரௌதி. இவருக்குப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலும் இறந்து போன ஸனாதன உண்மைகளிலும் அபார நம்பிக்கை. இதையறிந்து நடப்பவர்கள்தான் அவருடைய பக்தர்கள்.

அவருக்கு ஒரு பையன்; பெயர் ராமநாதன். எம். ஏ., படித்துவிட்டு கலெக்டர் பரிட்சை கொடுக்கவிருந்தவன். ஏதோ பைத்தியக்காரத்தனத்தினால் — இது அவர்கள் வீட்டிலும் அக்ரகாரத்திலும் உள்ள கொள்கை-சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுவிட்டான். பையனுக்கு இதிலிருந்து பிரேமையை ஒரு நல்ல சம்பந்தத்தில் ஒழித்துவிடலாம் என்பது சிரௌதியின் நம்பிக்கை. பிள்ளையின் பேரிலிருந்த அபார வாத்ஸல்யத்தின் பயன்.

சேரியிலே கருப்பன் ஒரு கிழட்டு நடைப் பிணம். 60 வயது. பெரிய நயினாரின் தோட்டக்காவல். இதில் ஒரு சுவாரஸ்யம். கருப்பன் சிறுபிராயத்தில் தெரியாத்தனத்தினாலோ, ஐயரவர்கள் இப்பொழுதும் சொல்லிக் கொண்டிருக்கிறபடி, 'பறக்கிறது' னாலோ, ஒரு நாள் இரவு அக்ரகாரத்தில் இருக்கும் தெப்பக் குளத்தில் இறங்கி ஒரு கை தண்ணீர் அள்ளிக் குடித்துவிட்டான். கோயில் தெய்வத்தின் உலாவுப் பிரதிநிதியான சுப்பு சாஸ்திரிகள் கண்டு விட்டார். அக்ரகாரத்தில் ஏக அமளி. அப்பொழுது சிறுவனாக இருந்த விஸ்வநாத சிரௌதி, தன்னை மீறிய கோபத்தில், அடித்த அடி கருப்பனைக் குருடாக்கியது. விளையும் பயிர் முளையிலே தெரியாதா?

ஆனால், சிரௌதி இளகிய மனம்உடையவர். கருப்பனுடைய ஸ்திதிக்கு மிகவும் பரிதபித்து தோட்டத்தில் காவல் தொழிலைக் கொடுத்தார். கல்யாணம் செய்து வைத்தார். தோட்டத்திலே குடிசை கட்டிக் கொடுத்தார். பிறகு தங்கக் கம்பியாகிவிட்டான் என்று எல்லோரிடத்திலும் சொல்லுவதில் வெகு பிரேமை.

அதெல்லாம் பழைய கதை.

கருப்பன் குருடனாகிவிட்டால் குழந்தைகள் பிறக்காதா? முதலில் ஒரு ஆண் குழந்தை. அவன் பெயர் பாவாடை. ஆண்டை சின்னசாமியும் ஏறக்குறைய இதே காலத்தில்தான் பிறந்தான். இராமநாதன் சில சமயங்களில் தோட்டக் காட்டிற்கு வரும் பொழுது பாவாடையுடன் கேணியில் முக்குளித்து விளையாடுவதிலும், மரக் குரங்கு விளையாடுவதிலும் பரம உத்ஸாகம்.

அதெல்லாம் பழைய கதை.

இரண்டு பேரும் வித்தியாசமான இரண்டு சமூகப் படிகளின் வழியாகச்சென்றார்கள். இரண்டு விதமாகக் கண்டார்கள்.

பரமண்டலங்களிலிருக்கும் பிதாவாகிய கர்த்தரின் நீதிகளை,

ஆதனூரில் பரப்பும்படி ரெவரெண்ட் ஜான் ஐயர் ஒரு தடவை ஆதனூர் சேர்க்கு வந்தார். பாவாடையின் புத்தி விசேஷத்தைக் கண்டு அவனைத் தம் மதத்தில் சேர்க்க அனுமதித்து விட்டால், பெரிய பண்ணை மாதிரி ஆக்கி விடுவதாக ஆசை காட்டினார். கருப்பனுக்கு, தன் மகன் 'இங்குருசி' (English) படிக்க வேண்டும் என்று ஆசை. நீட்டுவானேன்? பாவாடை ஜான் ஐயருடன் சென்றான்.

ஜான் ஐயருக்கு ஒரு பெண் உண்டு. மேரி லில்லி என்ற பெயர். நல்ல அழகு.

அவளும் மிஷன் பள்ளிக்கூடத்தில் ஆண் பிள்ளைகளுடன் படித்தாள். எல்லாவற்றிலும் முதல் மார்க் எடுக்கும், பாவாடையிடம் (இப்பொழுது அவனுக்குத் தானியேல் ஜான் என்ற பெயர்) சிறிது பிரியம். நட்பு, வரவரக் காதலாக மாறியது.

கிருஸ்தவ சமுதாயத்தில் இந்துக் கொடுமைகள் இல்லையென்று ஜான் ஐயர் போதித்ததை நம்பி, மனப்பால் குடித்த ஜான் தானியேல், ஒருநாள் ஐயரிடம் நேரிலேயே தன் கருத்தை வெளியிட்டான்.

ஜான் ஐயரவர்களுக்கு வந்துவிட்டது பெரிய கோபம். ''பறக் கழுதை வீட்டை விட்டுவெளியே இறங்கு'' என்று கழுத்தைப் பிடித்து நெட்டித தள்ளினார்.

மனமுடைந்த தானியேலுக்குப் பாழ் வெளியாகத் தோன்றியது உல்கம். இந்த மன நிலைக்கு மதம்தானே சாந்தி என்கிறார்கள். கிறிஸ்தவனாக இருந்தபொழுது வேத புத்தகத்தை நன்றாகப் படித்திருந்தான். சுவாமியாராகப் போய்விட வேண்டுமென்று கத்தோலிக்க மதத்தைத் தழுவி, சுவாமியார் பரிட்சைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட நாவிஸ் பிரதராக (Novice Brother) Father ஞானப் பிரகாசம் மேற்பார்த்த மடத்தில் இரண்டு வருஷங்கள் கழித்தான். சுற்றி நடக்கும் அபத்தங்களும் சில சுவாமியார்களின் இயற்கைக்கு விரோதமான இச்சைகளும், மனத்திற்குச் சற்றும் சாந்தி தராத இருப்புச் சட்டம் போன்ற கொள்கைகளும் அவன் மனத்தில் உலகக் கட்டுப்பாடே ஒரு பெரிய புரட்டு என்ற நம்பிக்கைகளைக் கிளப்பிவிட்டன.

அதனிடமும் விடைபெற்றுக் கொண்டு, திரு இராமசாமிப் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டு விட்டான். அதிலே அவன் ஒரு பெரும் தீவிரவாதி. இப்பொழுது தோழர் நரசிங்கம் என்ற பெயருடன் தனக்குத் தெரிந்த உண்மைகளை, அதில் ஒரு பைத்தியம் பிடித்தது போல், பிரசாரம் செய்து கொண்டு வந்தான்.

ஒரு தடவை தகப்பனாரைக் காண ஆதனூருக்கு வந்தான். பழைய எண்ணங்கள் குவிந்திருக்கலாம், அதைப் பற்றி எனக்குத் தெரியாது. அவனுக்கு இரண்டு உண்மைகள் தெரிநதன. தனக்கும் தனது குடும்பத்தினருக்கும இடையே எண்ணங்களில், செய்கைகளில், ஏன் எல்லாவற்றிலுமே ஒரு பெரிய பிளவு இருக்கிறது என்பது ஒன்று. இன்னும் ஒன்று, தான் சென்ற பிறகு தனக்கு ஒரு அழகான-பறைச்சிகளுக்கும அழகாயிருக்க உரிமையுண்டு—




தங்கை, பதினாறு பிராயத்தாள் இருப்பதையறிந்ததுதான்.

ஆனால், இவர்களை மனிதரின் நிலைமைக்குக் கொண்டுவர எந்தப் பகீரதன் உண்டாகப் போகிறானோ என்ற மலைப்பு ஏற்பட்டுவிட்டது. தனது பிரசங்கங்கள் படித்தவர்களிடத்தில் செல்லும்; இந்த வாயில்லாப் பூச்சிகளிடத்தில்?

ராமநாதன், வீட்டில் செல்லப் பிள்ளை. இட்டது சட்டம். பக்கத்து ஜில்லாத் தலைநகரில் மெட்ரிக்குலேஷன் வரை படித்தான். அவனுடைய படிப்பு வேறு ஒரு தினுசு. கெட்டிக்காரன். பள்ளிக்கூடத்தில் மட்டுமல்ல. சிலரைப்போல பள்ளிக்கூடத்தில் மூழ்கிவிடவில்லை. காலத்தின் சக்தி வசப்பட்டு அதன் நூதன உணர்ச்சிகளில் ஈடுபட்டு இன்பப்பட்டவன்.

சென்னைக்குச் சென்று மேல் படிப்புப் படித்தான்; எம். ஏ., வரையில். அதற்குள் 1930 இயக்கம் வந்தது. தந்தை கலெக்டர் பதவியைவிட்டுத் தடியடி பட்டு, ஜெயிலுக்குச் சென்றான்.

ஜெயிலில் இருந்து வந்ததும் ஹரிஜன இயக்கத்தில் ஈடுபட்டான். தகப்பனாருக்கு வருத்தம் தான். ராமநாதனின் அசையாத மனத்தின் முன் சிரௌதியின் அன்புதான் நின்றது. கொள்கைகள் பறந்தன.

ஒரு தடவை ஆதனூருக்கு வந்திருந்தான். அப்பொழுது கருப்பனின் மகளுக்கு வயது வந்துவிட்டது. நல்ல இயற்கையின் பூரண கிருபை இருந்தது.

ஒரு நாள் இரவு நல்ல நிலா. தோட்டத்திற்குச் சென்றான். இரவு கொஞ்ச நேரந்தான். அதுவும் ஆதனூரில் கேட்க வேண்டுமா?

தோட்டக் கிணற்றில் யாரோ குதிப்பதுபோன்ற சப்தம். ஓடிப் பார்க்கிறான்; ஒரு பெண் உள்ளே. அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. உடனே அவனும் குதித்தான்.

''சாமி, கிட்ட வராதிங்க, பறச்சி, கருப்பன் மவ. சும்மானாச்சிங் குளிக்கிறேன்'' என்ற குரல்.

''சரி, சரி. நீ விழுந்துவிட்டாயாக்கும் என்று நினைத்தேன். ஏறி வா'' என்று கரை ஏறினான்.

''இல்லை, சாமி'' என்று தயங்கினாள், பிறகு என்ன? இயற்கை இருவரையும் வென்றது.



ராமநாதனுக்கு...பிறகு ஒரு மகத்தான பாபம் செய்து விட்டோம் என்ற நினைப்பு..கருப்பன் மகளுக்கு, சின்னப் பண்ணையின் தயவு கிடைத்ததில் திருப்தி.

ராமநாதன் அவளைக் கல்யாணம் செய்து கொள்வதாக வாக்களித்தான். 'அதெப்படி முடியும் சாமி' என்று சிரித்தாள்.

கருப்பனிடம் போய் நடந்ததைச் சொல்லிப் பெண்ணைக் கொடுக்கும்படி கேட்டான். அவனுக்குப் புதிய கொள்கைகள் எப்படித் தெரியும்?

''அது நயிந்தோ மகாப் பாவம் கண்ணானே அப்படிச் செய்யக் கூடாது.''

ராமநாதனுக்கு இடிவிழுந்தது போலாயிற்று.

மகாத்மா காந்தி தென்னாட்டில் ஹரிஜன இயக்கத்திற்காகப் பிரசாரம் செய்ய வந்தார். ஆதனூரில் ஐந்து நிமிஷம் தங்குதல, எல்லாம் ராமநாதனின் ஏற்பாடு. சிரௌதிகள் அவருடன் வாதம செய்ய புராண ஆதாரங்களுடன் தயார். இதில் சிரௌதிகளுக்கு இரட்டை வெற்றி என்ற நம்பிக்கை. ஒன்று காந்தியின் கொள்கையைத் தகர்ப்பது. இரண்டாவது காந்தியின் முன்பே தன் புத்திரனிடம் சனாதனத்தின் புனிதத்தைக் காண்பிப்பது.

தோழர் நரசிங்கம் காந்தியை எதிர்த்துக் கேள்விகள் கேட்க ஆதனூருக்கு வந்தான். தங்கையின் சமாசாரம் தெரிந்துவிட்டது. தகப்பனாரிடம் கலியாணம் செய்து வைத்துவிட வேண்டுமென்றும், அதற்குப் பறையரின் சமுதாயத்தின் கட்டுப்பாட்டால் செய்யமுடியும் என்றும் தெரிவித்தான். தகப்பனாரின் முட்டாள்தனமான நம்பிக்கையைத் தகர்க்க முடியவில்லை. 'பாப்பானின் சாயத்தைத் துலக்கிவிடுகிறேன்' என்று காத்திருந்தான்.

ரயில்வே ஸ்டேஷன் பக்கத்திலிருந்த மைதானத்தில் ஒரு மேடை; கியாஸ் லைட்; இத்தியாதி, இத்தியாதி. பெருங் கூட்டம். வெற்றி கொள்ள ஆசைப்படும் சனாதனமும் அதில் கலந்திருக்கிறது.

கருப்பன் கிழவன், 'மவாத்துமா கிழவரைப் பார்க்க ஆசை. கண் ஏது? அதென்னமோ? குருடருக்கு என்ன செய்ய முடியுமோ?'

தட்டுத் தடுமாறிக் கொண்டு வந்தான். எங்கோ தன் மகன் சப்தம்போல் இருக்கிறது என்று தடுமாறிக் கொண்டு ஓடினான்.

மாலைகள் வந்துவிட்டனவா என்று கவனித்து ஓடிக்கொண்டிருக்கும் ராமநாதன், சற்றுப் பின்னால் வந்தான். குறுக்குப் பாதை வழியாகத் தோழர் நரசிங்கம்' எங்கிருந்தோ வந்து கொண்டிருந்தான்.

நெற்றிக் கண்ணைத் திறந்த சிவபிரான்போல் தலைப்பு வெளிச்சத்தைப் போட்டுக் கொண்டு கோஷித்துக் கொண்டு வருகிறது மதராஸ் மெயில். ஆதனூர் அதன் மரியாதைக்குக் குறைந்தது; நிற்காது. நாற்பது மைல் வேகம்.

என்ஜின் டிரைவர் விசிலை ஊதுகிறான்; கோஷிக்கிறான். குருடன் கம்பி வழியாகவே கடக்கிறான். மனம் குழம்பிவிட்டதா?

தூரத்திலிருந்து இருவர் அவனைக் கண்டுவிட்டார்கள். மகனும் மருமகனும்; இயற்கைச் சட்டத்தின்படி அப்படித்தான். சமுதாயம் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும்.

வேகமாக ஓடிவருகின்றனர்.
வெளிச்சம், வெளிச்சம்.
மூவரும் சேரும் சமயம்.
இழுத்துவிடலாம்.

''ஐயோ!''

ஹதம். ரத்தக் களரி.

மூவரின் இரத்தங்கள் ஒன்றாய்க் கலந்தன; ஒன்றாய்த்தான் இருக்கின்றன.

இதில் யாரை நந்தன் என்பது?

புதிய ஒளியை இருவர் கண்டனர். இருவிதமாகக் கண்டனர்.

இறந்த பிறகாவது சாந்தியுமா?
சமுதாயத்திற்குப் பலிதான். அதை யார் நினைக்கிறார்கள்?
பத்திரிகையில் பெரிய நீண்ட செய்திகள்...

பிறகு ஆதனூரில்....!

['புதிய நந்தன்' முன்பே ஒரு தடவை 'தமிழரசி'ல் வெளிவந்துள்ளது. இன்றையச் சூழ்நிலையில், அதே கதையை மீண்டும் இப்பொழுது வெளியிடுவது மிகவும் 'பொருத்தமுடையதெனக் கருதி வெளியிட்டுள்ளோம் - ஆசிரியர்.]

## தஞ்சைத் தரணியில்

## தமிழ்ப் பல்கலைக் கழகம்



# மனநிறைவு தரும் மகத்தான விழா

செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாள்!

சோழ மண்டலத்திலே, சங்கத் தமிழில் சிந்து பாட சிங்கத் தமிழர் கூட்டம் எழுந்தது!

'எங்கும் தமிழ் எதில் இல்லை தமிழ்?' என்று எக்காளமிடும் மறவர் கூட்டம் எங்கு பார்த்தாலும்!

வங்கக் கடலில் மங்கா ஒளியினூடே தூங்காமல் தூங்குகின்ற தூயவன் அமரர் அண்ணா பிறந்த நாளில்—

கங்குல் நீங்கிட திங்கள்போல் வந்த எங்கள் தந்தை பிறந்திட்ட அந்தப் பொன்னாளில்—

தமிழன்னையின் மகுடத்திலே மாணிக்கக்கல் பதிக்கின்ற வகையிலே, தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நிறைவு விழா!

அன்று காலை பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டிருக்க தஞ்சை பேருந்து நிலையத்திற்கருகில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் மாலை அணிவித்தார். அருகிலுள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாலை அணிவித்த போது, கரவொலி விண்ணை எட்டியது

தஞ்சை அரண்மனையில் தற்காலிகமாகத் தொடங்கப்படவிருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகக் கட்டடத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்து, குத்து விளக்கையும் ஏற்றி வைத்தார். பிறகு, அங்குப் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த தமிழ்ப் பல்கலைக் கழகக் கட்டடத்தின் வரைபடத்தையும் அவர் பார்த்தார்.

புதிய பல்கலைக் கழகக் கட்டடம் தமிழ்நாட்டின் வரைபடம் போன்ற அமைப்பில் இருக்க வேண்டும் என்றும், பாதை காவிரி ஆறுபோல அமைய வேண்டும் என்றும், வெளிநாட்டிலிருந்து ஆராய்ச்சிக்காக வருபவர்கள் தங்குவதற்கு விருந்தினர் விடுதி கட்ட வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருத்து தெரிவித்தார்.

முன்னதாக தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. வி. ஐ. சுப்பிரமணியம் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

''அண்ணா ஒரு பல்கலைக் கழகம்'' என்ற தலைப்பில் நடந்த கவியரங்கில் தேன்மழை பொழிந்தது.

உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் தலைமையில் கவிதைப் பூக்கள் மலர்ந்தன.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் கவிதையைத் தொடங்கி வைத்தார்.

கவிஞர்கள் தங்க அன்புவல்லி, அறிவுமதி, பொன்னடியான், கண்ணப்பன், பாலசுந்தரம், கங்கை மணிமாறன், ஈரோடு தமிழன்பன் ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் பேரறிஞர் அண்ணாவின் புகழைப் பாடி அவையோரைக் களிப்பில் ஆழ்த்தினார்கள்.

பிறகு நடந்தது வழக்காடு மன்றம்'. 'பெரியார் மிகவும் வற்புறுத்தியது இனநலமா? பகுத்தறிவா?' என்பது வழக்காடு மன்றத்தின் பொருள்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் 'இன நலம்' பற்றி திரு திருவாரூர் தங்கராசு அவர்களும், 'பகுத்தறிவு' பற்றி திரு தமிழ்க்குடிமகன் அவர்களும் வாதிட்டார்கள்.

அன்று மாலை நடந்தது நிறைவு விழா!

நிகழ்ச்சித் தொகுப்பு:
—பி. வி. கிரி.





தமிழ்ப் பலகலைக் கழகக் கட்டடத்திற்கான வரைபடத்தினை மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் பார்வையிடுகிறார்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அவர் பேசுகையில், 'ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம், சாதாரண குடிமகனுக்காக எழுதப்பட்ட காவியம்' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார். அவர் தம் உரையில், ''பாரதியார், பாரதிதாசன் கண்ட கனவை நனவாக்கிடும் வகையில் இந்தப் பல்கலைக் கழகம் உருவாகிக் கொண்டிருக்கிறது. தமிழை அரியாசனத்தில் அமைத்திருக்கின்ற காட்சியைத் தஞ்சைத்தரணி கண்டிருக்கிறது' என்றார்.

பிறகு, பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த அறிஞர் பெருமக்கள் உரையாற்றினார்கள்.

ஜனதா கட்சித் தலைவர் திரு முகம்மது இஸ்மாயில் அவர்கள் பேசுகையில், 'உலகம் எங்கும் பரவிக்கிடக்கின்ற தமிழ் மக்களின் கவனத்தை இந்தப் பல்கலைக்கழகம் நிச்சயம் ஈர்த்திருக்கும்'' என்றார்.

தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு ப. நெடுமாறன் அவர்கள் பேசுகையில், ''இது தமிழுக்கென்றே உயர் ஆராய்ச்சி நிலையமாக விளங்கிட வேண்டும்'' என்றார்.

மாண்புமிகு சட்டம்—கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு எஸ். பொன்னையன் அவர்கள் பேசும்போது, ''இது பல்துறை ஆராய்ச்சி மையமாக விளங்கிட வேண்டும்'' என்றார்.

மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு க. முத்தையா அவர்கள் பேசுகையில், ''தமிழில் மருத்துவக் கல்வி—பொறியியல் கல்வி போதிக்க வேண்டும்'' என்றார்.

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு எஸ். என் ராசேந்திரன் அவர்கள் பேசுகையில், பல்கலைக் கழகத்தின் சிறப்பையும், அதனை அமைத்த மாண்புமிகு முதல்வரையும் பாராட்டினார்.

**நிழல் விழாது..**

காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவர் திரு குமரி அனந்தன் அவர்கள் பேசுகையில், "நிழலே கீழே விழாமல் சோழன் கோபுரத்தைக் கட்டினான். அதைப் போல இங்கே சாதி, மதம் என்கிற நிழல்கள் விழாது என்றார்கள். அதற்கு முதல்வரைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்'' என்றார்.



மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகையில், ''நல்ல தமிழாராய்ச்சி நடந்து, அறிவியல் கருத்துக்களை எடுத்துக் கூறுவதில், தமிழை மிஞ்சுவதோ, விஞ்சுவதோ இல்லை என்கிற நிலையைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் படைக்கும்" என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. தா. பாண்டியன் அவர்கள் பேசுகையில், ''தமிழில் முடியுமா? தமிழால் முடியுமா? என்று கேட்பதே தவறு. தமிழனால் முடியுமா? என்று கேட்பதுதான் சரியானது'' என்றார்.

திரு ப.உ. சண்முகம் அவர்கள் பேசுகையில்,'' தமிழன் உயிரோடு இருக்கிறவரை தமிழை அழித்துவிட முடியாது'' என்றார். மற்றும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. ஜி. மூர்த்தி அவர்களும், பார்வார்டு பிளாக்கைச் சேர்ந்த திரு ஆண்டித் தேவர் அவர்களும், தமிழ்ப் பல்கலைக் கழகத்தை அமைத்த முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்.

பல்கலைக் கழகக் கலை அரங்கத்துக்கு, மாண்புமிகு வருவாய்த்

துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

## திரு.வி.க. விருது

முன்னாள் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியரும், தமிழறிஞருமான திரு அ.கி. பரந்தாமனார் அவர்களுக்கு, திரு.வி.க விருது ரூபாய் பத்தாயிரத்தினை மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் வழங்கினார்.

விழாக் குழுவினர் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அழகிய வீணை ஒன்று வழங்கப்பட்டது. விழாவினையொட்டி நடந்த கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவியருக்குப் பரிசுகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.



தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைக்கிறார்.

தந்தை பெரியார் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் நிறைவுவிழாப் பேருரை நிகழ்த்தினார். அவர் பேசுகையில் குறிப்பிட்ட கருத்துக்களாவன:

''தமிழ்ப் பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது என்ற வகையில் மூன்றாவது நாளாக நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சியை முடித்து வைத்துப் பேசுவதற்காக நான் இங்கு வரவில்லை. பின்னால் நடைபெற இருக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு அச்சாரமாகத் தொடங்கி வைக்கும் பேச்சாகத்தான் நான் இங்குப் பேச வேண்டும் என்று கருதுகிறேன்.

## தமிழக மக்களுக்குச் சொந்தமானது

''தமிழைப் பற்றிப் பேசுவதற்கும், தமிழில் எழுதுவதற்கும், தமிழிலே சிந்திப்பதற்கும் ஒரு முடிவு கிடையாது என்பதை இந்த உலகம் உள்ள அளவும் ஏற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு நம்பிக்கை என்பதையும், உண்மை என்பதையும் உணர்ந்திருக்கின்றோம். அந்த வகையில் தான், இந்தக் கருத்தை நாம் ஏற்றுக் கொள்வோம் என்ற வகையில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமையடைகிறேன்.

''எனக்கு மாபெரும் பொறுப்பு ஒன்றைத் தந்திருக்கிறார்கள். பெரியார் அவர்களின் படத்தைத் திறந்து வைக்க வேண்டும் என்று பெரியார் பிறந்த நாளில் பொறுப்பைத் தந்தவர்களுக்கு நான் என்றென்றும் நன்றி சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

15-ந் தேதியிலிருந்து இதுவரையில் தமிழை நன்கு புரிந்து கொண்டவர்கள், அறிந்து கொண்டவர்கள், ஆய்ந்து கொண்டவர்கள் எத்தனையோ கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

''முதலில் நான் தெளிவாக ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். இது எந்தக் கட்சிக்கும் சொந்தமான விழா அல்ல, இது தமிழக மக்களுக்குச் சொந்தமான நிகழ்ச்சி என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இதில் யாருக்காவது பெருமை என்றால் தமிழ் பேசுகின்ற தமிழை ஏற்றுக் கொண்டிருக்கின்ற, தமிழனாக வாழ்கின்ற, தமிழுக்குச் சொந்தக்காரனாக இருக்கின்ற அத்தனைப் பேருக்கும் பங்குண்டே தவிர, ஆட்சியிலே இருக்கின்றோம் என்பதற்காக எங்களுக்கோ அல்லது



மாண்புமிகு எஸ். டி. சோமசுந்தரம்

எங்களோடு நண்பர்களாக இருக்கின்ற சிலருக்கோ அல்லது இதை வாழ்த்துகிறார்கள் என்பதற்காக அவர்களுக்கோ எந்தவித சொந்த பந்தம் கிடையாது. யார் எங்கே இருந்தாலும் தமிழர்கள் எங்கே இருந்தாலும் அவர்கள் அத்தனைப் பேருக்கும் சொந்தமுண்டு என்பதை ஆழமாக, அழுத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பிரச்சினை பெரியது

''நம்முடைய பிரச்சினை மிகப் பெரியது. தமிழைப்பற்றிச் சொல்லும் பொழுது தமிழுக்கு யாரும் விளம்பரம் தேடித்தர வேண்டாம் என்று சொல்லி விடலாம். ஆனால், வேதனையோடு ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 30, 40 வயது வரை ஒரு தமிழன் அதுவரை எழுதப்படிக்க தெரியாதவனாக இருக்கின்றான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவன் தமிழை நன்றாகப் படித்து தெரிந்து கொண்டு பல புத்தகங்களைப் பார்த்து கருத்து விளக்கங்கள் தரக்கூடிய அளவுக்குத் திறமை பெற்ற பிறகு அவன் பொறியியல் திறமை பெற்றவனாக வரவேண்டுமானால் அதற்கான வழிவகை தமிழில் இருக்கிறதா என்றால் இல்லை. படித்தவன் வர முடியாது. வழக்கறிஞராக வர முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது. அதற்குத் தமிழிலே சட்ட விளக்கங்கள் இல்லை.

''லிங்கனைப் பற்றிச் சொல்லுவார்கள்; மரத்தை வெட்டிக் கொண்டிருந்தார் என்றும், ஏதோ வேலை செய்து கொண்டி



மாண்புமிகு க. இராசாராம் — திரு முகம்மது இஸ்மாயில் எம்.எல்.ஏ. — திரு ப. நெடுமாறன் எம்.எல்.ஏ. — மாண்புமிகு கி. பொன்னையன் — திரு க. முத்தையா

ருந்தார் என்றும், திடீரென்று ஒருநாள் இந்த வேலை வேண்டாம். நான் படித்து வக்கீலாக விரும்புகிறேன் என்று படித்துப் பட்டம் பெற முடிந்ததென்று. இன்று தமிழனால் அப்படிச் செய்ய முடியுமா?

''தமிழ் தெரிந்த ஒரு குடிமகன் இன்றைய தினம் பல்வேறு தொழில்களைப் பற்றி தெரிந்து கொள்ள முடியுமா என்றால் தமிழில் இல்லை. இதைவிட வேறு வெட்கக் கேடு இல்லை. இதை நாம் தலைகுனிவோடு ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்றாலும், நாம் இந்த உணர்வை யாருக்காவது ஏற்படுத்த வேண்டுமென்றால் நம்முடைய மூதாதையர்கள் எப்படி இருந்தார்கள்? அவர்கள் என்னென்ன திறமையோடு இந்தத் தமிழை நாட்டுக்குப் பயன்படுத்தினார்கள் என்றும் நாம் சொல்லித்தான் தீரவேண்டி இருக்கிறது.

## எனது பேராசை

''இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் நான் கனவு கண்டு கொண்டிருப்பது பல்வேறு கலைகளெல்லாம் அதற்குள் இணைத்து அதை ஒன்றுபடுத்தி உலகெங்கும் சொல்லிக் கொடுக்கும் வகையில் அந்தப் பணியைச் செய்யக்கூடிய திறமையைத் தமிழர்களுக்குக் கொடுக்க இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகம் உதவ வேண்டும் என்பது எனது பேராசை யாகும்.

''நான் 15-ந் தேதி சொன்னதை அழுத்தமாகச் சொல்கிறேன். இதற்குத் துணைவேந்தராக இருக்கிற திரு சுப்பிரமணியம் அவர்களும், முத்தமிழ்க் காவலர் அவர்களும், திரு குழந்தைசாமி போன்றவர்களெல்லாம் எந்த அளவு அக்கறை காட்டினார்கள் என்பதையும், அதன் விளைவு இந்த இந்தப் புலங்கள் என்று பிரித்துப்பார்க்க முடிகிறது என்பதையும் எண்ணி அவர்களுக்கு நன்றியும், வாழ்த்தும், பாராட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் குழு தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு இருக்கும். அந்தக் குழு யோசனைகளைச் சொல்லிக் கொண்டே இருக்கும். அந்தக்குழு கலைக்கப்படமாட்டாது. அந்தக் குழு தன் பணியைச் செய்து கொண்டே இருக்க வேண்டும் என்பது தமிழக அரசினுடைய முடிவு.



மாண்புமிகு எஸ். என். இராசேந்திரன் — திரு ஆண்டித்தேவர் எம்.எல்.ஏ. — மாண்புமிகு கே. ஏ. கிருஷ்ணசாமி — திரு தா. பாண்டியன் — திரு ப. உ. சண்முகம்



திரு குமரிஅனந்தன் எம்.எல்.ஏ.,

''ஒருவர் சொன்னார், நாங்கள் 600 ஏக்கர் வேண்டுமென்று சொன்னோம். 1000 ஏக்கர் ஒதுக்கியிருக்கிறார் என்று சொன்னார். அதுகூடப் போதாது என்பது என் பேராசை. ஏனென்றால் ஒவ்வொரு புலங்களும் தனித்தனியாக இருந்துவிட வேண்டும். ஓட்டலில் உணவு அருந்தும் இடம் போல அமைந்து விடக் கூடாது. அவர்கள் பணிகளைச் செய்து முடித்த பின் கூடிப் பேசத் தனியிடம் இருக்க வேண்டும். பஸ் நிறுத்த தனி இடம் இருக்கவேண்டும். கடைகள் இருக்க வேண்டும். ஆனால், வேறு கடைகள் அங்கு இல்லாமல் நாம் கவனித்துக் கொள்ளவேண்டும்! இதையெல்லாம் நான் சொல்லக் காரணம் நிலைமைகள் நம்மை வற்புறுத்தினாலும் எச்சரிக்கையாகச் சில காரியங்களைச் செய்யவேண்டும், செய்ய முடியும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

''பெரியார் படத்தைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றுவார் என்று சொன்னார்கள். எனக்கு அந்தச் சிறப்பு இல்லை. சிறப்புரை ஆற்றுவதைவிட, பேசியவர்களின் சிறப்பைப் பற்றிக் கூறுவது நல்லதாக இருக்கும்.

**இறுதி என்பது தமிழுக்கு இல்லை!**

''இது இறுதிக் கூட்டம் என்பது இல்லை. இறுதி என்பது தமிழுக்குக் கிடையாது. தமிழ்ப் பெருங்குடி மக்களை நான் கை கூப்பி வணங்கிக் கோருவது ஒன்று தான. தயவு செய்து இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குள் எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசியலை நுழைய அனுமதிக்காதீர்கள் என்று பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அதே போல் 15-ந் தேதி சொன்னதை மீண்டும் சொல்கிறேன். சாதி மதம் என்ற எண்ணமே இங்கு வரக்கூடாது. வந்தால் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியும் கெட்டுப்போகும். தமிழர்களின் வாழ்வும் பாழ்பட்டு போகும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். மூன்றையும் உள்ளே நுழைய விடாதீர்கள். மதம் வந்தால் ஜாதி வந்துவிடும். இரண்டும் வந்தால் அரசியல் தானாக வந்துவிடும். ஆனால், இதைப் போன்ற புனிதமான தமிழகக் கோயில் என்று சொல்லக்கூடிய பல்கலைக் கழகத்தில் எதையுமே நுழைய விடாதீர்கள்.

திரு ஜி. மூர்த்தி எம்.எல்.ஏ.,



''சமஉணர்வு, சமசந்தர்ப்பம், சமவாய்ப்பு, சமத்துவம், சமதர்ம நிலைமை இவைகளை வைத்தே அந்த அடிப்படை இருக்க வேண்டும் என்று சொல்ல விழைகிறேன.

''இந்த நல்ல நேரத்தில் தமிழைப்போற்றி, தமிழை வளர்த்து, தமிழைப் பாராட்டி, தமிழனாக வாழ்ந்து, தமிழின் பெருமையைக் காப்பாற்றி மற்றவர்கள் நம்மைப் பின்பற்றக்கூடிய அளவிற்குத் தமிழை உயர்த்துகின்ற அளவிற்கு நாம் ஒன்றுபட்டு எந்த மனக் கசப்பிருந்தாலும் வேறுபாடு இருந்தாலும் தமிழ் வெற்றி பெற்றாக வேண்டும். தமிழர் வாழ்ந்தாக வேண்டும் என்ற வகையிலே ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தையும் வைத்து இந்த அளவு ஒத்துழைத்தவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.''

நிறைவு விழாவிற்குப் பின் காவல் துறையினரின் கரக ஆட்டமும், தலைமைச் செயலக மன்றத்தின் 'குடவாயில் கோட்டம்' என்னும் வரலாற்று இலக்கிய நாடகமும் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் முன்னிலையில் சிறப்பாக நடந்தது.

மூன்று நாள் - முத்துப் பந்தலில் முத்தமிழ் முழங்கியது!

முப்பெரும் விழாவில் முதுபெரும் புலவர்கள் ஆற்றிய உரை மூத்த குடியின் மேன்மையினை உணர்த்தியது!

பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தகும். இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க விழா மட்டுமா அன்று நிறைவு பெற்றது? நம் மனமும்கூட அல்லவா?



# தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் வி.ஐ. சுப்பிரமணியம் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலைச் சேர்ந்தவர். அவருக்கு வயது 55.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் முதுகலைப் பட்டம் (எம்.ஏ.) பயின்ற அவர் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகவும் பணியாற்றி இருக்கிறார்.

பின்னர், 1954-ஆம் ஆண்டில் கேரளப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக நியமிக்கப்பட்டார். 1955–57ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் டாக்டர் பட்டம் பெற்றார். மீண்டும் 1958 முதல் 1966 வரை கேரளப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தார். அதற்குப் பின்னர் கேரளப் பல்கலைக் கழக மொழியியல் துறைத் தலைவராக இருந்து வந்தார். திராவிட மொழியியல் துறையைத் தோற்றுவித்த திரு பி. சுப்பிரமணியம் அவர்கள் அத்துறையின் ஆலோசகராகவும், பொறுப்பாளராகவும் இருந்தார்.

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

**18—8—81**

மக்கள் மத்தியில் ஒற்றுமையை உருவாக்க விடுதலைத் திருநாளில் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆலயங்களில் ஆதிதிராவிட மக்கள் உள்ளிட்ட 10 இலட்சம் பேர்களுக்குப் பொது விருந்து அறநிலையத் துறையின் சார்பில் வழங்கப்பட்டது.

விவசாய கூலித் தொழிலாளர்கள் 28 ஆயிரம் பேர் உள்பட 2 இலட்சம் பேருக்கு இந்த ஆண்டு முதியோர் உதவிப் பணம் வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் அறிவித்தார்.




**19—8—81**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வட்டாரங்களிலும் துணைப் பதிவு அலுவலகங்கள் அமைக்கப்படும் என மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் (பென்ஷன்) தருவதற்கு வகை செய்யும் சட்டம் ஒன்றினை விரைவில் தமிழக அரசு கொண்டு வரும் என்றும் இதற்கான முதலீட்டையும் அரசு அதிகரிக்கும் என்றும் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

**20—8—81**

ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு ''படிப்படியாக ஒரு மொத்தத்தொகை'' தருவது பற்றி அரசு ஆலோசித்து வருவதாக மாண்புமிகு நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்தார்.

ரப்பரை அடிப்படையாகக் கொண்ட 17 வகையான சிறுதொழில்கள் குமரி மாவட்டத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

உடல் ஊனமுற்ற-ஆதரவற்ற முதியோர்க்கு-பார்வையற்றோருக்கு பென்ஷன் தொகையும் வாரம் ஒரு கிலோ அரிசியும் அவர்களின் வீடு தேடி வரும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்தார்.

தொகுப்பு:
ஆனந்தன்

**21—8—81**

ரூபாய் 76 இலட்சம் செலவில் தர்மபுரியில் கட்டப்பட்டுள்ள எண்ணெய்த் தொழிற்சாலையைத் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகத் தலைவர் திரு லியாகத் அலிகான் திறந்து வைத்தார்.

**23—8—81**

'எச். எம். டி.' நிறுவனத்தோடு



இணைந்து மின்விளக்குத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்க 'டான்சி'யின் சார்பில் ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருவதாக மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

## 24—8—81

தமிழகத்தின் மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 4,82,97,456 என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்தார்.

''ஆதிதிராவிட மக்கள் அதிகமாக வாழும் கிராமங்களில் குறைந்தது இரண்டு கிராமங்களையாவது ஆலயங்கள் தத்து எடுத்துக் கொள்ள வேண்டும்' என்று அரசு ஆணையிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அரிசி கையிருப்பு போதிய அளவு இருக்கிறது. இதில் மத்திய அரசின் ஒதுக்கீடும் ஓரளவுக்கு இருக்கிறது. ஆகவே அரிசி விலை உயர்வைக் கட்டுப்படுத்த முடியும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்தார்.

ஏழை விவசாயிகளுக்கு ரூ. 72 கோடி பயிர்க்கடன் வழங்க அரசு ஏற்பாடு செய்துள்ளது. கடனைத் திருப்பிச் செலுத்தியதால் வட்டிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்ட சிறு விவசாயிகளுக்கும் மீண்டும் இந்தத் தொகை கொடுக்கப்படுகிறது என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## 25—8—81

தமிழக அரசில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு திருமணத்திற்காக வழங்கப்படும் முன் பணம் ரூ. 3 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல தங்கக்கட்டுப்பாடு சட்டத்தினால் வேலை இழந்த தொழிலாளி அல்லது அவர் மகன்கள் அல்லது திருமணமாகாத பெண்களுக்கு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் முன் உரிமை கொடுக்கும் சலுகை 27—2—81 முதல் மேலும் இரண்டு ஆண்டுக்கு நீட்டிக்கப்படும். இதற்கான வயது வரம்பு 45 ஆக அனுமதிக்கப்பட்டுள்ளது என்று அரசு, ஆணை பிறப்பித்துள்ளது.

சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் 4-ம் பிரிவு ஊழியர்கட்கும் தொழிலாளர்கட்கும் அவர்கள் பணி செய்கிற காலத்தில் இறந்தால் ரூ. 10 ஆயிரம் கொடுக்கும் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற அரசு ஆவன செய்யும் என மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் அறிவித்தார்.

## 29—8—81

500 வீடுகளுக்கு ஒரு நுகர்பொருள் வாணிபக் கழகக் கடை அமைக்க அரசு பரிசீலனை செய்வதாக மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் அறிவித்தார்.

மதுரை மாவட்டம் பாளையத்திற்கு அருகே ஆண்டு ஒன்றுக்கு 4 இலட்சம் டன் உற்பத்தித் திற ் கொண்ட சிமெண்ட் ஆலை ஒன்றை ரூ. 34 கோடி செலவில் நிறுவுவதற்குத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது என்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

அரசு நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்திருந்த தனியாரிடமிருந்து 1344 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

## 1—9—81

வேலையில்லாமல் இருக்கும் பொறியாளர்களுக்குச் சொந்தமாகத் தொழில் நடத்த உதவும் வகையில் பொறியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு பரிசீலனை செய்து வருகிறது.

ஆசியாவிலேயே இரண்டாவதாக கோவை அருகே ரூ. 3 கோடி செலவில் செயற்கை வைரத் தொழிற்சாலை துவங்கப்பட உள்ளது என்று அதன் நிர்வாக இயக்குநர் திரு எம்.எஸ்.எம்.ஷேக் அறிவித்தார்.

தமிழகத்திலுள்ள மாநகராட்சிகள் எல்லாம்சேர்ந்து விளையாட்டுப்போட்டிகள் நடத்துவது போல, அடுத்த ஆண்டு முதல் நகராட்சி மன்றங்களையெல்லாம் சேர்த்து விளையாட்டுப் போட்டி நடத்தலாம் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் அறிவித்தார்.

## 2—9—81

திரைப்படங்கள் தயாரிக்க போதுமான தகுதிகள் இருந்து நிதிவசதி இல்லாதிருந்தால் அத்தகைய தயாரிப்பாளர்களுக்கு நிதியுதவி செய்ய ''திரைப்பட நிதியுதவிக் கழகம்'' என்ற அமைப்பினை தமிழகத் அரசு ஏற்படுத்தியிருக்கிறது. இந்தக் கழகம் முறைப்படி அமைக்கப்படும் வரை செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் இதன் தனி அதிகாரியாக இருப்பார்.

## 3—9—81

ஆதிதிராவிட மாணவர்கள் மற்றும் பின்தங்கிய மாணவர்கள், படிப்பு உதவித் தொகை பெறுவதற்கான வருமான வரம்பை தமிழக அரசு உயர்த்தியுள்ளது. ஆதிதிராவிடர்கள் பழங்குடியினரைப் பொறுத்தவரையில் 3,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாகவும் பின்தங்கிய மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு இந்த வகுப்பினரைச் சேர்ந்த பெற்றோர்களின் மாத வருமான வரம்பினை 2500 ரூபாயிலிருந்து 5000 ரூபாயாகவும் உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## 4—9—81

தமிழக அரசில் பணிபுரியும் ஊழியர்கள் தாங்களாகவே ஓய்வுபெற விரும்பினால் 50 வயது ஆகி இருக்கவேண்டும். அல்லது 25 ஆண்டு காலம் பணியாற்றி இருக்கவேண்டும் என்ற விதியை மாற்றி அடிப்படை ஊழியர்களுக்கு 55 வயது ஆகி இருக்க வேண்டும்-மற்ற

ஊழியர்களுக்கு 50 வயது அல்லது 30 ஆண்டு காலம் வேலைபார்த்து இருக்க வேண்டும் என்ற திருத்தம் 30.11.79 முதல் நடைமுறைக்கு வருகிறது.

தமிழகத்தில் 1500 புதிய பஸ்கள் விட இருப்பதாகவும் சராசரி மாதம் 100பஸ் வீதம் இதுவரை 600 பஸ்கள் விடப் பட்டிருப்பதாகவும் மாண்புமிகு போக்கு வரத்துதுறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் அறிவித்தார்.
பெரிய விவசாயிகளுக்கான மின்கட்ட ணம் யூனிட்டுக்கு 16 காசுகளில் இருந்து 15 காசுகளாகவும் ,சிறிய விவசாயிகளுக் கான மின்சாரக் கட்டணம் 14 காசுகளி லிருந்து 12 காசுகளாகவும் ஒருங்கிணைந்த மின்கட்டணமாகக் குறைக்கப்படுகிறது. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு மின் வாரியத்துக்கு 5 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்றாலும் விவசாயிகளின் நலன் கருதி அரசு இம்முடிவை எடுத் துள்ளது என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தார்.

## 5—9—81

இந்த ஆண்டு முதல் தொடக்கப்பள்ளி களில் 'நர்சரி' கல்வி தொடங்கவும் முத லில் குழந்தைகள் காப்பகங்களை நர்சரி பள்ளிகளாக மாற்றவும் அரசு திட்ட மிட்டிருப்பதாகவும் மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் திரு செ. அரங்க நாயகம் அவர்கள் அறிவித்தார்.

ஏர்க்காடு, மாமல்லபுரம், மண்டபம், பிச்சாவரம், ஒகனேக்கல், கொடைக் கானல், உதகமண்டலம், ராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் ரூ. 53,24,000 செலவில் இளைஞர் விடுதி யும் ரூ. 40 இலட்சம் செலவில் மாமல்லபுரத்தில் திறந்தவெளி அரங்க மும் அமைக்கப்படும் என்று மாண்புமிகு செய்தி சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித் தார்.

ரப்பர் கலந்த கயிறு தயாரிக்கும் தொழிற் சாலை ஒன்று தஞ்சை மாவட்டத்தில் துவங்கப்படும் என்றும் கைவினைப் பொருள் வளர்ச்சிக் கழகச் சார்பில் மலேசியாவுக்கு 1 இலட்சம் செலவில் திருக்குறள் பதிக்கப்பட்ட சலவைக் கற்கள் தயாரிக்கப்பட்டு அனுப்பப் படவிருப்பதாகவும் மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்தார்.

குறைந்த வாடகைக்கு விடப்பட்டுள்ள கோவில் நிலங்கள், வீடுகள் ஆகியவற் றின் ஒப்பந்தங்களை ரத்து செய்ய விரை வில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

## 8—9—81

உலக வங்கியின் உதவியுடன் 500 நீர்ப் பாசன ஏரிகள் 120 கோடி செலவில் நவீனப்படுத்தப்படும் என்று மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு கே. ராஜா முகமது அறிவித்தார்.

## 9—9—81

தமிழகத்தில் 55 ஆயிரம் கைவினை ஞர்கள் தமிழ்நாடு கைத்திறன் தொழில் கள் வளர்ச்சி இணையகமான ''பூம் புகார்'' நிறுவனத்தின் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர் என்று மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

# வழி காட்டும் தமிழகம்

## தமிழக அரசுக்கு மத்திய திட்டக்குழு பாராட்டு

"திட்டங்களை நிறைவேற்றுவதில் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டும் வகையில் தமிழக அரசு செயல் படுகிறது'' என்று மத்திய திட்டக் குழு பாராட்டியுள்ளது.

மத்திய அரசின் திட்டக்குழு உறுப்பினர் திரு முகமது பசல் தமிழக அரசின் திட்டங்கள் பற்றித் தலைமைச் செயலகத்தில் 22.8.81 அன்று ஆலோசனை நடத்தினார். இக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தமிழகத் திட்டக்குழுத் தலைவர் திரு கே. கார்த்திகேயன் அவர்கள், தலைமைச் செயலாளர் திரு கே. திரவியம் அவர்கள், திட்டக்குழுத் துணைத் தலைவர் திரு டி. கே. சீனிவாசன் அவர்கள் மற்றும் அனைத்துத் துறைச் செயலாளர்கள், உயர் அலுவலர்கள் பங்கு கொண்டனர்.

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மத்திய திட்டக் குழு உறுப்பினர் திரு முகமது பசல் அவர்கள் தமிழக அரசை வெகுவாகப் பாராட்டினார்.

''பல்வேறு திட்டங்களைத் தமிழக அரசு மிகச் சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறது. மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டும் வகையில் தமிழக அரசு செயல்பட்டிருக்கிறது; குறிப் பாக கிராமப்புற குடிநீர்த் திட்டம் மற்ற மாநிலங் களில் இல்லாத திட்டமாக இருக்கிறது. இதைப்போல கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலைத் திட்டம் இந்தியா வுக்கே முன்னோடியான திட்டம். 1984-ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தில் எந்த ஒரு குடியிருப் பிலும் குடிநீர் வசதி இல்லை என்ற நிலை இருக்காத அளவுக்குத் தமிழக அரசு திட்ட மிட்டுச் செயல்படுகிறது. தமிழகம் முன்னேற் றத்தை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது என திரு,முகமது பசல் அவர்கள் தெரிவித்தார்.

இப்பகுதிக்கு நூல்கள் அனுப்ப விரும்புவோர், ஒவ்வொன்றிலும் இரண்டு படிகள் அனுப்பவேண்டும். சாதிமதங்கள்-அரசியல் தொடர்பானவை ஏற்கப்பட மாட்டாது.



# நூல் நயம்

**யாப்புநூல்**
**(பாவும் உரையும்)**

நூற்பா விரிவுரை:
த. சரவணத் தமிழன்
பொருளுரை: மு. கனகசபை
வெளியீடு:
இயற்றமிழ்ப் பயிற்றகம்
திருவாரூர்-610 002
விலை ரூ. 8-00

இந்த நூற்றாண்டில் தமிழில் ஏற்பட்டுள்ள ஏற்ற மாற்றங்களை இணைத்து, ஐந்திலக்கணங்களைப் புதுப்பிக்கும் நோக்கத்தோடு, 'தமிழ் நூல்' எழுதிய ஆசிரியர் குழுவினர் வெளியீடே இந்த யாப்பு நூல்.

ஆழ்ந்து ஆராய்ந்து இதனை உருவாக்கப் பத்தாண்டுகளுக்கு மேல் ஆயிற்றென முன்னுரை சொல்வது முழு நூலையும் படித்தபின் உண்மையாகத்தான் இருக்குமென எண்ணச் செய்கிறது. யாப்புக்கு மட்டும், இருபதுக்கு மேலான நூற்கள் உள்ளன. ஆனால், அவையாவும் ஒரே தன்மைத்தாய் இருக்கின்றனவே அன்றி, இடையிடையே தோன்றிய இலக்கிய யாப்பு மாற்றங்களின் நிறை - குறை பற்றி விளக்குவதாகவோ விமர்சிப்பதாகவோ இல்லை. அக்குறை இல்லாமல் ஐம்பது விழுக்காடு மாற்றங்களை இந்நூல் செய்கிறது.

மரபுக் கவிதைகள் மட்டுமன்றி புதுக் கவிதைகளும், திரைப்படப் பாடல்களும் கூட இலக்கணச் சல்லடையால் இந்நூலில் சலிக்கப்பட்டுள்ளது ஒரு புதுமை. கடைசியாகப் பிழை திருத்தத்திற்கென ஐந்தாறு பக்கங்களை ஒதுக்கியிருப்பது ஒரு குறை!

மொழியாராய்ச்சியில் பெரு விருப்பம் கொண்டோர்க்கு இந்நூல் கனுவகன்ற செங்கரும்பு.

**உணர்ச்சிப் பூக்கள்**

ஆசிரியர்: பி. வேலு
வெளியிட்டோர்: செந்தில் பதிப்பகம், பாரதி இல்லம்,
தார மங்கலம்,
சேலம் மாவட்டம்,
விலை ரூ. 6-00

பிரச்சினைப் பூக்கள் மேடைப் பூக்கள், நகைப் பூக்கள் என—புதுக் கவிதைகளின் பூக்காடாகத் திகழ்கிறது இந்த நூல்.

சமுதாயத்தின் மீதான ஆழ்ந்த கவனிப்பு மட்டுமல்ல, நூலாசிரியரின் இதய வெளிப்பாடுகள், புதிய வேள்வியின் புகைப்படங்களாக நமக்குத் தெரிகின்றன. பாடல்களின் மூலம் இவர் காட்டும் பாதை, கருத்துக்களின்மூலம் இவர் தொடரும் பயணம் எல்லாம் புதிதானவை.

'எழுத்து பிரம்மாக்கள்-பதவிகளின் தலைஎழுத்தை அழித்துப் படைக்கின்ற விசுவ ரூப வேலைக்காரர்கள்' என எழுத்தாளர்களைப் பற்றி எழுதும் இவரது புதுக் கவிதைகளை, அந்த வகையில் நாட்டமுடையோர் அனைவரும் படித்து மகிழலாம்.

**அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரேசா**

ஆசிரியர்: கே. பி. நீலமணி
வெளியிட்டோர்:
காயத்ரி பப்ளிகேஷன்ஸ்,
26, வேதாசல கார்டன்ஸ்,
மந்தைவெளி, சென்னை-600028
விலை ரூ. 6-75

நேரு பிறந்தநாள் வெளியீடாக வந்த இந்த அருமையான நூல், குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் முதல் பரிசான ஏ. வி. எம். அறக்கட்டளையின் தங்கப் பதக்கம் பெற்ற பெருமை உடையதாகும்.

அன்புப் பணிக்கென நோபல் பரிசு பெற்ற மாதர்குல மாணிக்கமாம் அல்பேனிய நாட்டு அன்னை தெரேசாவின் வாழ்க்கை வரலாறாகவும், குறிப்பிடத்தக்க அவரது வாழ்க்கை நிகழ்ச்சிகளின் தத்ரூபப் படப்பிடிப்பாகவும் இந்த நூலை உருவாக்கியுள்ளார் ஆசிரியர் கே. பி. நீலமணி, எளிய தமிழில் - பெரியவர்கள் மட்டுமின்றிச் சிறுவர்களும் படித்துப் பயன்பெறும் வண்ணம் நூல் நடை அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

எல்லாத் தரப்பினரும் படித்து இன்புறத் தக்க நூலிது.

**ஒப்புமை ஒளியில் வள்ளுவம்**

ஆசிரியர்: டாக்டர்
கு. மோகனராசு
வெளியிட்டோர்:
வள்ளுவர் கழகம்,
69, வேங்கட ரங்கம் பிள்ளைத் தெரு, சென்னை-600 005
விலை ரூ. 4.

கன்பியூசியசும் வள்ளுவரும் கண்ட நட்பியல் சிந்தனைகள், முப்பால் உவமைகள், வாய்மை, பொருள் விளக்கம், பாவேந்தரின் 'மணிமேகலை வெண்பா'வில் வள்ளுவமும் தமிழும், தொல்காப்பிய உவமவியல் காட்டும் உவம உருபுகள் - சில ஐயங்கள் ஆகிய ஐந்து தலைப்புகளின் கீழே அற்புதமான ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தொகுத்தளித்திருக்கிறார் நூலாசிரியர்.

தொல்காப்பியமே ஆனாலும், அதன் சிறப்பினைக் கூறுவதோடன்றி, அதில் தமக்குள்ள ஐயப்பாடுகளையும் சுட்டிக் காட்டுவது ஆசிரியரின் ஆராய்ச்சித் திறனை விளக்குவதாக உள்ளது.

தமிழறிந்தாரெல்லாம் படித்துப் பயன் பெறலாம்.

—இல. இராசேந்திரன்.

# மின்னலடிக்கும் ஸூப்பர் ரின் வெண்மை...



## ...இதர, டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.

பார்வைக்கு தப்பவே தப்பாத வெண்மை உங்கள் துணிகளுக்கு—வேளை தவறாத ஸூப்பர் ரின் சலவையின் வெண்மையே தனி. இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சுவது ஸூப்பர் ரின் வெண்மை. காரணம், மிகுந்த வெளுக்கும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின்.




**நீங்களே கண்டுகொள்வீர்கள்**

இதை வெளுத்தது
வேறுவித
டிட்டர்ஜெண்ட் பார்





இதை
வெளுத்தது
ஸூப்பர் ரின்

<u>அதிக</u>
வெளுப்பூட்டும் சக்தி படைத்தது
ஸூப்பர் ரின்.

ஹிந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லின்டாஸ்-RIN.35-2317 TM

# ஊனமுற்றோர் தொழில் பயிற்சிக் காப்பகம்

பி.எல்.ஆர்

சென்னை, அடையாறில் உள்ள ஆந்திர மகிள சபாவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள தொழிற்பயிற்சி காப்பகக் கட்டடத்தின் திறப்பு விழா சீரும் சிறப்புமாக (22.9.81) நடைபெற்றது. 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 'சி.யு.ஷா, தொழிற் பயிற்சிக் காப்பகம்' என்ற அந்தக் கட்டடத்தை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்.

விழாவிற்கு, மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் தலைமை தாங்கினார்.

உடற்பயிற்சிப் பயில்கத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. எச்.வி. ஹண்டே அவர்கள் திறந்துவைத்தார்.

முன்னாள் மத்திய நிதியமைச்சரும், ஆந்திர மகிள சபாவின் தலைவருமான டாக்டர் திரு சிந்தாமணி தேஷ்முக் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இவ் விழாவில் - ஆரம்பச் சுகாதார மருத்துவ மையங்களின் இயக்குநர் டாக்டர் திரு பி.ஆர். பாலகிருஷ்ணன் அவர்கள் விழாமலரை வெளியிட்டார்.

டாக்டர் திருமதி விசாலாட்சி நெடுஞ்செழியன், டாக்டர் திரு சஞ்சீவி முதலான பலரும் வருகை தந்த இவ்விழா மண்டப வாயிலில் உதவி இயக்குநர் செல்வி பி. சாவித்திரி அவர்கள் அனைவரையும் இன்முகங் காட்டி வரவேற்றார்.

**வரவேற்புரை**

ஆந்திர மகிள சபாவின் மருத்துவக் குழுத் தலைவரும், முடநீக்கு இயலில் புகழ்பெற்றவருமான டாக்டர் திரு எம். நடராஜன் அவர்கள் தனது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:

''ஊனமுற்றோர் காப்பகங்கள் கட்டப்படுவதுண்டு. ஆனால் இங்கே கட்டப்பட்டிருப்பது ஊனமுற்றோர் தொழில் பயிற்சிக் காப்பகம் ஆகும். ஊனமுற்றவர்கள் சமுதாயத்திற்குப் பாரமாக இருக்கக்கூடாது; பயன்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயே இந்த அமைப்பு துவக்கி வைக்கப்படுகிறது. 1959-60ல் ஆந்திர மகிள சபாவுக்காக இடம் வாங்கப்பட்டதிலிருந்து தமிழக அரசு இந்த அமைப்புக்கு படிப்படியாகப் பேருதவி புரிந்துவருகிறது. உடல் ஊனமுற்றோர் ஆண்டான இந்த ஆண்டில், ஊனமுற்றோர் நலன்கருதி, தமிழக அரசு 80 இலட்சம் ரூபாய்க்கு மேல் ஒதுக்கியிருக்கிறது. வேறெந்த மாநில அரசும் இப்படி நிதி ஒதுக்கியதில்லை. ஊனமுற்றோர் வாழ்வு வளம் பெற, இப்படி



அரசு மட்டுமே முயன்றால் போதாது; பொது மக்களும் உதவ முன்வரவேண்டும்.

டாக்டர் திரு எம். நடராஜன் அவர்கள் இவ்வாறு உரையாற்றிய பின்னர், ஆந்திர மகிளசபா தொழிற்பிரிவின் இயக்குநர் திருமதி அக்கம்மா கிருஷ்ணமூர்த்தி அவர்கள், புதிய கட்டடத்தின் பயன் பற்றிய சுருக்க அறிக்கை படித்தார்.

நிர்வாக இயக்குநர், டாக்டர் திரு சி.ஏ.கே. சண்முகம் அவர்கள் உடற்பயிற்சிப் பயிலகம் பற்றிய விவரங்கள் குறித்துப் பேசினார்.

டாக்டர் சிந்தாமணி தேஷ்முக் அவர்கள், தன்னுடைய மனைவியார் திருமதி துர்காபாய் அவர்கள் உடல் நலிந்தோர்பால் கொண்டிருந்த அக்கறை-பொதுச் சேவையில் காட்டிய ஆர்வம் ஆகியவை பற்றி குறிப்பிட்டார்.

**மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்**

ஊனமுற்றோருக்கான உடற்பயிற்சிப் பயிலகத்தைத் துவக்கி வைத்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் திரு எச்.வி. ஹண்டே, அவர்கள் பேசியதாவது:

''தமிழக அரசு ஆண்டுதோறும் எம்.பி.பி.எஸ். டாக்டர்களை ஆயிரத்துக்கு மேலும், எழுபத்தைந்து சித்தவைத்திய மருத்துவர்களையும், இருபது ஓமியோபதி டாக்டர்களையும் உருவாக்கி வருகிறது. ஏராளமாக இப்படி மருத்துவர்களைத் தயார் செய்கிறோமே தவிர, மருத்துவர்களுக்கு உதவிகரமாக இருப்பவர்களை அந்த அளவுக்கு உருவாக்குவதில்லை.

''இப்போது நாம் ஆண்டுதோறும் ஏறத்தாழ 650 நர்சுகளைத்தான் உருவாக்கி வருகிறோம். முன்பு 350 ஆக இருந்தது இது. இப்போது உயர்த்தியிருப்பதும் போதாது; இன்னும் இரண்டு மடங்கு ஆக்கியாக வேண்டும். ஏனென்றால், டாக்டர்கள் மருந்துகளை எழுதித்தருவதோடும், முறைகளைச் சொல்லுவதோடும் நின்று விடுவார்கள். ஆனால், அதை நடைமுறைப் படுத்துகிறவர்கள் நர்சுகளே அல்லவா!

''இப்படிப்பட்ட உதவியாளர்களையும், உடற்பயிற்சி மூலம் நோய் நீக்குபவர்களையும் நாம் அதிகம் உருவாக்கியாகவேண்டும். நம்முடைய நாட்டைப் பொருத்தவரை என்பதுகூட அல்ல; அகில இந்திய ரீதியிலேயே இதை நாம் சொல்ல வேண்டியுள்ளது.

**செய்தி-அறநிலையத்துறை அமைச்சர்**

மாண்புமிகு செய்தி -அறநிலையத்துறை அமைச்சர், திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் ஆற்றிய உரை விவரம் வருமாறு:

''1958ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்ட இந்த அமைப்பு இன்று பல சிறப்பான சேவைகளைச்செய்து புகழோடுவளர்ந்து வருகிறது. துர்காபாய் தேஷ்முக் அவர்கள் பட்ட பாட்டுக்கு இந்த இனிய விழா ஒரு நல்ல சாட்சி.

''ஒரு ஆண் புகழ் பெற ஒரு பெண் காரணமாகிறாள் என்று உலக வழக்கு ஒன்று உண்டு. டாக்டர் சிந்தாமணி தேஷ்முக் அவர்கள் இன்றைய தினம் புகழ் பெற்றவராக விளங்குகிறாரென்றால், அதில் அவரது துணைவியார் திருமதி துர்காபாய் தேஷ்முக் அவர்களுக்கும் பெரும் பங்குண்டு

''இந்த அமைப்பின் செயலாளர் திருமதி அனுமந்தராவ் அவர்கள் இங்கே வர இயலாத நிலையில் உடல் நலிவுற்றிருப்பதாகச் சொன்னார்கள். அவரைப் போன்ற தாய்மார்கள்தான் - சகோதரிகள்தான் இவ்வாறான நிறுவனங்களைக் கட்டிக் காப்பதில் முன் நிற்கிறார்கள். அவர்களை நாம் பாராட்டியே ஆக வேண்டும்.

''முன் ஜென்மத்தில் செய்த பாவபுண்ணியங்களுக்கு ஏற்பவே இந்த ஜென்மத்தில் மனிதப் பிறப்பு அமைகிறது என்ற கருத்தை நம் பெரியவர்கள் தெரிந்தோ தெரியாமலோ பரப்பி விட்டார்கள். கர்ப்ப காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய உணவு முறைகள், அனுசரிக்க வேண்டிய விதிமுறைகள் ஆகியவற்றின்படி தாய்மார்கள் நடக்கத் தவறுவதே இவ்வாறான பிறப்புகள் அமையக் காரணம் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியத்தில் நாம் இருக்கிறோம்.

''ஊனமுற்ற குழந்தைகளும் உலகு மெச்ச வாழ முடியும் என்பதைச் சவால்விட்டு மெய்ப்பித்து வரும் இவ்வாறான அமைப்புகளுக்கு நாம் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு உதவ வேண்டும். அப்போது தான் மனிதர்களாக வாழ்கிறோம் என்ற இலக்கணத்திற்கு நாம் உட்பட்டவர்களாவோம்!''

**நிதியமைச்சர்**

'சி.யு.ஷா. தொழிற் பயிற்சிக் காப்பகக் கட்டடத்'தைத் திறந்து வைத்து, மாண்புமிகு நிதியமைச்சர், டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசியதாவது:

''இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர், நாடு பொருளாதார மேம்பாடு அடையத்தக்க வழிமுறைகளைக் கண்ட நிதியமைச்சர்கள் வரிசையில்-ஆர். கே.சண்முகம் செட்டியார், ஜான் மத்தாய் இருவருக்கும் பிறகு பொறுப்பேற்று நிதி நிலையைத் திறம்பட நிர்வகித்த திறமையாளர் டாக்டர் சிந்தாமணி தேஷ்முக் அவர்கள். அங்கே அவர் நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கும் போதெல்லாம், கடைசியாக ஒரு திருக்குறளைச் சொல்லித்தான் முடிப்பார்.

''அப்படிப் பட்ட பெருமையாளரான அவர், இந்த அமைப்பின் தலைமைப் பொறுப்பேற்றுச் சமுதாயப் பணியாற்ற முன்வந்தது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

'ஊனமுற்றோருக்கு உதவி செய்யும் உணர்வை நாமெல்லாம் பெறவேண்டும்.

''இந்த ஊனமுற்றோர் ஆண்டில்-நம்முடைய அரசு, ஆயிரம் பேருக்கு மூன்று சக்கர வண்டி, ஐநூறு பேருக்கு காதுகேட்கும் கருவி, முதியவர்களுக்கு உதவித் தொகை,தொழிலகங்களில்வேலை வாய்ப்பு எனப் பலவகையிலும் உடல் நலிந்தவர்களின் ஏற்றம் கருதிப் பெரிதும் உதவி வருவதை நாடறியும்.

''ஊனமுற்றவர்களின் நலன் காக்கும் இப்படிப்பட்ட அமைப்புகளுக்கு, சமூக நலத்துறையுடன் ஆராய்ந்து எந்த வகையில் உதவ முடியுமோ அந்த வகையில் உதவ அரசு எப்போதும் தயாராகஇருக்கிறது!''

—இவ்வாறு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசினார்.

இவ்விழாவில் - தமிழ்த்தாய் வாழ்த்தும், நாட்டுப் பண்ணும் உடல் ஊனமுற்ற மாணவிகளாலேயே பாடப்பட்டன. அவர்களே விழாவுக்கு வருகை தந்த மாண்புமிகு அமைச்சர்களுக்கும் மற்ற முக்கியஸ்தர்களுக்கும் மாலை அணிவித்தனர்.

விழாத் தொடக்கத்தில் -அண்மையில் இயற்கை எய்திய திருமதி துர்காபாய் தேஷ்முக் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் ஒரு நிமிட அமைதி கடைப்பிடிக்கப்பட்டது.

விழா முடிவில் திருமதி சரோஜினி இராமசாமி அவர்கள் நன்றி கூறுகையில், விழா மலரைச் சிறப்புறத் தயாரித்த உதவி இயக்குநர், செல்வி பி. சாவித்திரியைப் பெரிதும் பாராட்டினார்.

# வனவிலங்கு வார விழா!



கடந்த 26 ஆண்டுகளாக ஒவ்வொரு அக்டோபர் மாதத்திலும் முதல் வாரத்தில் வனவிலங்கு வார விழாவை விமரிசையாகக் கொண்டாடி வருகிறோம். இவ்வாரத்தில் வனவிலங்குகளைப் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவைகளால் நமக்கும் நம் நாட்டிற்கும் கிடைக்கும் நன்மைகள்ளையும் பொதுக் கூட்டங்கள் நடத்தியும் திரைப்படங்கள், பேச்சுப்போட்டிகள்,ஓவியம் மற்றும் புகைப்பட கண்காட்சிகள், கட்டுரைகள், கவிதைகள் மூலமாகவும் வலியுறுத்தி விளக்கி வந்துள்ளோம்.

இவ் விழாக்களினால் வனவிலங்குப் பாதுகாப்பு மற்றும்பராமரிப்பிற்காக நடைமுறையில் என்னென்ன பயன்கள் ஏற்பட்டுள்ளன என்று ஆராய்வது பொருத்தமாக இருக்கும். வேட்டையாடுவதற்கென்றே படைக்கப்பட்டவை வனவிலங்குகள் என்றும் இவை மனிதனின் எதிரிகள் என்றும் பரவலாக ஒரு கருத்து நிலவி வந்திருந்தது. கடந்த பத்தாண்டுகளில் இந்நிலை மாறி பள்ளிச் சிறுவர்களிலிருந்து பாமரர்கள் வரை வனவிலங்குகள் மனிதனின் நல்வாழ்வுக்கு மிகவும் தேவை என்பதை உணர்ந்துள்ளார்கள். இவ்விழிப்புணர்ச்சிக்கு வனவிலங்கு வார விழாக்கள் வெகுவாக உதவியுள்ளன. பொழுது போக்கிற்காகவும், உணவிற்காகவும், சொந்த லாபத்திற்காகவும் விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடி அழிப்பது வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு சமயத்தில் வேட்டையாடுவதிலேயே பெருமை கொண்டிருந்த பல பேர் இன்று வனவிலங்குப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பையே தங்கள் கொள்கையாக்கிக் கொண்டுள்ளார்கள். வலவிலங்கு பாதுகாப்பிற்கும் பராமரிப்பிற்கும் மக்களிடையே இம்மனப்பான்மையை வளர்க்க வேண்டியது இன்றியமையாததாகும்.

19-ம் நூற்றாண்டிலிருந்தே நம் மாநிலத்தில் யானை மற்றும் குறிப்பிட்ட சில விலங்குகள் மற்றும் பறவைகளைப் பாதுகாக்க சட்டங்கள் இயற்றப்பட்டு வந்தன. பாதுகாக்கப்பட்ட அரசு வனங்களில் வேட்டையாட விதிமுறைகளும் வகுக்கப்பட்டன. இவைகளினால் அரசு வனங்களில் வனவிலங்குகளுக்கு ஓரளவு பாதுகாப்பு இருந்தது. ஆனால் 1972ல் தான் நாடு தழுவிய வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. இதனால் பாதுகாக்கப்பட்ட காடுகளில் மட்டுமல்லாது அவைகளுக்கு வெளியிலும் வனவிலங்குகளை வேட்டையாடுவது கட்டுப்படுத்தப்பட்டது. இச் சட்டத்தில் விலங்குகளை இனம் வாரியாகப் பிரித்து, அழியும் தறுவாயிலிருக்கும் பலஇனங்களுக்கு சிறப்புப் பாதுகாப்பு அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. சில இனங்களை வேட்டையாடுவது முழுமையாகத் தடுக்கப்பட்டுள்ளது. சட்ட விதிகளை மீறுபவர்களுக்கு கடும் தண்டனைகளும் விதிக்கப்பட்டுள்ளன. வனவிலங்குகளின் தோல், தந்தம், கொம்புகள், மாமிசம் இவைகளை வைத்து வியாபாரம் செய்வதிலும் கட்டுப்பாடுகள் உள்ளன. கண்மூடித்தனமாக வேட்டையாடி வந்ததால் பல விலங்கினங்கள் அழிவதை முதலில் தடுக்க இச்சட்டம் உதவியது.

அழிவைத் தடுப்பதோடு நில்லாது அவைகளைப் பாதுகாத்துப் பராமரிக்க பல வனவிலங்குச்

**கி. வெங்கடகிருஷ்ணன்,**
**ஐ. எப். எஸ்.**
**கூடுதல் வனத்துறைத் தலைவர்,**
**சென்னை.**



சரணாலயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் இன்று ஏழு வனவிலங்குச் சரணாலயங்கள் உள்ளன. இவைகளில் கிண்டியிலிருக்கும் சரணாலயம் ஒரு தேசியப் பூங்காவாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் முண்டந்துறையில் பெரிய புலிக்கென்றே ஒரு சரணாலயமுள்ளது. இதே போல் நீர்ப்பறவைகளுக்கென்று வேடந்தாங்கலிலும், சிங்கவால் குரங்கிற்கென்று களக்காடு பகுதியிலும், வெளிமானுக்கு வேதாரண்யத்திலும் சரணாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. முதுமலை, ஆனைமலை ஆகிய இடங்களிலுள்ள சரணாலயங்களில் பெரியபுலி, சிறுத்தை, காட்டெருமை, கடமான், புள்ளிமான், கேளையாடு, வரையாடு, பல வகைக் குரங்குகள், யானை இவைகள் தவிர பலவிதமான விலங்கினங்களைப் பார்க்கலாம். நீலகிரி மலையில் வரையாடுகளுக்கென்றே ஒரு சரணாலயம் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இச் சரணாலயங்களில் வேட்டையாடுவது அறவே தடுக்கப்பட்டுள்ளதால் விலங்குகளும் பறவைகளும் பயமின்றி உலவுகின்றன. அதனால் இவைகளை நெருங்கிப் பார்க்கவும் முடிகிறது. மனிதனை, தன்னைக் கொல்ல வரும் வேட்டைக்காரனாகவே பார்த்து வந்த இவ்விலங்கினங்கள் இன்று புதிய நோக்குடன் அவனைப் பார்க்கின்றன. பல விலங்குகள் நாம் தொட்டு விளையாடக்கூடிய அளவுக்கு கிட்ட நெருங்கிப் பார்க்கலாம். வேட்டைக்காரர்களும் வசதியுள்ளவர்களும் மட்டுமே போக முடிந்த பல இடங்களில் இன்று எல்லோருமே சென்று, தங்கி விலங்குகளைப் பார்த்து மகிழத் தேவையான வசதிகள் தமிழ்நாடு வனத்துறையினரால் செய்யப்பட்டுள்ளன. இவ்வசதிகளைப் பெருக்கவும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

விலங்குகளுக்களிக்கப் பட்ட பாதுகாப்போடு நின்று விடாமல் அவைகளைப் பராமரிக்கவும் வனத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. விலங்குகளுக்குத் தேவையான புல் பூண்டுகள், பழவகை மரங்கள் இவைகளைப் பாதுகாத்து தேவையான இடங்களில் இம்மரவகைகளை உற்பத்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவைகளுக்குத் தேவையான தண்ணீர் வசதிக்காக சிறிய அணைக்கட்டுகள் (Check Dams) கட்டப்படுகின்றன. வெயில் காலங்களில் இவைகளில் தண்ணீர் தேக்கி வைக்கப்படுகிறது. ஆங்காங்கே அவைகளுக்கு மிகத் தேவையான உப்பு வைக்கப்படுகிறது. இவைகளுக்கு ( Salt licks ) எனப் பெயர். மேலும் இவ்விலங்குகளின் உணவுத் தேவைகளைக் கூர்ந்து கவனித்து அவைகளை உற்பத்தி செய்யவும் இடைவிடா முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.



வனவிலங்குகளைச் சரியாகப் பாதுகாத்துப் பராமரிக்க அவைகளின் எண்ணிக்கை, பழக்க வழக்கங்கள் இவைகளைத் தெரிந்து கொள்ளவேண்டும். மனிதர்களின் எண்ணிக்கையை எடுப்பதுபோல் வனவிலங்குகளின் எண்ணிக்கையும் அவ்வப்பொழுது எடுக்கப்பட்டு வருகிறது. சமீபத்தில் தமிழ்நாட்டிலுள்ள யானைகளின் எண்ணிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன் பெரிய புலிகளின் எண்ணிக்கையும் எடுக்கப்பட்டது. இதேபோல் மற்ற விலங்குகளின் எண்ணிக்கையையும் எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பாதுகாப்பு மற்றும் பராமரிப்புடன் வன விலங்குப் பண்ணைகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இவைகளில் அமராவதி, ஒகேனக்கல், மகின்குடிப் பகுதிகளிலுள்ள வனத்துறை முதலைப் பண்ணைகள் குறிப்பிடப்பட வேண்டியவையாகும். முதலைகளின் முட்டைகளைச் சேகரித்து குஞ்சு பொரிக்கச் செய்து அவைகளை இப் பண்ணைகளில் வனத்துறை பராமரித்து வருகிறது. இப்பண்ணைகளில் இன்று சுமார் 1000 முதலைக் குஞ்சுகள் உள்ளன.

வனவிலங்குகளைப் பற்றி நாம் தெரிந்துகொண்டுள்ளது கைமண்ணளவுதான். தெரிய வேண்டியது கடலளவுள்ளது. இவைகள் குறித்து ஆராய்ச்சி செய்ய பல்கலைக் கழக மாணவர்களுக்குத் தேவையான நிதி வசதியும் மற்ற வசதிகளும் செய்து கொடுக்க வனத்துறை சிறு அளவில் நடவடிக்கை துவங்கியுள்ளது. சிங்கவால் குரங்குகள், காட்டெருமை, யானைகள், மான்கள் இவை பற்றிய ஆராய்ச்சிகள் பல இடங்களில் நடந்து வருகின்றன.

அரசைத் தவிர வனவிலங்குப் பாதுகாப்பிற்கென்று தனியார்களும் பல சங்கங்கள் நிறுவியுள்ளார்கள். திருச்சி, கோவை, திருநெல்வேலி மாவட்டங்களில் இச்சங்கங்கள் அரிய சேவை செய்து வருகின்றன. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கிடையே வனவிலங்குப் பராமரிப்பின் அவசியத்தை பரப்ப இச்சங்கங்கள் பாடுபட்டு வருகின்றன. அரசு வனத்துறையும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கென Wild Life Youth Clubs நடத்தி வருகிறது. இம்மாணவர்களை, வனங்களுக்கு சுற்றுலாவிற்கு அழைத்துச் சென்று விலங்குகளை இயற்கைச் சூழ்நிலையில் பார்க்க வசதிகள் செய்துகொடுத்தும் விலங்குகள் குறித்த தகவல்களை அளித்தும் இவ்வமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. அண்மையில் வனவிலங்குப் பராமரிப்புக்கெனவே ஒரு தலைமை வனப் பாதுகாவலரை அரசு நியமித்துள்ளது. வனவிலங்குச் சரணாலயங்களின் பராமரிப்புக்காக மத்திய அரசும் ஏராளமாக நிதி உதவியளிக்க முன் வந்துள்ளது.

எல்லாவற்றுக்கும் மேல் வண்டலூரில் 300 ஹெக்டர் பரப்பில் நவீன வசதிகள் கொண்ட ஒரு மிருகக் காட்சி சாலை அமைக்கப்பட்டு வருகிறது. இங்கு பல வகையான விலங்குகள், பறவைகள் மற்றும் ஊர்வனவைகளை இயற்கைச் சூழ் நிலைகளில் கண்டுகளிக்க வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. அயல் நாடுகளிலிருந்தும் பல மிருகங்கள் இறக்குமதி செய்து இங்கு பராமரிக்கப்படும். இது அமைக்கப்படும் வண்டலூர் காப்புக் காட்டை அழகுபடுத்தவும், சுற்றுச் சூழ்நிலையைச் சீர்திருத்தவும் மரம் நடவும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவருகின்றன. இவ்விலங்கினங்களைப் பற்றிய விவரங்களை எளிய முறையில் எல்லோரும் தெரிந்து கொள்வதற்கு வேண்டிய வசதிகளும் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. நம் நாட்டிலேயே மிகவும் நவீன வசதிபடைத்த ஒரு மிருகக்காட்சாலையாக இது அமையும்.

கடந்த பத்தாண்டுகளில் வனவிலங்குத் துறையில் நாம் அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பார்த்தால் வனவிலங்கு வாரவிழா என்பது ஒரு வாரம் மட்டும் நீடிக்கும் விழாவாக இல்லாமல் ஆண்டு முழுவதும் நமக்கும் நாட்டிற்கும் நல்ல பயன்தரக்கூடிய முறையில் நடக்கும் விழாவாக அமையுமென்று திடமாக நம்பலாம்.



# கிண்டி தேசீயப் பூங்காவும் அதன் வளர்ச்சியும்

கே. கே. சோமசுந்தரம், ஐ.எப்.எஸ். வனவிலங்கு காப்பாளர்.

ஒரு மாநகரத்தின் மத்தியில் ஒரு தேசியப்பூங்கா அமைந்துள்ளது என்றால் அது ஒரு தனிச் சிறப்புத்தான். அப்படி அமையப் பெற்றதுதான் ''கிண்டி தேசிய பூங்கா''. இப்பூங்காவின் மொத்தப்பரப்பு 270.57 ஹெக்டர் தான் என்றாலும் கடற்கரை பிரதேசங்களுக்கே உரியதான ஒரு தனிப்பட்ட காட்டுப்பகுதியாக அமைந்துள்ளது. அழிந்து வரும் மான் இனமாகிய ''வெளிமான் (Black Buck) இங்கு சுமார் முந்நூற்று ஐம்பதும், கண்கவர் புள்ளிகளையும் தோற்றத்தையும் கொண்ட ''புள்ளிமான்'' இனம் ( Spotted Deer ) சுமார் எழுநூறும் இன்னும் பல தரப்பட்ட சிறிய மிருகங்களும், பறவைகளும் இத் தேசியப் பூங்காவில் குடி கொண்டுள்ளன.

புகழ்பெற்ற சென்னை பாம்புப் பண்ணை இப்பூங்காவின் ஒரு பகுதியில் அமைந்துள்ளது. வனத்துறையினரிடம் சுமார் ஒரு ஏக்கர் பரப்பை பாம்புப் பண்ணை நடத்த திரு 'ரோமுலஸ் விடாகர்' என்ற ஆங்கிலேயர் குத்தகைக்கு எடுத்துள்ளார். காந்தி மண்டபம், ராஜாஜி நினைவாலயம் மற்றும் காமராஜ் நினைவாலயம் முதலியவையும் இந்திய தொழில்நுட்பக் கல்லூரியும், ஒரு காலத்தில் இத்தேசியப் பூங்காவின் பகுதியாக இருந்தது.

## பூங்காவின் சரித்திரம்

கிண்டி காடுகளின் முக்கியத்துவத்தை மனதில் கொண்ட தமிழ்நாடு அரசு அதை 1978ல் ஒரு தேசியப் பூங்காவாக அறிவித்தது. 1817-ம் ஆண்டு முதல் கிடைக்கும் இக்காடுகளின் சரித்திரம் படிக்க ஆர்வமூட்டுவதாக உள்ளது. அக்காலத்தில் 'கிண்டி லாட்ஜ்' என்று அழைக்கப்பட்ட 1265 ஏக்கர் கொண்ட இக்காடுகள் அந்நாளில் 'கில்பர்ட் ரிக்கட்ஸ்' என்ற தனிப்பட்ட ஆங்கிலேயர் வசம் இருந்தது. அவர் பட்ட கடன்களுக்காக அவர் இறந்ததும் 1821-ல் அந்நாளைய வங்கி மேற்கண்ட காடுகளை அவரது கடன்களுக்காக எடுத்துக் கொண்டது. பின்னர் நிர்வகிக்க முடியாமல் அதே ஆண்டு பத்தாயிரம் 'பகோடா'க்களுக்கு (ரூ. 35,000-க்குச் சமம்) அரசாங்கத்திற்கு விற்றுவிட்டது.

## மன்றோ பிரபுவின் பெருமுயற்சி

கிண்டி காடுகளை வாங்குவதற்கு பெருமுயற்சி எடுத்தவர் அந்நாளைய கவர்னர் மன்றோ பிரபுதான். இந்நாளைய கோட்டையும், அண்ணாசாலையிலுள்ள 'அரசாங்க எஸ்டேட்டும்' அக்காலத்து ஆளுநர்களின் இருப்பிடமாக இருந்தது. கோட்டையிலிருந்த குடியிருப்பு தலைமைச் செயலகமாக மாற்றப்பட்டதும் ஆளுநருக்கு ஒரு நல்ல ஒதுக்குப்புற இருப்பிடம் தேவைப்பட்டது. ஆகவேதான் கிண்டி காடுகளை மன்றோ பிரபு பெரு முயற்சியுடன் வாங்கினார். 1821முதல் கிண்டி பங்களா ஆங்கிலேய ஆளுநர்களின் தங்கும் இடங்களில் ஒன்றாகியது. ஆனால் தற்போது நாம் காணும் 'ராஜ்பவன்' 1863 ஆம் ஆண்டே நாம் காணும் இன்றைய அமைப்பைப் பெற்றுவிட்டது. ராஜ்பவன் காடுகளின் பராமரிப்பில் அதிக பணம் செலவானதாலும் அதில் ஒரு வித ஆதாயமும் இல்லாததாலும் ராஜபவனின் செலவைக் குறைக்கும் பொருட்டு ஐ.ஜே. ஜான் என்ற ஆளுநர் அவர்களின் உத்தரவின் பேரில் ராஜபவன் வனங்கள் 1958 முதல் வனத்துறைக்கு மாற்றப்பட்டன.

## குழந்தைகள் பூங்கா

கிண்டி தேசியப் பூங்காவின் வடக்குப் பகுதியில் சுமார் 8.8 ஹெக்டேர் பரப்பில் அமைந்துள்ளதுதான் குழந்தைகள் பூங்கா. இதை 1959ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14-ம் நாள் நமது அந்நாளைய பாரதப் பிரதமர் ஜவாஹர்லால் நேரு அவர்கள் துவக்கி வைத்தார்கள். இப்பொழுது இப்பூங்கா நன்கு வளர்ந்து விருத்தியடைந்து பல பொழுது போக்கு அம்சங்களைக் கொண்டதாக விளங்குகிறது. இங்கு பலதரப்பட்ட மிருகங்களும், பிராணிகளும், பறவைகளும் உள்ளன. 'நஞ்சன்' என்ற ஆண் யானையும் ,'அலமேலு' என்ற பெண் யானையும் 'அனுராதா' என்ற அவர்கள் குழந்தையும் (குட்டியானை) பார்ப்போரைக் கவருவதாக உள்ளன. ஆனை மலைக்காடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட நஞ்சனுக்கும், அலமேலுவுக்கும் பிறந்த குட்டி யானை 'அனுராதா' குள்ளமாகப் பிறந்து விட்டாள். ஆகவே அவளை சுமார் மூன்று மாதம் வரை காப்பாற்றுவதற்கு 'அலமேலு' மட்டுமல்ல பூங்கா அதிகாரிகளும்அரும்பாடுபட்டார்கள். ''ஊனமுற்றோர் ஆண்டாகிய'' இவ்வாண்டில் பிறந்த அனுராதாவுக்கு இப்பொழுது ஏழு மாதங்களே ஆகின்றன. குழந்தைகளுடன் நன்கு விளையாடும் இவள் இப் பொழுதுதான் கரும்பு தின்னப் பழகிவருகிறாள்.

கோடிக்கரை சரணாலயத்திலிருந்து கொண்டு வரப்பட்ட ஐந்து குதிரைகளும் (Ponies) அங்கு தன்னிச்சையாகத் திரிந்த காட்டுக் குதிரைகளாகும். கட்டுப்பாடின்றி திரிந்த அவை சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு குழந்தைகளின் சவாரிக்குப் பயன்படுத்தப் படுகின்றன. 'நஞ்சனும் அலமேலுவும் குழந்தைகளையும் பெரியோர்களையும் தங்கள் மீது ஏற்றி பூங்காவைச் சுற்றிக் காண்பித்து மகிழ்விக்கின்றன. 'பாலு' என்கிற கரடி 'ரூபன்' என்கிற சிங்கவால் குரங்கு மற்றும் நீர் நாய்கள், சிறுத்தைகள், காட்டுப் பன்றிகள்,வேடந்தாங்கல் பறவைகள் இன்னும் பல காண்போரை மகிழ்வூட்டுகின்றன. பூங்காவிற்குள் உள்ள குட்டி ரயிலும் குழந்தைகளைப் பூங்காவைச்சுற்றி அழைத்துச் செல்கிறது. மேலும் சறுக்கு விளையாட்டு, ஊஞ்சல் முதலிய பல பொழுதுபோக்கு அம்சங்கள் உள்ளன. குழந்தைகளுக்கு 10 பைசாவும் பெரியோருக்கு 20 பைசாவும் பூங்காவிற்கு நுழைவுக்கட்டணமாக வசூலிக்கப் படுகிறது.

## தேசீய பூங்காவின் தனிச் சிறப்பு

குழந்தைகள் பூங்காவை விட்டு வெளியேறியதும் கிண்டி தேசியப் பூங்காவில் நுழைகிறோம். இங்கு உடன் நம் கண்ணில் படுவது கூட்டம் கூட்டமாகத் துள்ளித் திரியும் புள்ளி மான்களும், சுருள் சுருளான கொம்புகளைக் கொண்ட வெளிமான்களுமே. புள்ளிமான்கள் இருபது முப்பது என்று கூட்டமாகத் திரிகின்றன. ஆனால் வெளிமான்களோ சிறுசிறு கூட்டங்களாகவோ அல்லது தனியாகவ்வா அலலதுஜோடியாகவோ தென்படுகின்றன. அழகான இவ்வகை மான்கள் அழிந்து வரும் ஒரு இனமாகும். இம்மான்களை வேட்டையாடினால் தண்டனை ஆறுமாதம் முதல் ஆறுவருடங்கள் வரை அளிக்கப்படலாம். புள்ளி மான்கள் சுமார் 350ம் வெளிமான்கள் சுமார் 700ம் இங்கு இருப்பதாகக் கணக்கிடப் பட்டுள்ளது. புள்ளிமான்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை கொம்பு விழுந்து முளைக்கும். ஆனால் வெளிமான்களுக்கு ஒரு முறை

## பேரறிஞர் அண்ணா சமாதியில் அவரது பேச்சு ஒலிபரப்பு

"பேரறிஞர் அண்ணாவின் சமாதியின் காலடியில் போய் ஒருவர் நின்றதும், நாடாவில் பதிவு செய்யப்பட்டுள்ள அவருடைய அறிவுரை ஒலிபரப்பப்பட வேண்டும்" என்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் விருப்பப்படி, அண்ணா சமாதியில் அவருடைய பேச்சினை ஒலிபரப்ப ஏற்பாடு செய்யப்பட்டு 9.9.81 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

அண்ணா சதுக்கத்தில் கீழ்க்காணும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன:

1. அண்ணா சதுக்கத்தின் நுழைவாயிலில் இருந்து அண்ணா சமாதிவரை செல்வதற்கு இருபுறமும் அழகிய கூரையிடப்பட்ட நடைபாதை அமைத்தல்.

2. அண்ணா சதுக்கத்தில் ஒரு நூல் நிலையம் அமைத்தல்.

3. சதுக்கத்தின் முன்பகுதியில் சேதமடைந்துள்ள நிலையிலுள்ள கற்தளத்தில் வேறு நல்ல வண்ணக் கற்களைப் புதுப்பித்தல்.

இவை தவிர, அண்ணா சதுக்கத்திற்கு வரும் மக்களுக்குக் குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் குடிநீர் வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மேம்பாடுகள் யாவையும் சுமார் மூன்றரை இலட்சம் செலவில் செய்யப்படவுள்ளன.



முளைத்தால் மீண்டும் விழாது.

**வெள்ளை மான்கள்:** "பவநகர் மகாராஜா" 1946ல் சென்னை மாநில ஆளுநராக இருந்தபோது வெள்ளை நிற வெளிமான்களை இக்காடுகளில் விட்டதாக ராஜபவன் சரித்திரம் கூறுகிறது. இன்றும் ஆறு வெள்ளை நிற வெளிமான்களை இத் தேசியப் பூங்காவில் காண்கிறோம். சுமார் இருநூறு செடி, கொடி, மரங்களைக் கொண்ட இப்பூங்காவில் மரநாய், குள்ளநரி போன்ற பல வகை சிறிய பிராணிகளும் பல வகைப் பறவைகளும் தென்படுகின்றன. இயற்கையாக அமைந்துள்ள இரண்டு குளங்களும் உள்ளன. இங்குதான் மான்கள் தண்ணீர் அருந்துகின்றன. கோடைக் காலங்களில் இக்குளங்களைச் சுற்றி புல் கட்டுகள் போடப்படுகின்றன. புள்ளிமான்கள் நூற்றுக் கணக்கில் வந்து இவற்றை ஆவலுடன் உண்கின்றன.

### தேசீயப் பூங்காவின் நுழைவுக் கட்டணம் முதலிய விவரங்கள்

பெரியவர்களுக்கு ரூபாய் ஒன்றும், சிறியோர்களுக்கு ஐம்பது பைசாவும், சிறிய வாகனங்களுக்கு ரூபாய் ஐந்தும், பெரிய வாகனங்களுக்கு ரூபாய் ஏழும் தேசியப் பூங்காவிற்குள் நுழைவுக் கட்டணமாக வசூலிக்கப்படுகின்றன. புகைப்படக் கேமராக்களுக்கும் திரைப்படக் கேமராக்களுக்கும் வேறு வேறு கட்டணம் உண்டு. இத்தேசியப் பூங்காவில் நுழைந்ததும் பசுமையான தோற்றமும் செடி கொடிகளும் அமையப்பெற்ற இயற்கைச் சூழல் நாம் சென்னை நகருக்குள்தான் இருக்கிறோம் என்பதை மறக்கச் செய்கிறது. சுமார் பத்து கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் தேசியப் பூங்காவிற்குள் எல்லா இடங்களுக்கும் நம்மை அழைத்துச் செல்கின்றன. பறவைகள் பற்றிப் படிக்கவோ, செடி, கொடிகள் பற்றி ஆராய்ச்சி செய்யவோ உகந்த இடமாகிய இத் தேசியப் பூங்காவிற்குள் நுழைந்ததும் நகரின் சப்தம் அடங்கிவிடுகிறது. இப்பெரு நகருக்கு வெளியே நம்மை 'வெகுதூரம்' அழைத்துச் செல்லும் இப்பூங்கா நகரின் மையத்திலேயே அமைந்துள்ளது ஒரு பெரும் வியப்பாகும்.

### தேசீயப் பூங்காவை முன்னேற்றத் திட்டங்கள்

மான்கள் வெளியே போவதைத் தடுக்கவும் தேசீயப் பூங்காவின் பாதுகாப்பை அதிகரிக்கவும் திட்டம் தீட்டிய தமிழக அரசு, தேசீயப் பூங்காவைச் சுற்றியும் கருங்கல் சுவர்எழுப்பி கம்பிவேலி போட அனுமதி அளித்துள்ளது. மேலும் உல்லாசப் பயணிகளுக்காக நோக்கும் தளங்கள் அமைத்தல் ( View Towers ) மற்றும் வாகனங்களின் வசதிக்காக சாலைகளுக்கு தார் போடுதல் முதலிய பல மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும் பயணிகளுக்கு 'தேசீயப் பூங்காவைச் சுற்றிக்காட்ட' 'கைடுகளை' அமர்த்தும் திட்டமும் உள்ளது. இருபத்து ஏழாவது வன விலங்கு வாரம் கொண்டாடப்படும் இந்நாளில் நீங்களும் ஏன் இந்தத் தேசீயப் பூங்காவைச் சுற்றி மகிழக் கூடாது? உடனே புறப்படுங்கள்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்...அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
Sir

Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். ம. 8676

